Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර් | பக்கம் 24 ரூபா 30.00
செப்ரெம்பர் 05 - 11, 2013

# வாரமலர் தினமுரசு



தேசிங்கு ராஜா
திரை விமர்சனம்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1030




ஓமந்தை அசௌகரியங்கள் தளர்வது

# இன்னொரு அரசியல் வெற்றி



# நவிப்பிள்ளை நடத்திய நாடகம்



# சிரியா மீதான அமெரிக்காவின் நடவடிக்கை

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## கற்பூர தரிசனம்

கடவுள் இருக்கும் அறையைக் கருவறை என்று சொல்லுகிறோம். கற்சுவரின் மத்தியில் கொலுவிருக்கும் இறைவனின் திருமேனியும் கல்லினால் செய்திருப்பதால் கரிய நிறத்துடனேயே இருக்கிறது.

வெளிச்சத்தைக் காட்டி கடவுளை முழுமையாகத் தரிசிப்பதற்கு கற்பூர ஒளி நமக்கு உதவுகிறது என்பது பொதுவான விளக்கம். ஆனால் பூரணமான அருள்சக்தி ஒளிவடிவில் இருப்பதால், அந்த ஒளியைக் கற்பூரத்தின் பிரகாசத்தில் காண்கிறோம்.

அதேசமயத்தில் இறைவனது திருமேனியை அங்கம் அங்கமாகத் தரிசிக்கவும் முடிகிறது. மேலும் கற்பூரத்தின் சுடர் அணைந்தவுடன் காற்றில் கலந்து மறைந்து விடுகிறது.

அதுபோல ஒளியாகிய ஞானாக்கினியில் நமது அறியாமை எரிக்கப்பட்டு மறைந்துவிடுவதை கற்பூர தரிசனம் நமக்கு உணர்த்துகிறது.

## "நிறைவுள்ளவர்களாய் இருங்கள்"

ஆன்மீகம்

ஒப்பிடுதல் பகுதியின் இறுதியாக, அதன் உச்ச நிலையாக இப்பகுதி அமைந்துள்ளது. 'பகைவனிடம் வெறுப்புக் கொள்வாயாக' (லேவி 21:24) பழைய ஏற்பாட்டுப் பகுதியை ஒப்பிட்டு, அதற்கு மாற்றாக தன் புதிய போதனையை இயேசு தருகிறார். "உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்." (மத் 5:44)

பகைவர் யார்? என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறார். உங்களைத் துன்புறுத்தும் அனைவரும் உங்கள் பகைவர்கள். அன்புகூர்வதும், இறைவனிடம் வேண்டுவதும் நம் பகைவருக்காக நாம் செய்யவேண்டிய நற்செயல். இச்செயல்களைச் செய்யும் போது, நாம் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்யும் இறைத்தன்மையில் பங்குபெறுகிறோம். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்யும் இறைவனின் பெருந்தன்மையை நம் வாழ்விலும் கடைப்பிடிக்கிறோம்.

இதனால் நாம் குறைந்துபோவதில்லை. முற்றிலும் வேறுபாடான, இறை பண்புதனை நம் வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலம் நாம் மென்மேலும் ஆசிவழிக்கப்படுவோம். குறைந்துபோவதில்லை. எல்லா நிறைவும் உள்ள வானகத்தந்தைபோல நாமும் எல்லாவற்றிலும் நிறைவுபெற்றவர்களாய் இருப்போம்.

## முஸ்லிம் என்பவர்

ஒரு முஸ்லிம் நற்பண்புகளால் நற்பெயர் பெறும்போது அங்கே அவரிடம் பிரதிபலித்திருப்பது தூய இஸ்லாம். நிச்சயமாக ஆயிரம் உபதேசங்களையும், ஆற்றொழுக்கான சொற்பொழிவுகளையும் விட அவரது பண்புகள்தான் மக்களை ஈர்த்தெடுக்கும் தன்மையை பெற்றிருக்கிறது.

இத்தகைய பண்புகள் இலகுக்கு 'வரக்காரணம், அல்லாஹ் அனுதினமும் அவரை அவதானித்துக் கொண்டிருக்கிறான் என்ற உள்ளுணர்வே.

இவ்வாறு இல்லை என்றால் மனம்போன போக்கில் மனோ இச்சைகளின் பிரகாரம் வாழ முற்படுகிறார். அண்ணல் நபியின் அழுதவாக்கு நீ எங்கிருந்தபோதும் அல்லாஹ்வை பயந்து கொள்.

அல்லாஹ்விற்கு அஞ்சிவதால் மட்டும்தான் நற்பண்புகளுடன் நாளும் வாழமுடியும். ஒருவனுடைய பண்பு எடுத்த எடுப்பிலேயே இலேசாக வெளிப்படுத்த கூடியவையல்ல.

பண்புகளை வெளிப்படுத்தும்போது பல சோதனைகள் இடம் பெறலாம். அவற்றை எல்லாம் அல்லாஹ்வுக்காக அவர் பொறுத்துக் கொள்வார். இவரே முஸ்லிம் என்பவர்.

எம்.சி.கலீல், கல்முனை-05

---

கவிதைப்போட்டி இல 1027



## நம்பி வாழவில்லை!

பாராட்டுக்குரியது

ஊனமுற்றோர் என்றால்
உள்ளம் நோகுமென்று
விஷேட தேவையாளர் என்று
விஷேட பெயர் வைத்தனர்
வயிற்றுப்பசி போக்க
வாய்ச்சொல் போதுமா?
உதவிக்கரங்கள்
ஊனக்கரங்களாய் இருப்பதால்
விறகேனும்
வியாபாரம் செய்து
உப்புக்கஞ்சி குடித்தாலும்
உழைத்து வாழ்கிறார்
அடுத்தவரை நம்பி வாழவில்லை!
அடுத்தவருக்கு நம்பிக்கை
வரவழைக்க வாழ்கிறார்
சோம்பேறிகளுக்கு பாடம் போல்
இருக்கும்

A.பாரிஸ்,
மிகிந்தலை.




## கவிதைப் போட்டி இல 1030



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தாளொன்றின் மட்டும் எழுதிஅனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16.09.2013

கவிதைப் போட்டி இல. 1030 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### பொருளாதாரம்

முதுமை யானாலும்
சுமை இழுத்தால்தான்
மூன்றாவது வேலை
வயிறாவது பசியாறும்.

எஸ்.பி.பாலமுருகன், பதுளை

### உழைப்பு

அங்க ஊனத்தோடு
அலைந்து திரியவில்லை
உழைப்பின் மேன்மையை
உணர்த்தப் புறப்பட்டேன்
உழைத்து வாழவேண்டும்
பிறருழைப்பில் வாழ வேண்டாம்.

எம்.சி.கலீல். கல்முனை 05

### தடையா?

மிதிவண்டியோட்ட
ஒரு காலற்ற நிலை
என்ன தடையா?
இல்லவே இல்லை.... நான்
கையில் கோல் ஏந்திவிட்டால்
மின்னலென என் வண்டி
சுமையோடு
விரைந்தோடும்.

அ.சந்தியாகோ. கண்டி

### ஊனம்



உள்ளத்தில்
ஊனம் உள்ளவன்
பிச்சை எடுக்கின்றான்
உடம்பில் ஊனம்
உள்ள நான்
யாருக்கும் சுமையாகாமல்
இறுதிவரை ஊனத்துடன்
உழைத்து வாழ்வேன்.

யோ.சறோ, கரணவாய் மேற்கு.

### வித்தைக் காரர்!

இவர்
முதியவரானாலும்
முடவர் – தன்
மூளையைக் கொண்டு
காலை யாக்கிச்
சுகமாய் வாழச்
சுயமாய் உழைக்கிறார்!
சுய மானங்
கை விடாற்குத்
தன் மானந்
தடி யாகிக்
கால் கொடுக்கும்
வித்தைக் காரனுக்குச்
சோத்தை தெரியாது!

## உங்கள் பக்கம்

### கவனிக்கப்படுவார்களா?

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அடம்பன் சோலை என்னும் பிரதேசத்தில் சிறுபோகச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

உரிய காலத்தில் உரவகைகள் கிடைக்காமை வாய்க்கால்கள் சீர் செய்யப்படாமையினால் உரிய முறையில் நீர் வசதி பெற்றுக்கொள்ள முடியாமையே இந்த நஷ்டத்திற்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது.

அத்துடன் களைகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பாவிக்கத் களை நாசினிகளும் சீறந்த முறையில் செயற்படவில்லை என்றும், அதிக வெப்பம் காரணமாக சடையன் நோய் தாக்கம் செலுத்தியதாலும் எதிர்பார்த்த அளவில் விளைச்சலைப் பெறமுடியாமல் குறித்த பகுதி மக்கள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

வன்னிப் பிரதேசத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் நடை பெற்றுவருவதாக செய்திகள் வருகின்றபோதிலும் குறித்த பிரதேசத்தில் அமைந்துள்ள 236 வயற்காணிகளுக்கும் அங்கு வாழ்கின்ற மக்களுக்கும் எதுவித அபிவிருத்திகளும் இன்னும் கிடைக்கவில்லை.

இதுதொடர்பில் பல்வேறு அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்திய போதும் எவரும் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. எனவே உங்கள் பக்கம் ஊடாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவருகின்றோம்.

கே.முத்தையா,
கிளிநொச்சி.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:– 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :–0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


## எனது பேரவா!

தனக்கென தனியிடத்தை தக்கவைத்துக் கொண்டிருக்கும் முரசுக்கு எனது வாழ்த்துக்கள். சில விஷயங்களை கையாளும்விதம் எனக்கு மிகவும் பிடிக்கும். பல ஆண்டுகளாக வாசகன் என்றரீதியில் பல நிறைகுறைகள் உண்டு.

காலத்தால் செல்லமுடியாத அற்புத படைப்புக்களை அற்புதராஜா தந்திருந்தார். அவரின் பாணியிலேயே படித்து பழகிவிட்ட எனக்கு அற்புதனின் மறைவுக்குப்பின் அந்த இடைவெளியை நிரப்புவதற்கு கஷ்டம்தான். அவரின் அறிவுஞானத்தை ஒருவராலும் அழிக்கமுடியாது.

ஆனாலும் முரசு அதில் கால்வாசியையாவது நிரப்புகின்றது என்று நினைக்கும்போது சந்தோசமாக உள்ளது. முரசு மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென்பதே எனது பேரவா.

எம்.குமரன், வத்தளை.




## வரவேற்பு!

பல சவால்களுக்கு மத்தியில் வீறுநடை போட்டுவரும் முரசுக்கு பல சபாஷ்!

லேடீஸ் ஸ்பெஷல், விளையாட்டு, பாப்பா முரசு, 24 ஆம் பக்கத்தில் வரும் வித்தியாசமான பல தகவல்கள், பிரமிப்பூட்டுபவையாகவும், ஆச்சரியப்பட வைப்பவையாகவும் இருக்கின்றது.

நான் எழுதிய நான்கு கதைகள் தின முரசில் வெளிவந்துவிட்டது. ரொம்ப நன்றி... நன்றி...

வ.குணபாலசிங்கம், நல்லூர்.

## உண்மை

தினமுரசில் வரும் பக்கங்கள் எல்லாவற்றையும் அலசிவிடுவேன். அரசியல் தொடங்கி அறிவியல் வரை அத்துப்படி. முரசில் வித்தியாசமான தகவல்களை வழங்கலாமே. பாப்பா முரசு தகவல்கள் அருமை அருமை. அத்தகவல்கள் பிரமாதமாக உள்ளது. இதையே பல வாசகர்களும் எதிர்பார்க்கிறார்கள்.

மீண்டும் அதிரடி அய்யாத்துரை பட்டையைக் கிளப்புகிறார். சமூகத்தில் இடம்பெறும் பிரச்சினைகளை இவ்வாறு அய்யாத்துரையார் எடுத்துக் கூறியது உண்மைக்கு உண்மை.

சினி விசிட் சூப்பர். முரசில் இடி அமீன் தொடரை ஆரம்பித்துள்ளீர்கள். மீண்டும் இடி அமீன் பற்றிய அறிய இன்னொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. அவனைப் பற்றி தெரியாத பலர் இருக்கிறார்கள். முரசு அதை மீண்டும் மறுபிரசுரம் செய்தமை வரவேற்கத்தக்கது. இன்னும் தினமுரசு புதிய பல தகவல்களை தரவேண்டுமென்பதே எனது விருப்பமாகும்.

ஆர்.அம்ருதன்,காலி



# இனிவரும் காலங்கள் டக்ளஸ் யுகம்

## வட மாகாணசபை வேட்பாளர் சுந்தரம் டிவகலாலா



தமிழர் அரசியலில் தீர்க்கதரிசனம் மிக்க தலைவராக இருக்கின்ற கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களை பலப்படுத்த வேண்டியது இன்றைய காலத்தின் தேவையென வட மாகாணசபை வேட்பாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்தார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள வட மாகணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடுகின்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களின் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், இன்றைய அரசியல் நிலவரங்களை பல வருடங்களுக்கு முன்னரே மிகவும் துல்லியமாகக் கணிப்பிட்டு எச்சரிக்கை விடுத்திருந்த பெருமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையே சேரும். இவ்வாறான ஒரு தலைவரின் தேவை இன்று தமிழ் மக்களால் உணரப்பட்டுவருகின்றது. எனவே எதிர்வரும் காலங்கள் டக்ளஸ் யுகமாகவே இருக்கும்.

அவ்வாறானதொரு சூழலில் இந்த வடபகுதி மக்கள் அனைத்துவிதமான வாழ்வாதார மேம்பாடுகளையும் பெற்று ஒரு கௌரவமான பிரஜைகளாக வாழும் வழி உருவாக்கப்படும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் அமைப்பாளரும் மாகாணசபைத் தேர்தலில் 17 ஆம் இலக்கத்தில் போட்டியிடுபவருமான சிவகுரு பாலகிருஷ்ணனினால் (ஜீவன்) ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், ஈ.பி.டி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகன் குகேந்திரன், ஈ.பி.ஆர்.எல்.எவ் செயலாளர் நாயகம் சுகு சிறிதரன், மற்றும் வேட்பாளர்களான சி. தவராசா, கமலேந்திரன், ஞானசோதி சிறிதரன்ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# அனர்த்தங்கள் கூடிய மாவட்டம் மட்டக்களப்பு

இலங்கையில் இயற்கை அனர்த்தங்கள் கூடிய மாவட்டங்களில் இரண்டாவது மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் உள்ள தென மட்டக்களப்பு மாவட்டத் திட்டமிடல் பணிபாளர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனர்த் தங்களை குறைப்பதற்கான வேலைத்திட் ட்மாக கிராம மட்டத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான வதிவிட பயிற்சிச் செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அனர்த் தங்களை குறைப்பதற்கான முகாமைத்துவ அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் இப்பயிற்சிச் செயலமர்வு மட்டக் களப்பு மியானி மண்டபத்தில் நடைபெற்றது.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், இலங்கையில் இரண்டாவது அனர்த்த மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் உள்ளது. எந்த நேரத்திலும் இயற்கை அனர்த்தத்தை சந்திப்பதற்கு நாம் தயாராக இருக்கவேண்டும். அதற்கான முன் ஆயத்தங்களும் நம்மிடம் இருக்கவேண்டும். இந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை அனைத்து மட்டங்களிலும் மேற்கொள்ளவேண்டும்.

அனர்த்தங்கள் ஏற்பட்டுவிட்டால் அரசாங் கமே உதவி செய்யவேண்டியுள்ளது. அனர்த்தம் ஏற்பட்டுவிட்டவுடன் கிராம உத்தியோகத்தரையும் பிரதேச செயலாளரையுமே மக்கள் தேடுகின்றனர். அனர்த்தங்களை குறைப்பதற்கான முகாமைத் துவத்தை மேற்கொள்வதற்கு பொதுமக்களின் பங்களிப்பு மிக முக்கியம்.

அனர்த்தங்களை குறைப்பதற்கான முகாமைத்துவ அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் அனர்த்த குறைப்புக்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது கிராம மட்டத்தில் அனர்த்தம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன்மூலம் அனர்த் தத்தை குறைப்பதற்கும் முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கும் இது உதவியாக அமையும் என்றார்.

இதற்கான ஆரம்ப நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜன், செங்கலடி பிரதேச செயலாளர் எஸ்.உதயசிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## புகைப்பிடிப்பதால் மரணம் அதிகரிப்பு

இலங்கையில் புகைத்தல் காரணமாக ஒரு நாளில் மட்டும் 54 பேர் மரணமடைவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறாக வருடம் ஒன்றிற்கு 20,000 பேர் வரையானோர் உயிரிழப்பதாகவும் அவ் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

புகைத்தலுக்காக இலங்கை பிரஜைகள் நாள் ஒன்றுக்கு 210 மில்லியன் ரூபாவை செலவிடுகின்றனர்.

புகைத்தலினால் ஏற்படும் நோய்களுக்கு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்களுக்காக 12,000 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாகவும் அவ் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை 8 வகையான புற்று நோய் மற்றும் கண் பார்வை கோளாறு என்பன புகைத்தலினால் ஏற்படுவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



# பாசப் போராட்டம்!

சிரியாவில் நடந்த இரசாயனத் தாக்குதலில் இறந்தவிட்டதாக நினைத்த தனது மகன் உயிருடன் கிடைத்த சந்தோசத்தில் அவனை ஓடிவந்து கட்டித் தழுவி அழும் தந்தையின் வீடியோ யூ டியூப்பில் பிரபலமாகியுள்ளது.

சிரியாவில் அண்மையில் நடந்த இரசாயனத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 1,200 அப்பாவி மக்கள் பரிதாபமாக உயிர் இழந்தனர். இந்தத் தாக்குதலில் தனது மகனும் இறந்துவிட்டதாக நினைத்து ஒரு இளம் தந்தை மிகுந்த வேதனையில் வாடினார்.


இந்நிலையில் தனது மகன் உயிருடன் திரும்பி வந்ததைப் பார்த்த அவர், ஓடிச்சென்று அவனை கட்டித்தழுவி கதறியழுத வீடியோ சிரியா போராளிகளால் யூ டியூப்பில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு வெளியான இந்த வீடியோவை சுமார் 430,000 பேர் பார்த்துள்ளனர். இவ்வீடியோவில் குறித்த தந்தை தனது மகனை கண்டு வீறிட்டு கதறி அழுவதும் பின்னர் ஆரத்தழுவி முத்தம் கொடுப்பதுமான காட்சிகள் உள்ளடங்கியுள்ளன.


இதன்போது அத்தந்தையை அயலவர்கள் தேற்றுவதும், பின்னர் அச்சிறுவனை ஏனையவர்கள் அப்பால் எடுத்துச்செல்வதும் மீண்டும் அந்தத் தந்தை தனது மகனை தூக்கி முத்தமிடுவதான காட்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்த தாக்குதலில் பலியான ஒரு மாத பெண் குழந்தை உட்பட 20 குழந்தைகளின் உடலை அடையாளம் காண யாரும் வரவில்லை. ஏனென்றால் அவர்களின் குடும்பத்தாரும் தாக்குதலில் பலியாகிவிட்டனர்.

## சேரிப்புற மக்களுக்காக தொடர் மாடி வீடுகள்

கொழும்பில் சேரிப்புறங்களில் வாழும் பொதுமக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டங்களை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அதிகாரிகள் பார்வையிடுவதையும், முடிவுறும் தறுவாயிலுள்ள தெமட்டகொட பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் தொடர்மாடிகளையும் படத்தில் காணலாம்.





# மந்திகள் இல்லாமையால் குரங்குகள் அட்டகாசம்

குரங்குகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள கால்நடை வைத்தியர் சுகந்த ஜயவர்தன தெரிவித்தார். மந்திகள் குறைவடைதல், சுற்றாடல் அழிதல் மற்றும் தங்களுடைய வாழ்விடங்கள் மாற்றமடைதல் போன்ற காரணங்களினால் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நுகேகொடை, மாத்தறை மற்றும் வெலிகம ஆகிய பிரதேசங்களில் குழப்பங்களை விளைவித்தது மட்டுமன்றி மனிதர்களை கடித்து குதறிய குரங்குகளில் நான்கு குரங்குகளை பிடித்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே மேற்கண்ட விடயங்கள் தெரியவந்துள்ளன. பத்தரமுல்லை வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு கொண்டுவந்தே இந்த குரங்குகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

## ரெலி மெயில் சேவை அறிமுகம்

தந்தி சேவை நிறுத்தப்படவுள்ளதால் அதற்குப் பதிலாக புதிதாக ரெலி மெயில் சேவையை அறிமுகப்படுத்த அஞ்சல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்த சேவ்வையை அனைத்து அஞ்சலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும் என அஞ்சல் மா அதிபர் ரோஹன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

தந்தி சேவையின்போது நிறைவேற்றப்பட்ட அனைத்து தேவைகளையும் இந்த சேவையின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ரெலி மெயில் சேவைக்காக 30 ரூபா அறவிடப்படும் எனவும் அஞ்சல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):- thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

# மாற்றம் நிகழட்டும்

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறுவதற்கான அறிகுறிகள் இருப்பதாக நவநீதம்பிள்ளை கூறியிருக்கின்றார்.

மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல், அரசாங்கம் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறிவந்தார்கள். பின்னர் தேர்தல் நீதியாகவும், நியாயமாகவும் நடைபெறா. அரசாங்கம் தேர்தல் மோசடிகளைச் செய்ய முயற்சிகளைச் செய்யும் என்று கூறிவந்தனர்.

பின்னர் தேர்தலை கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட வேண்டும் என்று கூறினர். இப்போது அரசாங்கம் தேர்தலை நடத்துவதை உறுதிப்படுத்தியிருப்பதோடு தேர்தலை கண்காணிக்க பதினைந்து சர்வதேச கண்காணிப்பாளர்களை வடபகுதியில் அனுமதித்தும் உள்ளது.

தவிரவும் மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் இடம்பெறுவதை விடவும், வட மாகாணத்தில் தேர்தல் வன்முறைகள் இதுவரை பதிவாகவில்லை.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் குற்றச்சாட்டுக்களை சூழல் பொய்யாக்கிவிட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

நவநீதம்பிள்ளையின் கூற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு பெருத்த ஏமாற்றமாகவே அமைந்துள்ளது.

இந்த நிலையில் வட மாகாணத்தில் பல்வேறு பாரிய நிகழ்வுகளும் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது. அதாவது லக்சபானா மின்சார இணைப்பு யாழ்ப்பாணத்துடன் இணைக்கப்படவுள்ளது. அத்துடன் கொழும்பிலிருந்து புகையிரதச் சேவை கிளிநொச்சி வரையும் சேவையைத் தொடங்கவுள்ளது. இம் மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் வருகை தரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவற்றை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வட மாகாண மக்களுக்கு மாகாண வாய்ப்புக்கள் மீண்டும் வடக்கு மக்களுக்கு சாத்தியமாகியிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

அதுபோல் அரசியல் தீர்வும், அர்த்த பூர்வமான மீள்குடியேற்றமும், சாத்தியமாக வேண்டும். அதுவே தமிழ் மக்களின் மகிழ்ச்சியை நிரந்தரமாகத் தங்கச் செய்யும். ஜனாதிபதி தமிழ் மக்களின் மகிழ்ச்சிக்காக காட்டியிருக்கும் சமிக்ஞைக்கு, வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்களும் ஜனாதிபதிக்கு இணக்கச் சமிக்ஞையை காட்டுவார்கள் என்று ஜனாதிபதி எதிர்பார்க்கக் கூடும்.

தமிழ் மக்கள் அழிவுதரும் எதிர்ப்பு அரசியலை நிராகரித்து மாற்றம் ஒன்றை நிகழ்த்துவார்களா? பலரும் அவதானிக்கின்றனர்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# ஓமந்தை அசௌகரியங்கள் தளர்வது — இன்னொரு அரசியல் வெற்றி



கடந்த 30 வருடங்களுக்கு மேலாக அரசியல் உரிமைகளுக்காக போராடிக்கொண்டிருக்கின்ற இலங்கைத் தமிழ் மக்கள், தங்களுடைய போராட்ட வடிவங்களை காலத்துக்குக் காலம் மாறுபட்டவகையில் முன்னெடுத்துவருகின்றனர். ஆரம்பங்களில் அகிம்சைப் போராட்டங்களாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் ஆயுதப் போராட்டங்களாக மாற்றம் பெற்றிருந்தது.

ஆயுதப் போராட்டம் அவசியம் என்ற மனோநிலை 70களின் நடுப்பகுதிகளில் வடக்கு - கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்கள் மத்தியில் பெருமளவில் வளர்ந்திருந்தது மறுப்பதற்கில்லை. அந்த மனோபாவம் வளர்ந்தமைக்கு தமிழ் மக்கள் மத்தியிலும், சிங்கள மக்கள் மத்தியிலும் வலம்வந்த சில அரசியல் தலைவர்களே பிரதான காரணகர்த்தாக்களாக விளங்கியிருந்தனர். இருதரப்பு அரசியல்வாதிகளும் தங்களுடைய அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மூட்டிவிட்ட இனவாத நெருப்பு மிகவும் சிறப்பாக செயற்பட்டு இரு இனங்களுடைகிடையே பாரிய விரிசலை ஏற்படுத்தியது. அன்று ஏற்படுத்தப்பட்ட விரிசலைக் குறைப்பதற்கு இன்றுவரை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும் அடிமட்டத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியாத சூழலே காணப்பட்டுவருகின்றது.

அதேவேளை இப்பொழுதும் இனவாதத்தின் மூலம் அரசியல் நடத்த விரும்புகின்ற சிலர் தங்களுடைய கைவரிசையை தொடர்ந்தும் காண்பித்தே வருகின்றனர்.

காலத்திற்கு காலம் தென் இலங்கை மக்கள் மத்தியில் இனவாதத்தை ஊட்டி சில சக்திகள் சிறுபான்மை மக்களுக்கு எதிரான இனக்கலவரங்களைத் தூண்டிவிட்டதுடன் அந்த இனவாதத்தையே முதலீடாக வைத்து இலங்கை அரசியலை தீர்மானிக்கும் சக்திகளாக தம்மை வளர்த்துக் கொண்டனர்.

இந்நிலையில் தென்னிலங்கைக்கும் அரசாங்கத்திற்கும் எதிரான மனோபாவம் ஒன்று வடக்கு - கிழக்கை தமது தாயகமாகக் கொண்டு வாழ்ந்துவருகின்ற தமிழ் மக்கள் மத்தியில் வளர்ந்தது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய தமிழ் தலைமைகள் உணர்வு ரீதியான கருத்துக்களை முன்வைத்து இளைஞர், யுவதிகளை உசுப்பேற்றி ஆயுதப் போராட்டத்தில் தள்ளிவிட்டனர். 80களின் இறுதிப் பகுதிவரை மிகவும் வீரியமாக வளர்ந்து வந்த ஆயுதப்போராட்டம் ஒற்றுமையீனத்தாலும் விவேகமற்ற தீர்மானங்களினாலும் ஒரு சிலரின் ஏகபோக கனவுகளினாலும் திசை மாறிச் செல்ல ஆரம்பித்தது.

இக்காலப்பகுதியில் இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் சர்வதேச நிலைப்பாடுகள் என்பன தொடர்ந்தும் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து போராட்டம் நடத்துவது பிரயோசனமற்றது, தேவையற்ற இழப்புக்களுக்கே வழிவகுக்கும் என்ற உண்மையை சரியான முறையில் ஒரு சிலர் கணிப்பிட்டுக் கொண்டனர்.

ஆனால் அந்தக் காலப்பகுதியில் உணர்வுரீதியாகத் தூண்டப்பட்டு இனரீதியான சிந்தனையோட்டத்தில் மக்கள் இருந்தமையினால் உடனடியாக அவர்களை ஒரு நடைமுறைச்சாத்தியமான வழிமுறைக்குள் கொண்டுவருவது இயலாத காரியமாக இருந்தது.

நடைமுறைச் சாத்தியமான வழிமுறை இணக்க அரசியல் என்பவையெல்லாம் பெரும்பான்மைச் சமூகத்திடம் மண்டியிடுகின்ற, சோரம் போகின்ற இழிசெயல்கள் என்ற மனோபாவம் வளர்க்கப்பட்டிருந்தமையாலும் அதனை தூண்டும் செயற்பாடுகளில் புலிகள் ஈடுபட்டிருந்தமையாலும் குறித்த உணர்வுகளை மூலதனமாக்கி தங்களுடைய அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்து கொள்வதற்கு பெரும்பாலானவர்கள் முற்பட்டிருந்தனர்.

ஆனால், இன்னொரு பகுதியினர் தங்களது பாதையை மாற்றி நடைமுறைச் சாத்தியமான வழியிலே இழப்புக்களின்றி இலக்குகளை அடைவதற்கான வழிகள் ஊடாக தமது பயணத்தை ஆரம்பித்திருந்தனர். அவ்வாறு பயணப்பாதையை மாற்றி அமைத்துக்கொண்டு மக்கள் மத்தியில் அரசியல்செய்வது மிகவும் சவாலானது என்பதை அவ்வாறான தரப்புக்கள் உணர்ந்திருந்தபோதிலும் தங்களின் குறுகிய அரசியல் இலாபங்களுக்காக மக்களுக்கும் தங்கள் தேசத்திற்கும் இழப்புகளையும் அழிவுகளையும் ஏற்படுத்துவதை அவர்கள் விரும்பவில்லை.

இவ்வாறு மக்களின் இழப்புக்களையும் அழிவுகளையும் சுயலாப அரசியலுக்காக அடகுவைக்க முடியாது என்ற விடயத்தில் உறுதியாக இருந்தவர்களுள் இன்றைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் முக்கியமானவர்.

தனது கருத்துக்களுடன் ஒருமித்திருந்தவர்களை இணைத்துக் கொண்டு தனித்துவமான வகையில் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு கௌரவமான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதை இலக்காகக்கொண்டு செயற்படத் தொடங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்ற அரசியல் கட்சியை உருவாக்கி இலங்கையின் அரசியல் நீரோட்டத்திற்குள் 90களின் ஆரம்பத்தில் இணைந்து கொள்கின்றார்.

"மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி" என்றுமே பிரிக்கப்பட முடியாத வடக்கு - கிழக்கு என்று தனது அரசியல் சித்தாந்தத்துடன் அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இணக்க அரசியல் மூலம் அரசியல் அபிலாசைகளை நோக்கிப் பயணிப்பதே இலக்குகளை அடைவதற்கான சிறந்த வழிமுறை என்பதை தெளிவான முறையில் துணிச்சலுடன் எடுத்துரைத்தார். அமைச்சரின் இந்த செயற்பாடுகள், காய் நகர்த்தல்கள் என்பன மக்களின் உணர்வுகளை விற்று அரசியல் செய்ய முயற்சித்தவர்களுக்கு எரிச்சல் ஊட்டியது.

துரோகிகளென்றும் சோரம் போனவர்கள் என்றும் வசைபாடுவதன் மூலம் தமது இயலாமையை வெளிப்படுத்தி நின்றனர். ஆனால் இவ்வாறான கூச்சல்கள், மிரட்டல்கள், தொடர்தோல்விகள் என்பவற்றைப் பற்றியெல்லாம் அலட்டிக்கொள்ளாமல் தான் வகுத்துக்கொண்ட பாதையிலே உறுதியுடன் பயணித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தன்னுடைய அரசியல் பயணத்தில் வெற்றிகளை அவ்வப்போது மக்களுக்கு பெற்றுக் கொடுக்கத் தவறவில்லை.

2000ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிக்காவின் அமைச்சரவையில் இணைந்துகொண்டதிலிருந்து இடையிலே ரணில் அரசாங்கம் ஆட்சியில் இருந்த 2 வருட காலப் பகுதி நீங்கலாக இன்றுவரை தொடர்ந்து அமைச்சராக இருந்து தமிழ் மக்களின் அவலங்களைத் தீர்ப்பதற்கு தன்னாலான அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்ட வண்ணமிருக்கின்றார்.

மக்களின் காணிகள் இராணுவத் தேவைகளுக்காக சுவீகரிக்கப்படுவதான செய்தி ஊடகங்களில் வெளியான போது பலரும் துள்ளிக்குதித்தனர். மக்களை வீதிக்கிழுத்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

1997ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதி சந்திரிக்காவின் ஆட்சிக் காலத்திலும் இவ்வாறான பிரச்சினைகள் தோற்றம் பெற்றிருந்தது. அப்போது 9 பாராளுமன்ற உறுப்பினர்களின் பலத்துடன் இருந்த அமைச்சரவர்கள் பாராளுமன்றத்தில் தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு தனது அதிருப்தியையும், அழுத்தங்களையும் தெரியப்படுத்தி அன்றைய சுவீகரிப்பு முயற்சிகளை தடுத்து நிறுத்தியிருந்தார்.

ஆனால் தற்போதைய அரசியல் சூழல், உலகப்போக்கு என்பவற்றையெல்லாம் ஆழமாக ஆராய்ந்து அதற்கேற்ற வகையில் சூட்சுமமாக காய்களை நகர்த்தவேண்டுமென்பது நிதானமாக செயற்படுகின்ற அமைச்சர் குறித்த காணிப் பிரச்சினையை பொறுமையுடன் நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருந்தார்.

தற்போது அமைச்சர் மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்த 75க்கும் மேற்பட்ட வீடுகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. படிப்படியாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற மக்களின் நிலங்கள் மக்களிடமே ஒப்படைப்பதற்காக வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இவ்வாறு தமிழ் மக்களின் காவலர்கள் தேசியத்தின் மீட்பர்கள் என்றெல்லாம் தங்களைத்தாங்களே சொல்லிக்கொள்பவர்கள் தலையில் அடித்து ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கின்ற பல விடயங்களை சாமர்த்தியமாகக் கையாண்டு மக்களுக்கு இழப்பற்ற வகையில் தீர்த்துவைப்பதில் அமைச்சரவர்கள் தொடர்ந்தும் வெற்றியடைந்து வருவதை மக்கள் கண்கூடாக கண்டுவருகின்றனர்.

அந்த வரிசையிலே, இறுதியாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தென்னிலங்கைக்கும், வட இலங்கைக்கும் இடையிலான இணைப்புப் புள்ளியாக இருக்கும் ஓமந்தை சோதனைச் சாவடியில் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற காலதாமதங்களையும், நெருக்கடிகளையும் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கோரிக்கையொன்று முன்வைக்கப்படுகின்றதெனில் அதிலே நியாயமான காரணங்கள் இருக்கும் என்று உறுதியான நம்பிக்கை வைத்திருக்கின்ற ஜனாதிபதியவர்கள், உடனடியாக ஓமந்தைச் சோதனைச் சாவடியின் செயற்பாடுகளை தளர்த்துவதற்கும் படிப்படியாக குறித்த சோதனைச் சாவடியை இல்லாமல் செய்வதாகவும் உறுதியளித்ததுடன் உரிய அதிகாரிகளுக்கு உத்தரவுகளையும் பிறப்பித்திருந்தார்.

அதன்பலனாக இப்பொழுது ஓமந்தை சோதனைச் சாவடியால் பயணிக்கின்ற பொது மக்கள் சோதனை நடவடிக்கைகளின்றி பயணிக்கின்ற சூழல் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

இது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கிடைந்திருக்கின்ற இன்னொரு அரசியல் வெற்றி என்று சொன்னால் மிகையல்ல என்பது ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கின்றது.

-சிவன்-

எக்ஸ்ரே ரிப்போர்ட்



# வீரத்தாயின்... அவலம்...

**2010....,**

அம்மா வீட்டிலிருந்து நாட்டுக்காக 4 பிள்ளைகளைக் கொடுத்தாள். இன்று அம்மா வுக்காக ஒரு பிள்ளையும் அம்மாவோடு இல்லை. அம்மா உழைச்சுக்கட்டிய கனக புரம் வீடும் போய் இப்ப பரந்தனில் அம்மா வின் முதிசமான அரை ஏக்கர் வயல் நிலத்தில் ஒரு குடிசைதான் அம்மாவின் வசந்தமாளிகை.

7 தகரத்தோடும் ஒரு சின்ன உரப்பை யோடும் 2நாளாக காணியில் போயிருந்தாள் அம்மா. ஆண்துணையும் இல்லை. ஆட்களின் துணையும் இல்லாமல் தன்கையே தனக் குதவியென்ற முடிவில் புல்லைச் செருக்கி ஒரு பாயை விரித்துப் படுத்துறங்கக்கூடிய அளவுக்குத்தான் நிலத்தைத் துப்பரவாக் கினாள். கதியால் இறுக்கி கிடைச்ச தகரங் களைப் போட்டு வீடாக்கி வாழக்கூடிய வல்லமையில்லாமல்.....

கண்ணீரோடு யாராவது உதவுவார்களா என அம்மா காத்திருந்த நேரம் தான் அது நிகழ்ந்தது.

என்னம்மா? வீடு போடலயா? அம்மாவை வந்து பாத்த ஆமிக்காறங்கள் கேட்டபோது அம்மா அழுதாள். எனக்குப் பிள்ளையளு மில்லை புரிசனுமில்லைத் தம்பியவை. நான் தனிய எனக் கொருதரும் உதவி யில்லை... அம்மாவோடு பேசிய ஆமிக்காரன் நல்லவனா கெட்டவனா என்றெல்லாம் அம்மா யோசிக்கேல்ல. அந்த நேரத்தில் அம்மாவை ஒருவன் அக்கறையோடு விசாரிச்சதுதான் பெரிசாயிருந்தது.

கொஞ்ச நேரத்தில் அம்மாவின் காணிக்குள் ஆறு ஆமிக்காரர் வந்தாங்கள். ஒரு கொட்டில் போடக்கூடியளவு தடியளும் சாமான்களும் கொண்டு வந்தாங்கள். அம்மா பாத்துக் கொண்டிருக்க அம்மாவுக்குக் குடிசை போட்டு முடித்தார்கள். நடக்க இயலாத ஒற்றைக் காலை மடித்துக் குந்தியிருந்து வேலைகளைச் செய்யமுடியாத அம்மா நின்று சமைக்கவும் ஒரு ஒழுங்கு செய்துகுடுத்தார்கள். அம்மாவுக்கு அந்த உதவியைச் செய்த ஆமிக்காரருக்கு அம்மா நன்றி சொன்னாள். அவர்களில் ஒருவன் அம்மாவோடு சரளமாகத் தமிழில் கதைத்தான். அம்மாவின் பிள்ளைகள் பற்றி விசாரித்தான்.

தடுப்பில் இருக்கிற அம்மாவின் மகளைப் பற்றியும் மாவீரராகிவிட்ட 2 மகள்களைப் பற்றியும் காணாமல்போன கடைசி மகள் பற்றியும் சொன்னாள் அம்மா. அம்மாவுக்காக மிஞ்சியிருக்கிற தடுப்பிலிருக்கும் மகளை விடுதலை செய்ய அவனை உதவுமாறு கேட்டழுதாள். அம்மாவின் அழுகை அவனைச் சங்கடப்படுத்தியிருக்கவேணும்.

அம்மா நான் ஒரு சிப்பாய்தானம்மா. என்னாலை உங்கடை மகளை வெளியில எடுத்துத்தர ஏலாதம்மா....பெரிய இடங்களில தானம்மா முடிவெடுப்பாங்க... அவன் தனது இயலாமையை அம்மாவுக்கு வெளிப்படுத்தி னான். அப்பாவி அம்மா ஒரு சாதாரண சிப்பாயால் தனது மகளை மீட்டுத்தர முடியு மென்று நம்பி அவனிடம் கெஞ்சியழுதாள்.

மார்கழி 2011.....

மண்ணிறுக்கி வெள்ளம் நுழையாமல் போடப்பட்ட குடிசையைச் சுற்றி 2 மீற்றர் தூரத்திற்கப்பால் மழைவெள்ளக்காடாய் நிறைந்துகிடந்தது. மலசலம் கழிப்ப தென்றாலும் அவ்வளவு நாளும் வெட்டைகளில் போயிருந்த அம்மாவால் இந்த வெள்ளத் துக்கால் எங் கேயும் போக முடியவில்லை. குடிசைத் தாவாரத்தில்தான் 3 நாளாக அம்மாவின் இயற்கைக்கடன் கழிப்பும் நிகழ்ந்து கொண்டி ருந்தது. 50 தரத்துக்கு மேலாக அலைந்து யூ.என்.எச்.சி.ஆரிடம் வாங்கிய கட்டிலும் மெத்தையும் போர்வையும் அம்மாவை குளிரி லிருந்து காத்தது.

சுடுதண்ணி வைச்சுக் குடிக்கக்கூட முடியா மல் ஈரமான விறகை மூட்டிப் பார்த்தாள். கண்ணுக்குள் புகைமூட்டி கண்வீங்கினதே தவிர சுடுதண்ணி வைக்க முடியேல்ல.

ஈரமான விறகைத்தான் திட்டித்தீர்த்தாள். முந்தநாள் வேண்டி வைச்ச பாணில் மிச் சத்தைச் சாப்பிட்டுத் தண்ணீரைக் குடித்தாள். தனிமையின் கொடுமை, பிள்ளைகள் இல்லாத வெறுமை காரணமில்லாமல் அம்மாவின் கண்களை நனைத்துக் கொண்டேயிருந்தது.

அயலட்டைச் சனங்கள் கோவில்களை நாடிப்போய்க் கொண்டிருந்தார்கள். அம்மா அம்மளவையும் வாசலில் நின்று பாத்துக் கொண்டிருந்தாள். முழங்காலுக்கு மேலை நிக்கிற தண்ணியாலை சாமான் சக்கட்டுக ளோடை சனங்கள் போய்க் கொண்டிருந்தார் கள்.

என்னணை நீயும் வாவன்? சனமெல்லாம் கோயிலுக்குப் போகுதுகள். இரவைக்கு வெள்ளம் கூடப்போகுதாமெண்டு கதைக குதுகள்... அங்கினை ஒரு தேத்தண்ணி யெண்டாலும் குடிக்கலாம் வாணை.... பக்கத்து வளவு புவனேசக்கா கேட்டா.

நீ போணை நான் வரேல்ல. எனக் கென்னணை பிள்ளையோ குட்டியோ கொண்டு போற விதி வெள்ளத்தாலை வந்தா வரட்டுமணை... நீ பேரப்பிள்ளை பிள்ளையளெண்டு சொந்தங்களோட இருக் கிறனீ போணை என்னைப் பாக்காதை....

எடியாத்தை வாடி வெள்ளத்தில அடி பட்டியெண்டா ஆனையிறவுக்கைதான் மிதக்கப் போறாய்...சனத்தோடை சனமாப் போவம் வா... புவனேசக்காவின் கெஞ் சலுக்கு அம்மா மசியேல்ல. நீ போணை.... சொல்லீட்டு கட்டிலில ஏறிப்படுத்தாள். வாறவெள்ளம் அள்ளிக்கொண்டு போய் ஆனையிறவுக்கடலில போட்டாலும் போட்டு மெனப் புறுபுறுத்துக் கொண்டு போர் வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்தாள் அம்மா.

இடி, முழக்கம் மின்னல் காதைப்பிழக் குமாப்போலிருந்தது. மெல்லிய சங்கீதம் போலிருந்த மழை மேலும் பெலத்து ஊவென்ற பேரிரைச்சலோடு காற்றடித்துக் கொண்டிருந்தது. அம்மாவின் குடிசை யின் தகரங்கள் மீது விழுகிற பெரிய மழைத்துளிகளின் சத்தம் துப்பாக்கிச் சத்தங்கள் போலிருந்தது.

இப்படித்தான் ஒரு மழைகாலம் 1989ஆம் ஆண்டு. சிறுவயதிலேயே தந்தையை இழந்த தனது பிள்ளைகளின் கல்வி மட்டுமே தனது கடைசிக்கனவாக பிள்ளை களின் கல்விக்கனவில் மூழ்கியிருந்த அம்மாவின் கனவைக் கலைத்துக் கொண்டு போய்விட்டாள் மூத்தவள்.

(தொடரும்)



# புலிகளின் வதை முகாமில்

வதை 77 மணியம்

அவர்கள் முன்னர் வட மத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுரம், மதவாச்சி போன்ற இடங்களில் வாழ்ந்தவர்கள். அவர்களில் சிலர் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகவும், வேறு சிலர் மலையகத்தைச் சேர்ந்தவர் களாகவும் இருந்தனர். 1958 இனவன்செயலின்போது அவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி இடம்பெயர்ந்ததால், தருமபுரத்தில் குடியேற்றப்பட்டிருந்தனர்.

அந்தக் குடியேற்றத்திட்டத் துக்கு பெயர்தான் தருமபுரமே தவிர, உண்மையில் அது 'கருமபுர' மாகவே இருந்தது. அங்குள்ள மக்களுக்கு போதிய வேலை வாய்ப்பு இல்லை, குடிநீர் இல்லை, சுகாதார வசதிகள் இல்லை, வசதிகள் அற்றநிலையில் ஓலைக் குடிசைகளில் வாழ்ந்து வந்தனர். காலபோக வேளாண்மை காலங்களில் மட்டும், சுற்றிவர உள்ள கிராமங்களிலுள்ள வயல் களில் வரம்பு கட்டுதல், நாற்று நடுதல், களை பிடுங்குதல், அரிவி வெட்டுதல் போன்ற வேலைகள் கிடைக்கும், ஆனால் விசுவமடு படித்த வாலிபர் திட்டம் உருவாகி அங்கு பெருமளவில் மிளகாய் செய்கை ஆரம்பமான பின்பு, அவர்களுக்கு ஓரளவு வருடம் முழுவதும் கூலி வேலை செய்யக் கூடியதாக இருந்தது.

அவர்கள் முன்னர் சிங்கள மக்கள் மத்தியில் வாழ்ந்துவந்த வர்கள் என்றபடியால், அநேகருக்கு நன்கு சிங்களம் பேசத் தெரிந்திருந் தது, எனவே வந்திருப்பது எஸ்.டி. பண்டாரநாயக்க என்று தெரிந்ததும், அவர்களில் பலர் வாஞ்சையு டன் அவருடன் அளவளாவிச் சென்றனர். அந்த நேரத்தில் வேலைமுடிந்து செல்லும் பலர் விசுவமடு குளத்திலிருந்து காணி களுக்கு நீர்ப்பாய்ச்சுவதற்காக வரும் பிரதான வாய்க்காலில் குளித்துவிட்டுச் செல்வது வழக்கம்.

எனவே அன்றைய தினம் தோழர் எஸ்.டி.பண்டாரநாயக்கவும் அவர் களுடன் சேர்ந்து அந்த வாய்க் காலில் குளித்து அவர்களது அன் பைப் பெற்றுக்கொண்டார், இப்ப டியான ஒரு சந்தர்ப்பத்தை அந்த மக்கள் தமிழ் பாராளுமன்ற உறுப் பினர்களிடம் மட்டுமின்றி, சாதா ரண தமிழ் அரசாங்க ஊழியர்களி டம்கூட பெற்றிருக்கமாட்டார்கள்.

மாலையில் எஸ்டி. பண்டார நாயக்க பங்குபற்றிய கூட்டம் ஆரம்பமானபோது, விவசாயப் படை பொறுப்பதிகாரியினால் அக்கூட்டத்தைக் குழப்புவதற்கென அனுப்பப்பட்ட விவசாயப்படை வீரர்கள் சிலர் அங்கு வந்தனர், அதேவேளையில் அவரது கூட்டத் தில் பங்குபற்றுவதற்கென பெருந் தொகையான எமக்கு ஆதரவான விவசாயப்படை வீரர்களும் வந்து சேர்ந்தனர், எமக்கு ஆதரவான வர்கள் தொகையில் அதிகமான வர்களாக இருந்த காரணத்தால், கூட்டத்தைக் குழப்ப வந்தவர்கள் தமது திட்டத்தைக் கைவிட்டு விட்டு அமைதியாக இருந்து கூட் டத்தை அவதானித்துவிட்டுத் திரும்பிச் சென்றனர். (எமக்கு ஆதரவான விவசாயப்படை வீரர் களில் சிலர், அது 1970ல் கலைக் கப்பட்ட பின்னர், கிளிநொச்சிப் பகுதியில் எமது முழுநேர அரசியல் ஊழியர்களாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்)

கூட்டம் சுமூகமாக நடந்த பின்னர் அன்றிரவு எஸ்.டி. பண்டாரநாயக்கா அங்கிருந்த செல்லத்துரை என்ற புத்தூரைச் சேர்ந்த தோழர் ஒருவரின் வீட்டில் தங்கினார், இதில் ஒரு வேடிக்கை என்னவெனில், எஸ்டி. பண்டா ரநாயக்கா கிளிநொச்சி விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பியபின்னர், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் வேர்ணன் அபயசேகரவிடம் இருந்து தோழர் செல்லத்துரைக்கு ஒரு கடிதம் வந்தது, அதில், 'சட்டவிரோதமான முறையில் கம்பஹா பாராளுமன்ற உறுப்பினா எஸ்.டி. பண்டார நாயக்கவை விசுவமடுவுக்கு அழைத் துக் கூட்டம் நடாத்தியதுடன், உமது வீட்டிலும் தங்கவைத்ததற்காக உமக்கு வழங்கிய காணி அனுமதிப் பத்திரத்தை ஏன் ரத்துச் செய்யக் கூடாது?' எனக் கேட்கப்பட்டிருந்தது.

இந்தக் கடிதத்துக்கு அரசாங்க அதிபருக்கு எழுதிய பதிலில் தோழர் செல்லத்துரை பின்வருமாறு எழு தினார்: 'எனது நண்பரான கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.டி. பண்டாரநாயக்கவை எனது வீட்டில் விருந்தாளியாகத் தங்க வைப்ப தற்கு எனக்கு சட்டப்படி சகல உரி மையும் உண்டு என்றபடியால், நீங்கள் எனது காணி அனுமதிப் பத்திரத்தை எக்காரணம் கொண்டும் ரத்துச் செய்ய முடியாது'.

அத்துடன் அந்த விவகாரம் முடிந்துவிட்டது, ஆனால் இந்த விவகாரம் முழுவதினதும் பின்ன ணியில் "ஆண்ட தமிழினம் மீண்டும் ஒருமுறை ஆள நினைப் பதில் தவறென்ன?" என அன்றும் இன்றும் முழக்கமிடும் தமிழினத் தின் 'மீட்பர்களான' தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கா.பொ.இரத்தினம்தான் இருந்தார் என்பது, அந்தக் கட்சியினர் வெட் கித் தலை குனியவேண்டிய ஒரு விடயமாகும்.

அதன்பின்னர் வட்டக்கச்சி சந்தை மைதானத்தில் அங்குள்ள எமது விவசாயிகள் சங்கக் கிளை ஏற்பாடு செய்திருந்த பொதுக் கூட்டம் ஒன்றில் எஸ்.டி.பண்டாரநாயக்கா பேசும்போதும் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் சிலர் கூச்சல் போட்டு கூட்டத்தைக் குழப்ப முயன்ற துடன், கூட்ட மேடையிலும் ஏற முயன்றனர், அந்த நேரத்தில் அங்கு வந்திருந்த வட்டக்கச்சி அர சாங்க விவசாயப் பாடசாலை மாண வர்கள் மேடைமீது ஏறி எஸ்.டி. பண்டாரநாயக்காவுக்கு பாதுகாப்பு அரணாக நின்றனர், அத்துடன் நீண்டகால தமிழரசுக்கட்சி விசுவா சியும், எமது விவசாய சங்க உறுப்பி னரும், எங்கும் தயங்காது நீதி நியாயத்தை தட்டிக்கேட்பவருமான மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இராஜரத்தினம் என்ற நண்பர், எப்பொழுதும் தனது மடியில் வைத்திருக்கும் வில்லுக் கத்தி'யை எடுத்து, இப்ப இந்த இடத்தை விட்டுப் போகப்போறியளா இல்லையா?' என்றதும் கா.பொ. இரத்தினத்தின் ஆட்கள் ஓடித் தப்பினர், (கூர்க்காப் படையினர் இடுப்பில் குத்துவாள் வைத்திருப்பது போல, மண்டைதீவைச் சேர்ந்த வர்கள் மடிக்குள் வில்லுக்கத்தி வைத்திருப்பது ஒரு வழக்கம்!)

ஆனால் தென்மராட்சிலுள்ள மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் எஸ்.டி.பண்டாரநாயக்கா பங்கு பற்றிய கூட்டம் சற்றுப் புதுமையாக நடந்தது, அங்கிருந்த எமது விசாய சங்கக் கிளையின் தலைவியாக இருந்தவர் பாக்கியலக்ஸ்சுமி என்பவர், அவர் முன்னர் குறிப்பிட்ட மண்டைதீவு இராஜரத்தினத்தின் சகோதரி, ஒரு செயல் வீராங்கனை.

அங்கு அப்பொழுது குடியேற்றத் திட்ட அதிகாரியாக இருந்தவர் செ.சுந்தரமூர்த்தி என்பவர், கரவெட்டியைச் சேர்ந்த அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி யில் தோழர் மு.கார்த்திகேசன் அவர்களிடம் கல்விபயின்றவர், (அவரது தந்தையார் செல்லையா ஆசிரியரும் தாயாரும்கூட இயக் கச்சி அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் முன்னர் கல்வி கற்பித்தவர்கள்தான்) அதன் காரணமாக முற்போக்காளராக இருந்தார், அவர் மிருசுவிலுக்கு இடமாற்றம் செய்யப்படுவதற்கு முன்னர், திருவையாறு படித்த வாலிபர் குடியேற்றத்திட்டத்தில் பொறுப்பதிகாரியாக இருந்தவர், அவரை அங்கிருந்து மிருசுவிலுக்கு இடம் மாற்றியதும் திருவாளர் கா.பொ.இரத்தினத்தின் கைங் கரியம்தான்.

சுந்தரமூர்த்தி முன்னர் கல்லோயா ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையில் ஒரு அதிகா ரியாகப் பணிபுரிந்த காலத்தில், அங்குள்ள ஊழியர்களின் பல்வேறு கோரிக்கைகளுக்காக மறியல் போராட்டம்.

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம் 66

**பா.ராகவன்**

**1768** லிருந்து, 1774 வரை ஒரு யுத்தம். பிறகு 1787லிருந்து 1792 வரை ஒரு யுத்தம். ஆகமொத்தம் துருக்கியுடன் இரண்டு யுத்தங்கள். இரண்டுமே வெற்றி பெறவில்லை. மாறாக ஒட்டுமொத்த அரேபிய முஸ்லிம்களுக்கும் யூதர்கள் நிரந்தரப் பகைவர்களாக ஆவதற்குப் பெரியளவில் ஒரு பிள்ளையார் சுழியைப் போட்டுவைத்தன.

இத்தனைக்கும் ஓட்டாமான் துருக்கிய மன்னர்கள், யூதர்களுக்கு எத்தனையோ வசதிகள் செய்துதந்து, பாலஸ்தீன் உட்பட துருக்கியப் பேரரசின் அத்தனை இடங்களிலும் சர்வ சுதந்தர முடன் வாழ அனுமதித்திருந்தார்கள்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக பாலஸ்தீனை அவர்கள் முழுவதுமாகத் தங்களுக்கான தனிநாடாக அடைய விரும்புகிறார்கள் என்று சிந்திக்கவே இல்லை.

ரஷ்யாவை ஆண்டுகொண்டிருந்த ஜோர்ஜ் மன்னன் கேதரின் காலத்தில் யூதர்கள் அங்கே இடம் பெயர்ந்தும் தேசம் எங்கும் பரவியும் வாழ முடிந்ததென்றாலும் அது நீடித்த சௌகரியமாக அவர்களுக்கு அமைய வில்லை. மன்னர்கள் எதிர்பார்த்த படி யூதர்களின் படையைக்கொண்டு துருக்கி சுல்தானை வெல்ல முடியாதது மட்டுமல்ல இதன் காரணம். அரசியல் காரணங்களைக் கருத்தில் எடுக்காத சாதாரண பொதுமக்களுக்கு யூதர்களைப் பிடிக்காமல் போய்விட்டது. யூதர்கள் என்றால் கிருத்தவத்தின் முதல் எதிரிகள் என்கின்ற அடிப்படைக் காரணம்தான் இங்கு பிரதானம் - என்றாலும் அதற்கும் மேலும் சில காரணங்கள் இருந்தன. ரஷ்யாவின் மண்ணின் மைந்தர்களான கிருத்தவர்களை அங்கு குடியேறிய யூதர்கள் மதம் மாற்ற முயற்சி செய்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு அப்போது மிகப் பலமாகக் கிளம்பியது. உண்மையில் நம்பமுடியாத குற்றச்சாட்டு இது. யூத மதத்தில் மதமாற்றம் என்பது அறவே கிடையாது. சரித்திரத்தின் எந்தப் பக்கத்திலும் அவர்கள் யாரையும் மதம் மாற்ற முயற்சி செய்ததாகத் தகவல் இல்லை. ஆனால் ரஷ்யக் கிருத்தவர்கள் இப்படியொரு குற்றச் சாட்டைத்தான் பிரதானமாக முன்வைத் தார்கள்.



1ஆம் நெப்போலியன்

இது முற்றிலும் ஒரு பொய்யான குற்றச்சாட்டு என்று யூதர்கள் தரப்பில் தொடர்ந்து போராடிப் பார்த்தார்கள். மன்னர் கேட்டாலும் மக்கள்விடுவதாக இல்லை. வேறு வேறு வகைகளில் யூதர்கள் அங்கு வாழ்வதற்கு நெருக்கடி தர ஆரம்பித்தார்கள்.

ரஷ்யாவிலிருந்து போலந்து பிரிந்தபோது அங்கெல்லாம் பரவி வசித்துக் கொண்டிருந்த யூதர்கள் பிரிவினையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு நிறைய நிலங்களை வளைத்துப் போட்டார்கள். குறிப்பாக போலந்து – ரஷ்யா எல்லைகள் சரியாகப் பிரிக்கப்படாத இடங்களில் எல்லாம் அவர்கள் மைல் கணக்கில் நிலங்களை வளைத் திருந்தார்கள். இது ரஷ்யா விவசாயிகளுக்கு மிகவும் கோபம் ஊட்டியது. அவர்கள் அதிகாரிகளிடம் புகார் செய்தபோது எவ்விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. காரணம் அதனை ரஷ்யா அதிகாரிகளுமே யூதர்களிடம் லஞ்சம் வாங்கியிருந்ததுதான். தேசம் உடையும் சோகத்தைக் காட்டிலும் இந்த ஊழல் நாற்றமும் அதற்கு வித்திட்ட யூதர்களின் யுக்தியும் ரஷ்யர்களை மிகவும் பாதித்தது. ஒட்டுமொத்த கிருத்தவ ரஷ்யாவும் திரண்டு எழுந்து யூதர்களுக்கு எதிரான கலகங்களைத் தொடக்கி வைத்தது.

இன்னும் சற்று நுணுக்கமாக ஆராய்ந்தால் சகிப்புத்தன்மைக்குப் பேர் போன ரஷ்யர்கள் பின்னாளில் ஏன் அத்தனை உக்கிரமான யூதர்களை ஓடஓட விரட்டினார்கள் என்பதற்கு வேறொரு காரணமும் கிடையாது.

ஜோர் மன்னர்கள் ஆண்டபோதும் சரி பின்னாள் ரஷ்யப் புரட்சி ஏற்படும் கம்யூனிசம் வந்தபோதும் சரி அதற்குப் பின்னால் சோவியத் யூனியன் என்கிற இரும்புக் கோட்டையே உடைந்து சிதறி பல துண்டுத் தேசங்களான போதும் சரி ரஷ்யர்களின் தேசப்பற்று கேள்விக்கு அப்பாற்பட்டது. இன அடையாளங்களால் பிரிந்திருந்தாலும் தாங்கள் ரஷ்யர்கள் என்று சொல்லிக் கொள்வதில் அவர்களுக்கு அலாதியான ஆனந்தம் உண்டு. ஒவ்வொரு ரஷ்யரும் தமது தேசத்துக்கு தனிப்பட்ட முறையில் கடமைப்பட்டிருப்பதாக எப்போதும் உணர்வார்.

ஆனால் யூதர்களால் அவர்கள் ரஷ்யாவிலேயே பலதலைமுறைகளாக வாழ்ந்தாலும் அப்படியொரு தேசிய அடையாளத்தை விரும்பிக் கேட்க முடியவில்லை. நீங்கள் யார் என்று எந்த ரஷ்யர்களிடம் கேட்டாலும் நான் ஒரு ரஷ்யன் என்றுதான் சொல்வார். அதே ரஷ்யாவில் வசிக்கும் யூதர்களிடம் நீங்கள் யார் என்று கேட்டால் நான் ஒரு யூதன் என்றுதான் சொல்வார்.

ரஷ்யாவின் தனிப்பெரும் அடையாளமாகத் திகழ்ந்த ஒரே மொழி, ஒரே மதம் என்கிற விசயத்துடன் யூதர்களால் எந்தக் காலத்திலும் ஒத்துப் போக முடியவில்லை. வாழ்க்கைப் பிரச்சினைக்காக அவர்கள் ரஷ்யா மொழி பேசினார்களே தவிர, அதைத் தங்கள் மொழியாக ஒருபோதும் சொல்லமாட்டார்கள். வாழப்போன ரஷ்யாவில் உங்களைவிட நாங்கள் தான் மதத்தால் உயர்ந்தவர்கள் என்கிற தம்பட்டத்தையும் நிறுத்திக் கொள்ளவில்லை.

இது பெரும்பான்மை ரஷ்யக் கிருத்தவர்களுக்கு மிகுந்த எரிச்சலை ஏற்படுத்தியது. தேசிய உணர்வு இல்லாத ஒரு கூட்டத்தை எதற்காகத் தாங்கள் வாழ வைக்கவேண்டும் என்கிற கேள்வி அவர்களிடம் இருந்தது.

இன்னொரு காரணமும் இதற்கு உண்டு. அப்போது ரஷ்யா தீவிர நிலவுடமை தேசம். ஜமீன்தார்கள் அங்கே அதிகம். எல்லா ஜமீந்தர்களும் கிராமங்களில் வசித்துக்கொண்டு ஏகபோக விவசாயம் செய்து ஏராளமாக சம்பாதித்து முறைப்படி வரியும் லஞ்சமும் செலுத்திவந்தார்கள். போலந்து பிரிவினையை ஒட்டி ஏராளமான நிலங்களை வளைத்துப்போட்ட யூதர்கள் அப்போது பெரும்பாலும் நகர்ப்புறங்களிலேயே இருந்தார்கள். நகரங்களில் தாங்கள் வசித்துக்கொண்டு கிராமப்புறங்களில் விவசாயப் பணிகளைப் பார்த்துக் கொள்ள தம் சுற்றத்தார்களையும், நண்பர்களையும் குறிப்பாக எல்லாருமே யூதர்கள் – அங்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.

இது தினக்கூலி வேலை பார்த்துக் கொண்டிருந்த எளிய ரஷ்ய விவசாயிகளை மிக அதிகமாகப் பாதித்தது. தங்கள் கிராமங்களில் தங்களுக்கு வேலைவாய்ப்பு அறவே கிடையாது என்றால் அவர்கள் எங்கே போவார்கள்.

அதிகாரிகளிடம் போகமுடியாது. யாரும் காதுகொடுத்துக் கேட்கக் கூடியவர்களாக இல்லை. யூத முதலாளிகளான ஜமீன்தார்களிடமே நியாயம் கேட்கலாம் என்றால் அவர்கள் கிராமப் புறங்களின் பக்கமே வரமாட்டார்கள். திடீர் திடீர் என்று பெரிய பெரிய வாகனங்களில் மொத்தமாக யூத வேலையாட்கள் கிராமங்களுக்கு வந்து இறங்குவார்கள். சொல்லிவைத்த மாதிரி வேலையை ஆரம்பித்து விடுவார்கள்.

(தொடரும்...)

# இல்லறம் புகுமுன் சிந்தியுங்கள்



**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

இளைஞர்களே, யுவதிகளே - இளைஞர் என்பது இருபாலாரையும் குறிக்கும். ஆண், பெண் எனும் வேறுபாடு இன்றி இந்தக் கட்டுரையை வாசிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இன்றைய இளைஞர்களின் வாழ்வை தீர்மானிக்கும் அல்லது வாழ்க்கை முறையைத் தெரிவதற்கு உதவுபவை நட்பும், வாழ்க்கைத் துணையுமாகும்.

ஒருவர் வாழ்வில் நண்பன் அமைவது இறைவன் கொடுத்த வரம், நட்பைத் தெரிவதில் தவறு நடந்துவிட்டால் வாழ்க்கைப் பாதை திசை மாறிவிடும்.

இவ்வுலக வாழ்க்கையில் ஒரு மனிதன் உண்மையாக ஈட்டவேண்டிய அரிய பொருள் நட்பேயாகும். நாம் செய்யும் ஒவ்வொரு தொழிலுக்கும் அதைப்போன்ற பெருந்துணை வேறு எதுவும் இல்லை. நட்பு இருவகை, ஒன்று அறிவுடையார் நட்பு, மற்றொன்று அறிவிலார் நட்பு. அறிவுடையார் நட்பு - வளர்பிறைபோல நாள்தோறும் வளரும், அறிவிலார் நட்பு - தேய்பிறை போல, நாளுக்கு நாள் குறையும். படிக்கபடிக்க நூல்கள் நயத்தை மேலும் மேலும் தந்து கொண்டேயிருக்கும். பழகப் பழகப் பண்புடையார் நட்பு, இனிமையை நல்கிக்கொண்டேயிருக்கும்.

நல்ல நட்பை அவ்வாறு அறிவது என ஒரு வினா எழும், இதற்கு டாக்டர். மு.வரதராகனின் கட்டுரை ஒன்றில் பல ஆண்டுகளுக்கு முன்னர் வாசித்த உதாரணம் பதிலாக அமையும் எனக் கருதுகின்றேன். கற்கண்டுத்துண்டை வைத்தால் எறும்புகள் அழையாமல் வந்து ஒட்டிக்கொள்ளும், ஆனால் அதன்மேல் சிறிய கற்துண்டை இட்டதும் வந்த எறும்பு மறைவதைக் காண-முடியும். இவ்வாறு சிரித்து விளையாடி மகிழ்வதற்கு மட்டும் வரும் நட்பு நட்பல்ல. இன்பத்திலும் துன்பத்திலும் கலந்து நண்பர் தவறு இழைக்க நேரும்பொழுது தயங்காமல் கண்டித்து, அறிவுரை கூறுபவனே உண்மை நண்பன் ஆவான்.

“ **உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே**

**இடுக்கண் களைவது ஆம் நட்பு** ” என்று கூறுகிறார்.

ஆடையை இழக்க நேரிடுகையில் மனிதன் தன் கைகளுக்கு விண்ணப்பம் செய்து கொள்வதில்லை. அவன் பேசாமலேயே அவனது கைகள் விரைந்து சென்று உறுப்புக்களை மூடி மானத்தைக் காத்துக்கொள்கின்றன. அதுபோல, நண்பனுக்கு இடையூறு ஏற்பட்ட பொழுது அவன் கேளாமலேயே வலியச் சென்று அவனது இடரைப் போக்கி உதவி செய்யவேண்டும்.

இலக்கியங்கள் நல்ல நட்புக்குப் பல உதாரணங்களைக் காட்டியுள்ளன. கண்ணனுக்கும் குசேலருக்கும் இடையில் ஏற்பட்ட நட்பு, துரியோதனனுக்கும் கர்ணனுக்கும் இடையில் மலர்ந்த நட்பு, இப்படிப் பலவற்றைக் கூறிட முடியும்.

ஆக்கத்திற்கு பயன்பட வேண்டிய இளைஞர் சக்தி பலனற்று போவதற்கு முதல் காரணம் தவறான நட்புத்தான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

இன்றைய இளைஞர், யுவதிகளின் அடுத்த பிரச்சினை வாழ்க்கைத் துணையைத் தேடுதல் என்பதாகும். முதலில் நீண்டகாலம் வாழவேண்டும் என்று நினைக்கிறார்களா? என்பதுதான் சந்தேகமாகவுள்ளது. இன்று காதல் என்ற பெயரில் நடைபெறும் காமக்களியாட்டம் பண்பாட்டை விரும்பும் அனைவரினாலும் அருவருப்பாகப் பார்க்கப்படுகிறது.

ஆணும், பெண்ணும் விரும்பிக் காதல்கொள்ளும் தூயநிலை என்பது தமிழர் நாகரிகமாகும். ஆண் ஆண்மை, வீரம், துணிவு ஆகியவற்றின் பிரதிவிம்பம் என்றால், பெண் மென்மை இரக்கம், அன்பு ஆகியவற்றின் திருவுருவமாக விளங்குகிறாள். ஆண் இல்லாதபோது பெண் இல்லை. பெண் இல்லாதபோது ஆண் மேன்மை பெறமாட்டான். தோமஸ் ஆட்வே என்ற அறிஞன்,

பெண்களின் கற்பைப் போற்றாதோர் இவ்வுலகில் எவருமில்லை. “கற்புடைய பெண் இரத்தினத்தைவிட மேலான மதிப்புடையவள்” என்று பைபிள் மறை முழங்குகின்றது. தங்கத்தைவிட மேலானது என்ன? சூரிய காந்தம். சூரிய காந்தத்தைவிட மேலானது என்ன? அறிவு. அறிவைவிட மேலானது என்ன? பெண். பெண்ணைவிட மேலானது என்ன? ஒன்றுமே இல்லை எனக்கூறிய ஆங்கிலக் கவிஞர் சாங்ரோ, “கற்பை இழந்தவள் வேறு எந்த இழி செயலையும் செய்யத் தயங்கமாட்டாள்” என்றும் கூறுகிறார்.

ஆனால் கற்பை இழந்த பெண் மீண்டும் கற்பைப் பெற்றாள் என்று நாம் கண்டு அறியோம். கேட்டும் அறியோம். அவளுடைய அவலநிலையை ஆங்கிலப் பெருங்கவிஞர் ஷேக்ஸ்பியர் இதயத்தைப் பிழியும்வண்ணம், “ஐயோ அவள் வீழ்ந்துவிட்டாளே! இருட்கடலில் மூழ்கிவிட்டாளே!! அவளை மீண்டும் தூய்மைப்படுத்தி பரந்து விரிந்துகிடக்கும் பெருங்கடலில் ஒரு துளி நீரேனும் இல்லையே” என்று எடுத்துரைக்கின்றார்.

அவளுடைய இழந்த கற்பை தான் மீட்க முடியாவிட்டாலும் அவளுடைய அவமானத்தையேனும் போக்க முடியுமா? முடியும். எப்படி? அதற்கு அப்பெருங் கவிஞரே பதில் கூறுகிறார். “அவளுடைய அவமானத்தை மறைப்பதற்கான அழகிய திரை என்னவென்றால் இறப்புத் தான்” என்று. ஆம். கற்பை இழந்தவள் உலகில் ஓர் அவமானச் சின்னமாக விளங்குகிறாள். அவள் உலகிற்கே ஒரு சாபக்கேடாக இருக்கிறாள். குடும்பப் பெண்கள் அவளின் கண்ணில் விழிப்பதுகூட அவள் தங்கள் முன் எதிர்ப்படுவதுகூட தீ நிமித்தம் என்று கருதுகின்றனர். எந்த ஆணும் அவளை மண முடித்துக் கொள்ள விரும்புவதில்லை.

கற்பை இழந்த பெண்ணும் ஆணும் ஒரே விதக் குற்றத்தையே செய்கின்றனர். எனவேதான் அவர்கள் இருவரையும் கல்லெறிந்து கொல்லுமாறு யூதர்களின் சட்டமும், சவுக்கால் அடிக்குமாறு இஸ்லாமியச் சட்டமும் ஆணையிடுகின்றன. இதனால் அந்த நாடுகளில் விபச்சாரம் என்ற பேச்சே இல்லை. அந்த நாட்டில் இதற்கு சட்டமும், தண்டனையும் வேண்டாமா?



வாரமலர் தினமுரசு

# நவிப்பிள்ளை நடத்திய நாடகம்

**வடக்குத் தேர்தல் அறிவிப்பை வரவேற்கிறேன். அமைதியான, நீதியான சூழலில் தேர்தல் நடக்கும் என நான் நம்புகிறேன். அதிகாரப் பகிர்வுக்கு அது புதிய கட்டமாக அமையும் என்றும் குறிப்பிட்டார். நவநீதம்பிள்ளையின் இந்தக் கருத்துக் குறித்து புலிகளின் ஆதரவாளர்கள் எரிச்சலடைந்திருந்தாலும், இன்னும் மௌனமாகவே இருக்கின்றார்கள். இதற்காக நவிப்பிள்ளை எதிர்க்கவோ, விமர்சிக்கவோ தயங்குவது போல் தெரிகின்றது. நவிப்பிள்ளையை அவர்கள் எதிர்த்தால், வடக்கு மாகாண சபைப்பரப்புரைகளில் சர்வதேச சமூகம் பற்றியும், நவிப்பிள்ளை பற்றியும் தெரிவித்த கருத்துக்கள் பொய்யாகிப் போய்விடும் என்ற அச்சங்களும் காரணமாக இருக்கலாம்.**



அலசுவது - மதியூகி

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம், இலங்கை மக்கள் அனைவரிடமும் பல்வேறு கருத்துக்களை ஏற்படுத்தியுள்ளது.

நவிப்பிள்ளை வடக்கு மாகாணத்துக்கும், கிழக்கு மாகாணத்துக்கும் விஜயம் செய்து பெரும்பாலும், தமிழ் மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்ததானது சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினையை ஆய்வு செய்வதற்கு இனவேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரையும் சந்தித்து கருத்துக்களைக் கேட்டறிந்திருக்க வேண்டும்.

அரசையும், எதிர்க்கட்சித் தலைவரையும் சந்தித்ததானது, சிங்கள மக்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்வதாக அமையாது. அதுபோல் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களைச் சந்தித்ததும் முழு முஸ்லிம் மக்களின் கருத்துக்களைத் தெரிந்து கொண்டதாக அமையாது.

அரசியல் தலைவர்களையும், புத்திஜீவிகளையும் சந்தித்திருக்க வேண்டும். மக்களிடம் ஒரே கருத்தே இருக்க முடியும் என்றும், ஒரே அரசியல் நிலைப்பாடே இருக்க முடியும் என்றும் நவிப்பிள்ளை எடுத்துக் கொண்ட முடிவானது, ஜனநாயகப் பண்புகளுக்கு ஏற்புடையதல்ல.

தமிழ் மக்களிடமும், முஸ்லிம் மக்களிடமும் மாற்றுக் கருத்துக்களும் இருக்கின்றன. மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கின்றன. அதை நவிப்பிள்ளை கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை.

மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காத ஒருவராகவே நவிப்பிள்ளை இருக்கிறார். அல்லது இலங்கையில் இருந்து நவிப்பிள்ளையின் விஜயம் தொடர்பிலும், சந்திப்புக்கள் தொடர்பிலும் நிகழ்ச்சி நிரலை வகுத்தவர்கள் பிழையான தகவல்களை வழங்கி, நவிப்பிள்ளையைத் தவறாக வழிநடத்தியிருக்கிறார்கள்.

நவிப்பிள்ளை ஒருபக்கப் புரிதலுடனேயே தனது பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியிருக்கிறார். இன்னொரு பக்கம் அவரது கவனம் இருக்கவில்லை.

இவற்றைப் பார்க்கும் போது நவிப்பிள்ளையை தவறாக வழிநடத்தியவர்கள், இலங்கை தொடர்பாக தயாரித்து அனுப்பும் அறிக்கைகளும், தகவல்களும் எவ்வாறு இருக்கும் என்பதும், அரசின் நம்பகத்தன்மை எப்பிடியானதாக இருக்கும் என்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், நவிப்பிள்ளை தனது விஜயத்தை அரசியல் நோக்கத்துடனும் காய் நகர்த்தியுள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்தமைக்கு வடமாகாணத்தில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தின.

நவிப்பிள்ளையுடனான சந்திப்பை கூட்டமைப்பு தமது அரசியல் பிரச்சாரமாகப் பயன்படுதியது என்று குற்றம் சுமத்தப்பட்டது.

உலக அரங்கில் ஒரு பிரதிநிதியாக இருக்கும் நவிப்பிள்ளை, தமது செயற்பாடுகள் எவ்விதமான தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து கொள்ளவில்லையா? என்ற கேள்விகளுக்கு நவிப்பிள்ளை கூறும் பதில் என்னவாக இருக்கப் போகிறது.

நவிப்பிள்ளை குறித்து கண்டனங்களும், விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டிருந்தாலும், அவர் இலங்கைக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு போவதற்கு முன்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்துத் தனது அவதானிப்புகள் குறித்து மேலோட்டமாக சில விடயங்களைக் கூறியுள்ளார்.

அதில் அரசாங்கத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, இலங்கை ஏதேச்சதிகாரப் பாதையில் செல்வதற்கான அறிகுறிகள் அதிகரித்துள்ளமை மிகவும் ஆழமான கவலையை ஏற்படுத்தியுள்ளது.

கண்காணிப்புக்களையும், துன்புறுத்தல்களையும் வைத்துப் பார்க்கும் போது, இலங்கை மோசமான நிலையில் உள்ளது என்று தோன்றுகிறது. போர் நடந்த வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படைகளை ஜனாதிபதி குறைக்க வேண்டும்.

போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மீறல்கள் குறித்து நம்பகமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், போர்க்குற்ற விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும். இறுதிக்கட்டப் போரில் நடந்தது என்ன என்பது குறித்து நம்பகமான உள்நாட்டு விசாரணை நடத்தப்படா விட்டால், அனைத்துலக விசாரணை நடத்தப்படலாம் என்று கூறியிருந்தார்.

இந்தக் கருத்துக்கள் அரச எதிர்ப்பு சக்திகளுக்கும், நவநீதம்பிள்ளையை தமிழ் மக்களிடம் சந்தைப்படுத்திய தரப்புக்களுக்கும் எதிர்பார்த்தது நடந்ததாக பரப்புரை செய்வதற்கு வசதியாக இருந்திருக்கும்.

மறுபக்கத்தில், நவநீதம்பிள்ளையின் வருகையை விரும்பாதவர்களுக்கும், கண்டனத்தோடு பார்த்துக் கொண்டு இருந்தவர்களுக்கும் நவநீதம்பிள்ளை மீதான எரிச்சலை நிச்சயம் அதிகரித்திருக்கும்.

வழமை போல் வடக்கிலுள்ள ஊடகங்கள் நவநீதம்பிள்ளையின் கருத்துக் குறித்துச் செய்தியிடும் போது, "இலங்கை அரசு சர்வாதிகாரமாக நடந்து கொள்கிறது" என்று செய்தி வெளியிட்டன.

ஆனால், நவிப்பிள்ளையின் அறிக்கையில் இன்னொரு பகுதி புலிகள் அமைப்பையும், புலிகளின் ஆதரவு ,அமைப்புக்களையும் ஏமாற்றமடையச் செய்துள்ளது.

அதாவது, பல உயிர்களைக் கொன்றொழித்த இரக்கமற்ற அமைப்பே புலிகள் அமைப்பு. நீலன் திருச்செல்வத்தையும் அவர்கள் கொலை செய்தனர்.

இப்படியான இரக்கமற்ற அமைப்புக்கு, மகிமை மிக்க ஐ.நா. அமைப்பில் மரியாதை கிடைக்கும் என்று புலிகளிடம் பணம் பெறும் புலம்பெயர் அமைப்புக்கள் எதிர்பார்க்க முடியாது.

வடக்குத் தேர்தல் அறிவிப்பை வரவேற்கிறேன். அமைதியான, நீதியான சூழலில் தேர்தல் நடக்கும் என நான் நம்புகிறேன். அதிகாரப் பகிர்வுக்கு அது புதிய கட்டமாக அமையும் என்றும் குறிப்பிட்டார்.

நவநீதம்பிள்ளையின் இந்தக் கருத்துக் குறித்து புலிகளின் ஆதரவாளர்கள் எரிச்சலடைந்திருந்தாலும், இன்னும் மௌனமாகவே இருக்கின்றார்கள். இதற்காக் நவிப்பிள்ளை எதிர்க்கவோ, விமர்சிக்கவோ தயங்குவது போல் தெரிகின்றது.

நவிப்பிள்ளையை அவர்கள் எதிர்த்தால், வடக்கு மாகாண சபைப் பரப்புரைகளில் சர்வதேச சமூகம் பற்றியும், நவிப்பிள்ளை பற்றியும் தெரிவித்த கருத்துக்கள் பொய்யாகிப் போய்விடும் என்ற அச்சங்களும் காரணமாக இருக்கலாம்.

அரசு நவிப்பிள்ளையின் கருத்துக்கள் தொடர்பில் தனது அதிருப்தியை பகிரங்கமாகவே தெரிவித்துள்ளது. தமிழ் கூட்டமைப்பினரோ நவிப்பிள்ளையின் கருத்துக்களை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளனர்.

கூட்டமைப்பினர் நவிப்பிள்ளையின் கருத்துக்களை வரவேற்கின்றனர் என்றால், புலிகள் தொடர்பாகவும், புலிகளின் முகவர்கள் தொடர்பாகவும் கூறியிருக்கும் கருத்துக்களையும் வரவேற்பதாகவே அமையும். அதாவது, இவர்கள் கூறும் "போராளிகள்" என்பவர்களும், அதன் தலைவர் பிரபாகரனும் இரக்கமற்ற கொலையாளிகள்.

இப்படியானவர்களை மகிமை மிக்க ஐ.நா.சபையில் மரியாதை கிடைக்கச் செய்ய எடுக்கும் முயற்சிகளை நிராகரிப்பதை இவர்கள் வரவேற்கின்றனர்.

இப்படிப் புலிகளையும், அவர்களின் செயற்பாடுகளையும் ஏற்றுக் கொள்ளாத இவர்கள் அரசியல் வெற்றிகளுக்காக மட்டும் புலிகளை வீரப்புருஷர்களாகக் கூறிக் கூறியே தமிழ் மக்களின் வாக்குகளை அபகரித்து வருகின்றனர் என்பது நவிப்பிள்ளையின் விஜயம் வெளிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை வாய்மூலமாக வெளியிட இருக்கும் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான அவதானிப்புக்கள் என்பது இலங்கை மீது சர்வதேச அபிப்பிராயத்தைக் கேள்விக்கு உட்டுத்துவதாக அமையும் என்றே இலங்கை அரசு கவலை கொண்டுள்ளது.

இலங்கை அரசுக்கு ஏற்புடையதற்ற அல்லது தலைகுனிவை ஏற்படுத்தக் கூடியதான அறிக்கையை நவிப்பிள்ளை வெளியிட வேண்டும் என்பது அரச எதிர்ச் சக்திகளின் விருப்பமாக இருக்கின்றது.

யாருடைய விருப்பு வெறுப்புக்களுக்கும் எடுபட்டு நவிப்பிள்ளை செயற்படமாட்டார் என்பதே மனித உரிமை ஆர்வலர்களின் விருப்பமாக உள்ளது. ஆனால், நவிப்பிள்ளை இலங்கைக்கு வருகை தந்திருந்த போது மாற்றுக் கருத்துக் கொண்டவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளாமல், மூவின மக்களின் மனித உரிமைகள் தொடர்பான நிலைப்பாட்டையும் தெரிந்து கொள்ளாமலும் தனது ஆய்வை முடித்துக் கொண்டது அவரின் அறிக்கைகள் எந்தளவுக்கு நம்பிக்கைக்குரியது என்ற கேள்வியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

நவிப்பிள்ளைக்கு இலங்கை விஜயம் சில உண்மைகளைத் தெளிவுபடுத்தியிருக்கும் அதேவேளை, கசப்பான ஞாபகங்களையும் நிச்சயம் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.



# சிரியா மீதான அமெரிக்காவின் நடவடிக்கை

தொகுப்பு வேணுகிருஷ்ணா

**உலகிலேயே அதிகளவில் இரசாயன ஆயுதங்களை 'ஸ்டாக்' வைத்திருக்கும் நாடு களில் மூன்றாவது பெரிய நாடாக சிரியா கருதப்படுகிறது. போராட்டக்காரர்களை அடக்க சிரிய இராணுவம் இவற்றை பயன்படுத்த ஆரம் பித்திருப்பதாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அல்ஜசீரா தொலைக்காட்சி சந்தேகப்பட்டது. அப்போதிலிருந்தே தொடர்ச்சியாக ஆங்காங்கே இரசாயன ஆயுதங்களால் மக்கள் தாக்கப்படுவதாக ஊடகங்கள் அலறிக்கொண்டிருக்கின்றன.**

**இந்நிலையில் அமெரிக்கா இனியும் பொறுக்கமுடியாது என்று தன்னுடைய போர்க்கப்பல்களை மத்திய தரைக்கடலுக்கு அனுப் பியிருக்கிறது. ஏற்கனவே அங்கே நிலைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஹாரி ட்ரூமான் என்கிற விமானந்தாங்கி கப்பல் சுயஸ் கால்வாய் வழியாக செங்கடலுக்கு விரைந்திருக்கிறது. அங்கிருந்து சிரியா மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்று தெரிகிறது. ஏவுகணை தாங்கி கப்பல் ஒன்றும் மத்திய தரைக்கடலுக்கு விரைந்தது. அமெரிக்காவுக்கு ஆதரவாக இங்கிலாந்து பிரான்ஸ் படைகளும் தயார்நிலையில் இருக்கின்றன.**

### சிரியாவின் வரலாற்றுத் துயரம் : இரசாயன ஆயுத தாக்குதலில் 1300 பேர் பலி

சிரியத் தலைநகர் டமஸ்கஸ்ஸிற்கு அண்மையில் கிளர்ச்சிப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமப்பகுதிகளில் இரசாயன ஆயுதம் பிரயோகிக்கப் பட்ட தால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப் பட்டுள்ளனர். எதிரணியினரான கிளர்ச்சிப் படையினரால் இணையத்தளத்தில் பதிவிடப் பட்ட வீடியோக்களில் கொல்லப்பட்ட வர்களின் சடலங்கள் காட்டப்பட்டுள்ளன.

இது சிரியாவின் மிக இருண்ட நாளாக, இனப்படுகொலை மேற்கொள் ளப்பட்ட நாளாக கணிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் பெண்கள் அடங்கலாக 1,300 பொதுமக்கள் இத்தாக்குதலில் பலியாகியிருப்பதாக கிளர்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

1988ஆம் ஆண்டு சதாம் ஹுசைன் ஆட்சியில் குர்திஸ் இன மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இராசயன ஆயுத தாக்குதலுக்கு பிறகு வரலாற்றில் இராசயன ஆயுத தாக்குதலால் அதிகமா னோர் கொல்லப்பட்ட துயர சம்பவமாக இது பதியப்படும்.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் உடனடியாக இத்தாக்குதல் குறித்து விசாரணை மேற் கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்தி யுள்ளன.

கடந்த 2012 ஜூலை மாதம் சிரிய அரசு தன்னிடம் இராசயன ஆயுதம் இருப் பதை ஒப்புக்கொண்ட போதும் உள் நாட்டில் ஒரு போதும் அதை பயன்படுத் தியதில்லை என மறுப்பு வெளியிட்டிருந் தது.

இத் தாக்குதலில் உடலில் காயங்கள் ஏதும் ஏற்பட்ட அறிகுறி இல்லாமல் இருப் பதுடன் பலர் நச்சு வாயுவினை சுவாசித் ததன் விளைவாக வலிப்பு ஏற்பட்டு இறந்தி ருப்பதற்கான தடயங்களும் வெளியாகியுள் ளன. இச்சடலங்களைப் பரிசோதித்த மருத்துவர் சுமார் 200 பேர் இதனால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இதில் பலர் மூச்சுத் திணறலால் இறந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். பிரிட்டன் பிரான்ஸ் ஆகிய நாடுகளும் தமக்குக் கிடைத்த செய்திகளின் அடிப்படையில் இச்சம்பவத் துக்குக் கவலை தெரிவித்துள்ளன. இதே வேளை சிரிய அதிபர் பஷர் அல் அசாத் தின் தரப்பில் இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டமைக்கு மறுப்புத் தெரிவிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

### சிரியாவில் உடலில் தீப்பற்றி எரியும் குண்டுத்தாக்குதல்

30 ஓகஸ்ட், 2013 - செய்திகளின்படி இரசாயன தாக்குதல் நடந்ததாகக் கூறப் படும் சிரியா மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து பலவிதமான விவாதங்கள் சர்வதேச அரங்கில் நடந்து கொண்டிருக்கும் நிலையில், அங்கு எரி குண்டுத்தாக்குதல் நடந்ததாக சில காட்சிகள் பி.பி.சி.க்கு கிடைத்திருக்கின்றன.

"நேபாம்" என்று கூறப்படும் உடலை எரியச் செய்யும் குண்டைப் போன்ற ஏதோ ஒருவகையான குண்டுகள் பொதுமக்கள் மீது வீசப்பட்டதை இந்த வீடியோ காண்பிக்கிறது.

### சிரியா இரசாயன ஆயுதம் பயன் படுத்தியதாகச் சொல்வது முட்டாள் தனம்: புடின்

சிரியாவின் அரசாங்கம் டமாஸ்கஸ் புறநகர்ப் பகுதி ஒன்றில் இரசாயன ஆயுதங் களைக் கொண்டுத் தாக்குதல் நடத்திய தாக அமெரிக்கா குற்றம்சாட்டுவது அர்த்த மற்றது என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் கூறினார்.

சிரியாவின் அரசாங்கம் கிளர்ச்சிக்கார படைகளை எதிர்த்து அதிக வெற்றி பெற்றுவருகின்ற ஒரு நேரத்தில் மேற்குலக நாடுகள் சிரியா மீது இராணுவ ரீதியில் தலையிடுவதற்கான துருப்புச் சீட்டு மாதிரியான ஒரு காரியத்தை சிரியாவின் அரசாங்கம் செய்யும் என்று சொல்வது முட்டாள்தனமாக உள்ளது என்று அவர் கூறினார்.

தங்களது குற்றச்சாட்டை நிரூபிக்கும் விதமான ஆதாரங்கள் அமெரிக்காவிடம் இருந்தால் அதனை அவர்கள் ஐநா பாதுகாப்பு சபையின் முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்று புடின் தெரிவித்தார். "ஆதாரம் இருந்தால் அதனை ஐநா கண்காணிப்பாளர்களிடமும் ஐநா பாதுகாப்பு சபையிடமும் அதைக் காட்ட வேண்டும். அந்த ஆதாரம் இருக்கிறது ஆனால் அது ரகசியம் அதனை யாரிடமும் காண்பிக்க மாட்டோம் என்று சொன்னால் அது முறையல்ல. ஆதாரம் இருந்தால் காட்டவேண்டும். காட்டவில்லை என்றால் ஆதாரம் இல்லை என்றுதான் பொருள்" என்றார் ரஷ்ய அதிபர்.

சமாதானத்துக்கான நொபெல் பரிசு பெற்றவரான அமெரிக்க அதிபர் ஒபாமா, சிரியா மீது நடவடிக்கை எடுப்பதற்கு முன்பாக அதனால் அந்த நாட்டில் பாதிக் கப்படக்கூடிய மக்களின் கஷ்டங்களை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

சிரியா மீதான சர்வதேச இராணுவ நடவடிக்கையில் பிரிட்டிஷ் துருப்புகள் பங் கேற்க பிரிட்டிஷ் நாடாளுமன்றம் அனு- மதி மறுத்துள்ளது தனக்கு வியப்பை அளித்துள்ளதாக ரஷ்ய அதிபர் புடின் குறிப்பிட்டார்.

சிரியாவின் முக்கிய கூட்டாளி நாட- ான ரஷ்யாவும், சீனாவும், சிரியாவுக்கு எதிராக ஐநா பாதுகாப்பு சபை தீர்மானங்களை இயற்ற முயன்றன இரண்டு சந்தர்ப்பங்களிலும் அதனை எதிர்த்து வாக்களித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

### பிரான்ஸில் கருத்துக் கணிப்பு பிரஞ்சு அதிபர் பிரான்சுவா ஒல்லோந்த்

சிரியா அரசாங்கத்துக்கு தண்டனையாக அதன் மீது சர்வதேச இராணுவ நடவடிக்கை எடுப்பதையே தான் விரும்புவதாக பிரஞ்சு அதிபர் ஃபிரான்சுவா ஒல்லோந்த் கூறியி ருந்த நிலையிலும், அப்படியான இராணுவ நடவடிக்கையை பிரஞ்சு மக்கள் ஆதரிக்க வில்லை என்பதாக அந்நாட்டில் நடத்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பு காட்டுகிறது. ல பரீஸி யன் ஒஜுர்துயி என்ற செய்தித்தாள் நடத்திய கருத்துக் கணிப்பில் கலந்துகொண்டவர்களில் 64 சதவீதம் பேர் சர்வதேச இராணுவத் தலையீட்டை தாம் எதிர்ப்பதாகவும் 58 சதவீதம் பேர் அப்படி ஒரு இராணுவ நடவடிக்கையை நடத்தப்படுவதில் பிரஞ்சு அதிபர் ஒல்லோந்தை தாங்கள் நம்பவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

சிரியா மீது தாக்குதல் நடத்தப்பட்டால் மத்திய கிழக்கில் வன்முறைத் தீ கொளுந்து விட்டு எரிய ஆரம்பித்துவிடும் என இக்கருத் துக் கணிப்பில் கலந்துகொண்டிருந்தவர்களில் 40 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர்.

படைக்கட்டளைப் பீடங்களையும் இராணு வத்தளபாடக் களஞ்சியங்களையும் தாக்கி அழித்து சிரிய பலத்தை முடக்குதல்,

அமெரிக்க நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ள அதன் ஒரே கூட்டணி அரசாங்கமாக பிரான்ஸ் மட்டுமே இருந்து வருகிறது.

இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு முன்னால் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டிய அவசியம் அமெரிக்க அதிபருக்கோ, பிரஞ்சு அதிபருக்கோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் ஒபாமா அமெரிக்க காங்கிரசில் சிரியா மீதான மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலுக்கு ஆதரவு கோருகிறார். மத்திய தரைக்கடலில் நிலை எடுத்துள்ள அமெரிக்க நாசகாரிக் கப்பல்களிலிருந்து சிரியாவின் ஆசாட் அரசாங்கத்தின் படைக்கட்டளைப் பீடங்களையும் இராணுவத்தளபாடக் களஞ்சியங்களையும் தாக்கி அழித்து சிரிய பலத்தை முடக்குவதும், அமெரிக்க - மேற்கை ரோப்பிய பின்தள ஆதரவுடன் கடந்த பல மாதங்களாக போராடி வரும் பல்வேறு போராளி அணிகளின் வெற்றிகளுக்கு அடி கோலுவதும் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் ஒரு அமெரிக்க ஆதரவு பொம்மை அரசை சிரியாவில் நிறுவுவதுமே அமெரிக்காவின் இலக்காகும்.

இக்கட்டுரை பிரசுரமாகும் வேளையில் அல்லது அதற்கு பிந்தியோ அத்தகைய தாக் குதல்கள் நிகழலாம். சிரிய வெளிவிவகார அமைச்சர் சிரியா சரணடையமாட்டாது என்றும் எதிர்த்துப் போராடும் என்றும் அறைகூவல் விட்டுள்ளார்.

போர்ப்பதட்டம் மத்திய கிழக்கு பிராந்தி யத்தை அச்சுறுத்துகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இதுவரை ஒரு லட்சத்துக் கும் மேற்பட்ட சிரியர்கள் கொல்லப்பட்டிருக்கி றார்கள். இவர்களில் பாதி பேர் அப்பாவி சிவிலியன்கள். முப்பதாயிரத்துக்கும் மேற் பட்டோர் என்ன ஆனார்கள் என்றே தெரிய வில்லை. நாற்பது லட்சம் பேர் குடும்பம், வீடு, ஊரையெல்லாம் இழந்து உயிர் பிழைக்க நாட்டுக்குள் ஆங்காங்கே சிதறிப்போயிருக்கி றார்கள். ஓரளவுக்கு வசதி படைத்த பதி னெட்டு லட்சம் பேர் வெளிநாடுகளுக்கு பறந்துவிட்டார்கள். இப்பொழுது அமெரிக்க தாக்குதலுக்கு அஞ்சியும் ஆயிரக்கணக்கான சிரிய மக்கள் அயல் நாடுகளுக்கு தப்பியோடுகின்றனர்.

2010இல் தொடங்கி, அரபுநாடு- களை புரட்டிப் போட்ட 'அராபிய வசந்தம்' எனப்படுகிற மக்களிடையே ஏற்பட்ட புரட்சியுணர்வு மத்திய கிழக்கின் விதியை புரட்டிவிட்டுள்ளது. இன்னமும் எகிப்திலும் சிரியாவிலும் வசந்தம் பெரும் புயலாக வீசிக்கொண்டிருக்கிறது.

மத்திய கிழக்கில் சிரியாவை சுற்றி இஸ்ரேல், ஜோர்தான், ஈராக், துருக்கி ஆகிய 'எப்போதும் பிரச்சினை' நாடுகள் அமைந் திருக்கின்றன. நெருப்புக்கு நடுவில் எரியாத கற்பூரமாய் சிரியா மட்டும் எப்படி அமைதியாக இருக்க முடியும்?

மக்கள் தொகை கிட்டத்தட்ட இரண்டு

தொழில்நுட்பம்

# iPhone வைத்திருந்தால் eye கவனம்!




ஐபோனின் திரையில் ஏற்பட்ட வெடிப்பினால் அதிலிருந்து வெளியேறிய கண்ணாடித் துகள்கள் தனது கண்ணைத் தாக்கியதாக சீனப்பெண் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார். அப்பெண்ணின் ஐபோன் 5விலேயே வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

தான் சுமார் 40 நிமிடங்கள் அழைப்பொன்றில் இருந்ததாகவும் இதன்போது தனது ஐபோன் சூடாகுவதை உணர்ந்ததையடுத்து அழைப்பை துண்டிப்பதற்குமுயன்றதாகவும் இதன்போது திரை ஒழுங்காக செயற்படவில்லையெனவும், இதனையடுத்து போனின் வலதுப்பக்க மேல் மூலையில் வெடிப்பு ஏற்பட்டதாகவும், வெடித்துச் சிதறிய கண்ணாடித் துகள் தனது கண்ணைத் தாக்கியதாகவும் அப்பெண் குறிப்பிட்டுள்ளார்.


இதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் இதேபோன்ற சம்பவங்கள் சில பதிவாகின. சீனாவில் தனது ஐபோனை ரீசார்ஜ் செய்யும் போது கதைத்துக்கொண்டிருந்த பெண்ணொருவர் அது வெடித்தமையினால் உயிரிழந்த சம்பவம் அதில் ஒன்றாகும். அதேபோல் சீனாவில் தொடர்ந்து 4 மணி நேரம் அப்பிள் ஐபோனில் கேம்ஸ் விளையாடிய பெண்ணின் செயற்கை மார்பகம் வெடித்ததாக தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. எங்களில் பலரும் iPhone பாவனையாளர்களாக இருப்பதை பெருமையாக நினைக்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு இச்செய்தி சமர்ப்பணம்.

## அழித்த தகவல்களை மீட்பது எப்படி?



3G மற்றும் GSM போன்களின் சிம் காட்டில் குறிப்பிடத்தக்களவு தகவல்களை சேமித்து வைக்கக்கூடிய வசதி உண்டு. நாம் எமது சிம்மில் சேமித்த போன் புக் நம்பர்ஸ் கோல் கிஸ்ட்ரி மற்றும் sms போன்றவற்றை நாம் அழித்திருந்தால் Sim Card Recovery 3.0 எனும் மென்பொருளை உபயோகிப்பதன் மூலம் நாம் மீட்டு எடுத்துக்கொள்ளலாம்.

இவ் மென்பொருளை நாம் விலைகொடுத்து வாங்கினால் நாம் சிம் வாங்கியதில் இருந்து அழித்த அனைத்து தகவல்களையும் பெறலாம். Trail Virsion ஐ நாம் இலவசமாக உபயோகிக்கலாம். இதன்மூலம் நாம் கடைசியாக அழித்த இரு தகவல்களினை மாத்திரம் மீட்கலாம்.



## இலகுவான பரிமாற்றத்திற்கு உதவும் மென்பொருள்

வயர்லெஸ் வலையமைப்பான புளூடூத் ஆனது இன்றைய கணினி மற்றும் மொபைல் சாதன உலகில் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. இத் தொழில்நுட்பத்தின் மூலம் மேலும் இலகுவாகவும், விரைவாகவும் கோப்புக்களை பரிமாற்றம் செய்து கொள்வதற்கு Bluetooth File Transfer எனும் மென்பொருள் பெரிதும் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது.

விண்டோஸ் இயங்குதளங்களில் செயற்படக்கூடிய இம்மென் பொருளானது Drag & Drop முறை மூலம் விரைவாக கோப்புக்களை பரிமாற்றம் செய்ய உதவுகின்றது.

இதுதவிர கோப்புறைகளையும் பரிமாற்றம் செய்யும் வசதியையும் கொண்டுள்ளதுடன், அவற்றினை முகாமைத்துவம் செய்யக் கூடியதாகவும் காணப்படுகின்றது.



## ஓடியோ கோப்புக்களை தரவேற்றம் செய்வதற்கு

பிரபலமான சமூக வலைத்தளங்களான பேஸ்புக் மற்றும் கூகுள் பிளஸ் என்பன .exe மற்றும் ஓடியோ போன்ற சில கோப்புக்களை தரவேற்றும் வசதியினை தருவதில்லை. எனினும் கூகுள் பிளஸ் தளத்தில் ஓடியோ கோப்புக்களை தரவேற்றம் செய்வதற்கு மூன்றாம் நபர் இணையத் தளங்களை பயன்படுத்த முடியும்.

இதற்கிணங்க ஓடியோ கோப்புக்களை தரவேற்றம் செய்யக்கூடிய வசதியையும், பகிர்ந்துகொள்ளும் வசதியினையும் தரும் பிரபலமான Sound-Cloud தளத்தினை பயன்படுத்த முடியும். இதற்கு http://www.soundcloud.com தளத்திற்கு சென்று ஒரு கணக்கினை ஆரம்பித்து உங்கள் ஓடியோ கோப்பினை தரவேற்றம் செய்யுங்கள்.

குறித்த கோப்பு தரவேற்றம் செய்யப்பட்டதன் பின்னர் சேமித்துவிட்டு Share பொத்தானை அழுத்தி URL இனை பெற்றுக்கொள்ளவும்.

## மூளை நோயாளர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

முதன் முறையாக ஸ்டெம் செல்களை பயன்படுத்தி மனித மூளையை உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். விஞ்ஞான ஆராய்ச்சிக்காக நுண்ணுயிர் கிருமிகளை வளர்க்க பெட்ரி தட்டுகள் பயன்படுத்தப்படுகிறது. இந்த தட்டுகளில் முதன்முறையாக ஸ்டெம் செல்லை பயன்படுத்தி மனித மூளையின் ஒத்த பகுதியை உருவாக்கும் முயற்சியில் ஆஸ்திரிய நாட்டின் தலைநகரான வியன்னாவின் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். தற்போது அந்த பகுதி ஒன்பது வாரக் கருவினுடைய மூளையை ஒத்தது போன்ற தோற்றத்தில் மூன்றிலிருந்து நான்கு மில்லிமீற்றர் அளவில் வளர்ந்துள்ளது. இன்னும் முழுவதும் வளர்ச்சியடையாத போதிலும், மூளையைப் போன்றே முதுகு புறணி, முன்மூளையின் கீழ்ப்புறம் மற்றும் முதிராத ஒரு விழித்திரை போன்றவை அதில் உள்ளன. இதில் உருவாகியுள்ள பகுதிகள் சரியானவை என்ற போதிலும் அவை ஒருங்கிணைந்து உருவாகவில்லை என்று இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள துணைச் செயலர் ஜுவெர்கன் நோபிளிச் தெரிவித்துள்ளார்.

மேலும் மூளை பாதிப்பினால் ஏற்படக்கூடிய மனநோய் மற்றும் குழந்தைகளிடத்தில் காணப்படும் ஆட்டிசம் போன்ற வியாதிகள் குறித்து ஆராய்வதற்காகவே இந்த மாதிரிகள் உபயோகப் படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு
தினமுரசு நாளிதழ்
ரூ.10/= மட்டுமே
இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்
A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"




இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

# முட்டாள் வணிகன்!



ஓர் ஊரில், வணிகன் ஒருவன் இருந்தான். பணக்காரனான அவன் சரியான கஞ்சன். எனவே, முட்டாளான ஒருவனை வேலைக் காரனாக வைத்திருந்தான்.

வணிகன் ஒருநாள் அவனை அழைத்து, "நம் வண்டியை எடுத்துக்கொண்டு பனங் காட்டுக்குப் போ... அங்கே பலர் பனைமரங் களை வெட்டி வண்டியில் ஏற்றிக்கொண்டு இருப்பர். அதேபோல் நீயும் மரங்களை வெட்டிக்கொண்டு வா!" என்றான்.

"என்ன இவர்கள் எல்லாரும் முட்டாள்களாக இருக்கின்றனர். மரம் வெட்டும்போதே அதற்குக் கீழாக வண்டியை வைத்தால் மரம் அதில் சரியாக விழும். வீணாக ஒரு முறை பூமியில் கிடக்கும் மரத்தை வண்டியில் ஏற்ற வேண்டாமே!" என்று நினைத்தான்.

கோடாரியால் அந்தப் பனை மரத்தின் அடிப்பகுதியைப் பாதி அளவு வெட்டி முடித் தான் பிறகு, அந்த மரம் விழக்கூடிய இடத்திற்கு நேராக மாட்டுடன் வண்டியை நிறுத்தினான். மரம் வெட்டிக்கொண்டிருந்த மற்றவர்கள், "ஏன் இவன் இப்படிப் பைத்தியக்கார வேலை செய்கிறான்?" என்று நினைத்தனர்.

சிறிது நேரத்தில் அந்த மரம், "சடசட" வென்ற சத்தத்துடன் வண்டியின் மீது வேக மாக விழுந்தது. அவ் வளவுதான், வண்டி தூள் தூளானது. கால் உடைந்து குற்று யிரும் குலை உயிரு மாக மாடு துடித்துக் கொண்டிருந்தது. இதைக்கண்டு அவன் திகைத்துவிட்டான். தன் திட்டத்தில் என்ன குறை என்று அவனால் கண்டு பிடிக்க முடியவில்லை.

"என் திட்டம் நல்ல திட்டம்தான். வண்டிக்குத் தான் வலிமை இல்லாமல் போய்விட்டது" என்ற முடிவுடன் வீடு திரும்பினான். நடந்ததை அறிந்த வணிகன், "முட்டாளாக இருக்கிறாயே! இப்படி செய்யலாமா?" என்று வேலைக்காரனைத் திட்டினான். சில நாட்கள் சென்றன. திடீரென்று அந்த ஊரில் மண்ணெண்ணெய் பஞ்சம் வந்து விட்டது.

"தன்னிடம் இருக்கும் இருபத்தைந்து பீப்பாய் எண்ணெயைப் பதுக்கிவைத்தால் நிறைய இலாபம் கிடைக்கும்!" என்று நினைத்தான் வணிகன். உடனே வேலைக்காரனை அழைத்து, "கடையில் இருக்கும் மண்ணெண்ணெய் எல்லா வற்றையும் இன்றிரவு நம் தோட்டத்தில் பள்ளம் தோண்டிப் புதைத்துவிடு. யாருக்கும் தெரியக் கூடாது!" என்றான்.

வணிகன் சொன்னபடியே, நள்ளிரவில் பெரிய பள்ளம் தோண்டினான் வேலைக்காரன். ஒவ்வொரு பீப்பாயாக உருட்டிச் சென்று அதி லுள்ள எண்ணெயைப் பள்ளத்தில் ஊற்றினான். இப்படியே எல்லாப் பீப்பாய்களில் உள்ள எண்ணெயையும் ஊற்றி முடித்தான்.

இப்போது அவன் உள்ளத்தில், "இந்தக் காலிப் பீப்பாய்களை என்ன செய்வது? இது குறித்து முதலாளி ஒன்று சொல்லவில் லையே!" என்ற சிந்தனை எழுந்தது.

"சரி, அவரையே கேட்டுவிடுவோம்" என்ற எண்ணத்தில் நன் றாகத் தூங்கிக் கொண்டிருந்த வணிகனை எழுப்பினான். "ஐயா! நீங்கள் சொன்னபடி மண்ணெண்ணெயைப் பள்ளம் தோண்டிப் புதைத்து விட்டேன். காலி பீப்பாய்களை என்ன செய்வது" என்று கேட்டான்.

வணிகனுக்குச் சிறிதுசிறிதாக உண்மை புலப்படத் தொடங்கியது. ஐயோ, "மண்ணெண் ணெய் எல்லாம் பேச்சே!" என்று அலறிய வணிகன், அன்றே அவனை வேலையி லிருந்து நீக்கினான். கொஞ்சம் காசுக்கு சிக்கனம் பார்க்கப் போய் முதலுக்கே நஷ்டம் வந்ததை எண்ணி வேதனை அடைந்தான் அந்த முட்டாள் வணிகன்.

## வாரம் ஒரு திருக்குறள்



**அவை அறிதல்**

**ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்**
**ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு.**

விரிவான அறிவுத்துறைகளை அறிந்து உணர்கின்றவரின் முன்னே குற்றப்படுதல், ஒழுக்கநெறியிலிருந்து நிலை தளர்ந்து கெடுவதைப் போன்றதாகும்.

குறள்:716

## குறள் பாட்டு

# கூடாநட்பு

**இனம்போன் றினமல்லார்**
**கேண்மை மகளிர்**
**மனம்போல வேறு படும்.**
**திருக்குறள்**
**(பொருட்பால் – அதிகாரம் 83 – பாடல் 2)**

**மனம் ஒன்றிப் பழகுதல்போல்**
**வெளிவேஷம் போட்டுக்கொண்டு**
**உள்ளன்பு இல்லாமல்**
**நடிப்பாக நட்புக் கொள்வார்.**
**அப்படிப்பட்ட பேரெல்லாம்**
**தீய பெண்ணைப் போன்றவர்**
**தனது பயன் கருதியே**
**பழகும் தன்மை கொண்டவர்.**

# மிலேனியம் வீல்...

லண்டன் நகரிலுள்ள 'கோல்டன் ஐ' என்றழைக்கப்படும் ஆயிரமாண்டு சக்கரம் (மிலேனியம் வீல்) பற்றி சில தகவல்கள்:

இந்த சக்கரம் லண்டன் நகரிலுள்ள பிக்பென் கடிகார கோபுரத்தைவிட நான்கு மடங்கு உயரமானது.

இதை அமைப்பதற்கு 2100 டன் ஸ்டீல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த சக்கரம் நெதர்லாந்து நாட்டில் தயாரிக் கப்பட்டது.

உல்லாசப் பயணிகள் சவாரி செய்வதற்கு வசதியாக 32 பெட்டிகள் இதில் உள்ளன. பாதுகாப்பான இந்தப் பெட்டிகள் ஒவ்வொன்றிலும் ஒரே நேரத் தில் 25 பேர் (மொத்தம் 800 பேர்) உட்காரலாம்.

உயரே செல்லும்போது 40 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள இடங் களைக்கூட இதிலிருந்தபடி பார்க்க முடியும்.

சக்கரம் 135 மீற்றர் உயரம் கொண்டது. இந்தச் சக்கரத்தை வடிவமைத்தவர் களில் ஜூலியா என்ற பெண் எஞ்சினி யரும் உண்டு.

உலகின் மிகப் பெரிய சுழலும் சக்கரம் இதுதான். சக்கரத்தை சரியான கோணத்தில் நிலைநிறுத்து வதற்கு மட்டும் ஒரு வாரம் ஆயிற்று.

## குட்டீஸின் கைவண்ணம்



செ.லகீன், தரம் 04
யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்.

# நன்றிக்கடன்



தொலை பேசியைக் கண்டுபிடிக்க கிரஹமபெல் லுக்குப் பொரு ளாதார ரீதி யாக உதவி யவர் ஹப் பர்ட் என்பவர். அதற்கு நன்றிக்கடனாக கிரஹம் பெல் அவரது காதுகேளாத மகள் மேபெல் என்பவரைத் திருமணம் செய்துகொண்டார்.

தன் கணவரின் கண்டுபிடிப்பைக் கடைசி வரைக்கும் கேட்கும் பாக்கியம் மேபெல்லுக்குக் கிட்டவேயில்லை. ஆனால் தன் தந்தையிடம் சொல்லி பிலடெல்பியாவில் நடைபெற்ற பொருட்காட்சியில் இந்த சாதனத்தை வைக்க ஏற்பாடு செய்தவர் அவரே. கண் காட்சிக்கு வருகைபுரிந்த பலரும் பெல்லின் கண்டுபிடிப்பை உதாசீனம் செய்தனர். இறுதி யில் பிரேசில் நாட்டு அரசர் டாம் பெட்ரோ பாராட்டியதால் அது அரிய விஞ்ஞான கண்டுபிடிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

# நீள......மான....நத்தை!



ஒரு நத்தையின் நீளம் எவ்வளவு இருக்கும்? இந்தக் கேள்விக்கு 2 அங்குலம் அல்லது 3 அங்குலம் இருக்கலாம் என்று பதில் சொல் வீர்கள்.

ஆனால் ஓர் அடி நீளத்துக்கும் கூடுத லான நீளம் கொண்ட நத்தைகள்கூட இந்த உலகில் உண்டு. ஆபிரிக்காவில் காணப் படும் ராட்சத நத்தைகள் அதிகபட்சமாக 35 சென்ரிமீற்றர் நீளம்வரை வளர்கின்றன. எடை ஒரு கிலோ வரை இருக்கும். இது சத்தமும் எழுப்பும். இந்த நத்தையை செல்லப் பிராணியாகக்கூட வளர்க்கிறார்கள்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்




**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 16.09.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1008**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1006**

யோகராசா சுதர்சினி,
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

பரிசுக்குரியவர்: 1006

பாராட்டுக்குரியவர்கள்

01. மு.பானுஜன், செம்பியன்பற்று.
02. ஆ.ராகுலன், பிரதான வீதி, அரியாலை.
03. எம்.எம்.இஷாரா, முஸ்லிம் தெரு, யாழ்ப்பாணம்.
04. கு.அம்சியா, கண்டி வீதி, சாவகச்சேரி.
05. கொ.விஷ்ணு, கோப்பாய் மேற்கு, கோப்பாய்.
07. ஆ.அனோஜன், நுவரெலியா.
08. தா.அஜந்தா, மாசார், பளை.

# வினோத நம்பிக்கை

வாயைத் திறந்து வைத்துக்கொண்டு தூங்குவது ஆபத் தானது என்ற நம்பிக்கை ஜேர்மனி, டிரான்ஸில்வேனியா மக்களுக்கு இருந்தது. தூங்குபவரின் வாய்வழியாக எலியைப் போல் அவருடைய ஆத்மா வெளியேறும்.

வெளியில் செல்லும்போது அதற்கு ஆபத்து ஏதேனும் ஏற்படலாம். அதனால் திரும்பிவர முடியாமல் நிரந்தரமாக வெளியே தங்கிவிடலாம். அப்படித் தங்கினால் தூங்குபவர் எழுந்திருக்கவேமாட்டார். என்ற வினோத நம்பிக்கை அந்த மக்க ளிடையே இருந்தது.

## ரூஸோவின் முரண்பாடு



தத்துவஞானி ரூஸோ குழந்தைகளை வளர்ப்பது பற்றி மற்றவர்களிடம் எடுத் துச் சொல்வதில் மிக ஆர்வமாக இருந் தார். ஆனால் அவரது 5 குழந்தை களையும் கைவிட்டுவிட்டார். அவர்கள் வளர்ந்தது அநாதை இல்லங்களில்.

## மல்லட் ஒருவகை மீன்

மல்லட் என்ற இந்த மீன் வகை உயிரோடு இருக்கும்போது சிவப்பு பட்டைகளுடன் பச்சை அல்லது மஞ்சள் நிறத்தில் காணப்படும். அதன் உடல் நிறம் சிவப்பாக மாறினால் அது இறந்துவிடும்.

## சீனப் பேரரசின் அந்தப்புரம்

கி.மு.246 -210 வரை வாழ்ந்தவர் முதல் சீனப் பேரரசரான சின் ஷி ஹீவாங் - லீ. இவருக்கு 13,140 மனைவிகள் இருந் தனர்.

அவர்கள்மூலமாக இவருக்கு 2800 குழந்தைகள். இவர் அரண்மனையில் 10,000 அறைகள் உண்டு. 27 வருட காலத்தில் எந்த அறையிலும் இருமுறை இவர் படுத்ததில்லை.

தொகுப்பு: கு.துவிஷா

பெண்கள் தன் முன்னால் அடங்கிப் போவதை தன் மூர்க்கத்தின் முன் திணறித் துடிப்பதை காண்பதில் அவனுக்கு தனி இன்பம்.

அதனால் பேச்சிலும் ஐம்பமடித்து மிரட்டுவான். அப்படித்தான் அந்த வார்த்தையையும் முதலில் கூறினான்.

ஆனால் எப்போதும் இல்லாத படிக்கு அந்த வார்த்தைகள் அவனுக்கு திரும்பத் திரும்பக் கேட்ட வண்ணம் இருந்தன.

"நான் சொல்வதை இந்த நாடே ஒரு நாள் கேட்கப்போகிறது"

"நான் சொல்வதை இந்நாடே ஒரு நாள் கேட்கப்போகிறது"

நான் சொல்வதை இந்த நாடே ஒருநாள்...

சட்டென்று தலையை உதறிக் கொண்டு, அவளிடம் இருந்தும் தன்னை உதறிக்கொண்டு எழுந்து விட்டான் இடி அமீன்.

இடைநடுவே எழுந்தவனை தடுத்தாள் அவள், கோபமாக அறைப்பட்டாள்.

"போடி எழுந்து" என்றான். தன் உடைகளை அணிந்துகொண்டு அந்த அறைக்குள் குறுக்கும் நெடுக் குமாக நடந்துகொண்டிருந்தான்.

"ஏன் முடியாது. நினைத்தால் முடியாதது என்ன இருக்கிறது? முடியும்! நான் இந்த நாட்டின் தலைவகான முடியும்"

மேசையில் ஓங்கிக் குத்தினான் அமீன். அந்த பழைய மேசை பொசுக்கென்று உடைந்ததில் சிராம்பு ஒன்று அமீனின் கையைக் கிழித்தது இரத்தம் கசிந்தது.

கசிந்த இரத்தத்தை பார்த்து அமீன் தன் வழக்கமான பாணியில் சிரித்தான்.

"இரத்தம் சிந்தாமல் வெற்றியில்லை" உரத்துக்

நேரில் அழைத்தர்கள்.

அவனது நெடும் உயரமான, கம்பீரமான, காட்டு யானை போன்ற தோற்றத்திற்கு உடனே வேலை கிடைத்தது. சாஜனாக நியமிக்கப்பட்டான்.

தனது பிரிவில் உள்ளவர்களுக்கு குத்துச் சண்டையும் பயிற்றுவிப்பான் இடி அமீன். பலருக்கு இடி அமீனுடன் மோதிப் பற்கள் போய்விட்டன.

மேலதிகாரி ஒருவருக்கு இடி அமீனுடன் மோதிப் பார்க்கும் ஆசை வந்து விட்டது.

படையாட்கள் முன்பாக சண்டை தொடங்கியது.

"என்னிடம் ஒரு கெட்ட பழக்கம் இருக்கிறது" என்று சண்டை தொடங்க முன்னரே பீடிகை போட்டான் அமீன்.

"என்ன பழக்கம்?" அதிகாரி முறைத்தபடி கேட்டான்.

"சண்டைபோட ஆரம்பித்தேன் என்றால், முன்னால் நிற்பது மேலதிகாரி, கீழ் அதிகாரி என்றெல்லாம் என் பாழாய்ப்போன கண்களுக்கு தெரிவதில்லை!"

"அப்படியா! நானும் அப்படித்தான் வா!" என்றான். மேலதிகாரி, அவனும் ஒரு குத்துச் சண்டை வீரன்தான்.

சண்டை தொடங்கியது. அதிகாரிதான் முதலில் ஒரு குத்துவிட்டான். அமீனின் வயிற்றில் விழுந்தது.

அமீன் ஒரு குத்தை அவனது முகத்தை நோக்கி இறக்க, அதிகாரி தடுத்து, அமீனின் நெஞ்சில் குத்திவிட்டான்.

படையாட்கள் தம்மை மறந்து ஆரவாரித்தனர். அமீனின் கறுத்தமுகம் கோபத்தில் சிவந்துவிட்டது.

மிகமோசமான கெட்ட வார்த்தை ஒன்றை அமீன் உபயோகப்படுத்தினான். அதிகாரியின் தாயை கேவலப் படுத்தியது அந்த வார்த்தை.

அதனால் அதிகாரி பொறுமை இழந்தான். ஆத்திரம் அவன் கண்களை மறைத்தது.

விலக்கிவிட முற்பட்ட இரண்டுபேர் அவனது கால்களால் உதைபட்டு ஒரு புறமாய் ஒதுங்கினார்கள்.

தன் வழக்கமான பாணியில் அதிகாரியின் இடது காலை ஒரு உலுப்பு உலுப்பி சட்டென்று மடக்கி முறித்த முறிப்பில், அதிகாரி எழுப்பிய அவலக்குரல் அந்த முகாம் முழுக்க கேட்டது.

யாரும் அமீனை எதிர்க்கத் துணியவில்லை. அந்த அதிகாரிக்கு விசுவாசமான படையாட்கள்கூட இந்த இராட்சதனிடம் வாங்கிக் கட்ட முடியாது! என்று இருந்துவிட்டனர்.

அதன்பின்னர் றை.:பிள்ஸ் பிரிவில் அமீனுக்கு பலத்த மரியாதை.

அமீனிடம் சண்டைபோட்டு முறிபட்டவன் பிரபலமானவன். வீராதி வீரன் என்று புகழப்பட்டவன்.

உண்மையில் அவன் வீரன்தான். குத்துச் சண்டையில் அமீனைவிட நுட்பம் தெரிந்தவன்தான்.

அமீனின் நல்ல நேரம், அதிகாரி கோபத்தில் நிதானமிழந்து தோற்றுக் போனான்.

அதிகாரி வீராதி வீரன் என்பதால், அவனை அடித்த அமீன் வீராதி வீரசூரன் என்று பயத்தோடு கருதப் பட்டான்.

உயர் அதிகாரிகள் மத்தியிலும் அந்த ஒரே நாளில் பிரபலமானான் அமீன்.

ஒரு இடத்தில் அமர்ந்திருக்கும் வாடிக்கையெல்லாம் கிடையாது. காலில் சக்கரத்தை மாட்டிவிட்டது மாதிரி சுறுசுறுப்பாக ஓடுப்பட்டுத் திரிவதுதான் அமீனின் ஸ்டைல்.

அறையில் அமர்ந்திருந்து வாய் கேளு மட்டும் கதைபேசுவது அமீனுக்கு பிடிக்காது.

"அதிகாரிகள் என்றால் படையாட்கள் எட்டடி பாய்ந்தால், நாம் பதினாறடி பாயவேண்டும்" என்பான்.

அமீனின் சுறுசுறுப்பால் துரிதமாக பதவி உயர்வுகள் அவனைத் தேடிவந்தன.

பாவைகளும் தேடிவந்தனர். மாலையானால் அழகான பெண்களுடன் கும்மாளமடிக்க ஆரம்பித்து விடுவான்.

இசை நிகழ்ச்சிகள், களியாட்டங்கள் என்று மாலையில் அமீனின் முகாமில் ஒரே கொண்டாட்டம்தான்.

"ஆடடி!" என்பான் தயங்கினால் "அவிழடி" என்பான்.

அத்தனைபேர் முன்னிலையில்



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

உண்மைத் தொடர்...

அதிர் இடி 02

கூறிக்கொண்டான்.

கண்ணாடி முன்னால் நின்று தன் உருவத்தைப் பார்த்தான்.

அவன் உருவப்பொலிவும், முகத் தோற்றமும் அவனுக்கு பிடித்திருந்தது.

தன்னைத்தானே காதலித்தான். தன்னைத்தானே பெருமையாக நினைத்தபடி கண்ணாடி முன் நின்று மூன்று தடவைகள் கூறிப்பார்த்தான்.

"உகண்டா ஜனாதிபதி
இடி அமீன்
உகண்டா ஜனாதிபதி
இடி அமீன்
உகண்டா ஜனாதிபதி
இடி அமீன்!"

இப்போது சிரித்தான். உகண்டா மக்களின் நிம்மதியை பறிக்கப்போகும் முன்னறிவிப்புத்தான் அந்தச் சிரிப்பு என்று அறிந்து காலமும் சிரித்தது.

"இந்த நாடே நான் சொல்வதை ஒருநாள் கேட்கப் போகிறது" என்று கூறிய இடி அமீனுக்கு காலமும் கை கொடுத்தது.

ஜெர்மன் அதிபராக இருந்து உலக மகா சர்வாதிகாரியாக மாறியவன் ஹிட்லர்.

படையில் சாதாரண படையாளாகச் சேர்ந்துதான் ஜேர்மன் அதிபராக மாறினான் ஹிட்லர் என்று இடி அமீன் அறிந்திருந்தான்.

கிங்ஸ் ஆபிரிக்கன். றை.:பிள்ஸ் பிரிவில் சேர விண்ணப்பித்தான்..

. நிதானமாக எதிரியின் அசைவுகளை கணக்கிட்டு சண்டையிட ஆரம்பித்தவன், இப்போது நிதானம் இழந்து, தறிகெட்ட வேகத்தில் அமீனை நோக்கிப் பாய்ந்தான்.

அமீனின் கோபம் அவன் கண்ணை மறைக்குமளவுக்கு அடர்த்தியானதல்ல. அதனால் அந்த அதிகாரியின் நிதானம் இழந்த பாய்ச்சலை கணக்கிட்டு, அதிகாரியின் முகத்திலும், நெற்றியிலும் ஓங்கி இரு குத்துக்கள் விட்டான்.

அடியற்ற மரம்போல தடாலென்று பின்புறமாக சரிந்து பிடரி தரையில் மோத விழுந்தான் அதிகாரி.

விழுந்தவனின் கால்களை ஒன்றாகச் சேர்த்துப்பிடித்து மடக்கி அவன் வயிற்றிலேயே இடித்தான் அமீன்.

அதிகாரி முனகினான். அமீனை



எப்படி அவிழ்ப்பது? ஆடத் தொடங்க, அமீனின் இடிச்சிரிப்பு ஒலிக்கும்.

அமீனின் மேலதிகாரி ஒருவரது மனைவி அமீனை விரும்பி அழைத்தாள். ஒரே இரவில் அமீன் பதவி உயர்ந்தான்.

அவள் தன் கணவனிடம் கூறி அமீனுக்கு பதவி உயர்வு பெற்றுக் கொடுத்துவிட்டாள்.

அதிகாரியின் மனைவியுடன் அமீன் ஒருநாள் மாலையில் சந்தோசமாக இருந்தபோது, அவள் "உனக்கு பதவி உயர்வு பெற்றுத் தந்தவள் நான். எப்போது அழைத்தாலும் நீ வந்தே ஆகவேண்டும்!" என்றாள்.

அவளது கழுத்தை முகர்ந்து கொண்டிருந்த அமீனுக்கு கோபம் வந்துவிட்டது ஒரே கடியாக கழுத்தில் கடித்துவிட்டான்.

அவள் பயந்துபோய் அபயக் குரல் எழுப்பி தன்னை விடுவித்த போது, அமீனின் பற்கள் பதிந்த இடத்தில் கசிந்து கொண்டிருந்த இரத்தம். அவள் அழத்தொடங்கி விட்டாள். அவள் தாடையைப் பிடித்த அமீன் இரத்தம் கசிந்த அவளது தொண்டைப் பகுதியை தன் நாவால் வருடினான்.

(தொடரும்)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**வாசகர்களின் கவனத்திற்கு...**
முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக.
(முரசு 1021 - கு.எ. போ. - 528) குறுக்கெழுத்துப் போட்டியில் இருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 1000/= ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை அறியத்தருகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 537

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | |
| 13 | 14 | | 16 | | 18 |
| 19 | 20 | 21 | 22 | | 24 |
| 25 | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **16.09.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 537
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-169, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 535 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப 1 | கு 2 | த் 3 | வு 4 | த 5 | றி 6 |
| ண் 7 | தி 8 | | வ 10 | ம் 11 | |
| டு 13 | | தி 15 | க 16 | ப 17 | ம் 18 |
| கா 19 | டா 20 | ன 21 | | டி 23 | கோ 24 |
| ப 25 | ம் 26 | யா 27 | ன 28 | | ரி 30 |
| ய 31 | | ம் 33 | தி 34 | ர 35 | மே 36 |

**இடமிருந்து வலம்**

01. உரிமைப்பேறு. (குழம்பியுள்ளது)
07. ஆரவாரம்.
13. அழகு. நன்மை
19. "தண்ணீரும்.... தார்வேந்தன் சோழனே மன்னாவ துஞ் சோழ மண்டலமே" கம்பருடைய அரைப்பாடல்.
25. மணம். கடைசி எழுத்து விடுபட்டுள்ளது. (திரும்பியுள்ளது)
28. கிருஷ்ணன். கடைசி எழுத்து விடுபட்டுள்ளது. (குழம்பியுள்ளது)
31. காதல். இப்படியாம். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. ஆஸ்துமா நோய்.
02. ஞாயிற்றுக்கிழமை. (குழம்பியுள்ளது)
03. மேடு ; பருத்தது.
04. ஆசாபாசம். (குழம்பியுள்ளது)
05. நிறுத்து.
18. "மயிர் நீப்பின் உயிர்வாழாக் ...... அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்" என்றார் வள்ளுவர்.
29. கருவி ; மாமன்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 535 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

J.மேரிதிரேசா, பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. வி.சுரேந்திரன், இல.91, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
02. ந.இரவீந்திரன், மஞ்சத்தடி, இணுவில்.
03. அ.யசிதரன், 50, கனகரட்ணம் வீதி, யாழ்ப்பாணம்.
04. அ.அபிநாஷ், மட்டுவில் தெற்கு, மட்டுவில்
05. வி.செந்தூரன், உடுவில் வடக்கு, உடுவில்.
06. த.மேகலா, ஜின்னாநகர், திருகோணமலை.
07. ரீ.மாதவன், பிரதான வீதி, மட்டக்களப்பு.
08. வி.ரமணன், 3ஆம் குறுக்குத்தெரு, கிளிநொச்சி.
09. தா.கபிலன், திருநாவற்குளம், வவுனியா.





# அடங்காதவன் அஜித்

விஷ்ணுவர்தன் இயக்கத்தில் ஆரம்பம், சிறுத்தை சிவா இயக்கத்தில் வீரம் படங்களில் நடித்துவருகிறார் அஜித். இந்நிலையில் தற்போது சிங்கம்-2 வை இயக்கிய ஹரி அடுத்து அஜித்தை இயக்கப்போவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அப்படத்துக்கு 'அடங்காதவன்' என்று பெயர் வைத்திருக்கிறார்களாம். அடங்காதவன் என்றால் யாருக்கும் அடங்காதவன் என்பது பொருளாம். அஜித்தின் வாழ்க்கையை சுட்டிக்காட்டும் வகையில் இந்த டைட்டில் வைக்கப்பட்டுள்ளதாம்.

ஆனால் அஜித் தரப்பில் இருந்தோ, இயக்குனர் ஹரி தரப்பில் இருந்தோ இப்படம் பற்றிய அதிகாரபூர்வ தகவல் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. அவர்கள் சொல்லும் தகவலைப் பொறுத்துத் தான் இந்த தலைப்பு உண்மைதானா என்பது தெரியவருமாம்.

# மௌனம் கலைந்தார் கனவுக் கன்னி

நயன்தாரா சாயலில் இருக்கும் நஸ்ரியா தான் இப்போது கோடம்பாக்கத்தின் கனவுக்கன்னி. ஜெய்யைக் காதலிக்கிறார் என்று கிசுகிசு வந்த பிறகும், அதைப்பற்றி எல்லாம் கவலைப் படாமல் ஆர்யா, தனுஷுடன் டூயட் பாடிக்கொண்டிருக்கிறார். சொந்த வாழ்க்கையில வந்த காதல் விண்ணப்பங்களைப் பத்தி சொல்லுங்கன்னு கேட்டா, "நான் ரொம்ப சின்னப் பொண்ணுப்பானு ஒதுங்கப் பார்க்கிறாராம். சொல்லியே ஆகணும்னு திரும்பத் திரும்பக் கேட்டதும் தான் இரகசியம் உடைத்துள்ளார். நான் ரெண்டாங் கிளாஸ் படிச்சுக்கிட்டு இருந்தபோதே ஒரு பையன் லவ் லெட்டர் கொடுத்து ஓடிட்டான். அதுல இருந்து நிறைய விண்ணப்பங்கள் வர ஆரம்பிச்சது. எல்லாத்தையும் ஞாபகம் வச்சிருக்கேன். ஆனால் எதையும் கவுண்ட் பண்ணலை. எப்படியும் ஐம்பதைத் தாண்டி இருக்கும். இப்பவும் நிறைய விண்ணப்பங்கள் வந்துக்கிட்டே இருக்கு. என் ஒவ்வொரு பிறந்தநாளுக்கும் பொக்கே, கார்டு, கிப்ட்டை என் வீட்டு வாசல்ல வச்சிட்டு போறாங்க. அது யார்னு இன்னும் தெரியலை. ஆனா அந்த கிப்ட்டை பத்திரமா வெச்சிருக்கேன். அந்த கிப்ட் பார்ட்டி யார்னு உங்களுக்குத் தெரிஞ்சா சொல்றீங்களான்னு? கேட்கிறாராம் நஸ்ரியா.

# உலகில் ஒரு சூரியன் சினிமாவில் ஒரு சூப்பர் ஸ்டார்

கோவை ஆர்.எஸ்.புரம் அர்ச்சனா திரையரங்கில் வருத்தப் படாத வாலிபர் சங்கம் என்ற சினிமாவின் பாடல் சி.டி. மற்றும் டிரைலர் வெளியீட்டு விழா நடைபெற்றது. பாடல் சி.டி.யை சிவகார்த்திகேயன் வெளியிட பாபா திரையரங்கு உரிமையாளர்கள் பாலசுப்பிரமணியம், ரவீந்திரன், காஸ்மா திரைப்பட விநியோகஸ்தர் சிவா ஆகியோர் பெற்றுக்கொண்டனர். ரசிகர்கள் மத்தியில் பேசிய சிவகார்த்திகேயன் சென்னையில் மழை பெய்யும்போதுகூட வியர்க்கும். ஆனால் கோவையில் எப்போதுமே ஜில்லென்று இருக்கிறது.

இந்த மக்களின் அன்பும், பாசமும் வித்தியாசமாக உள்ளது. இந்த படத்தின் சி.டி. மற்றும் டிரைலர் கோவை, சேலம், திருச்சி, ஆகிய இடங்களில் வெளியிடப்பட இருந்தது. அதன்படி கோவையில் முதலில் வெளியிடப்பட்டுள்ளது.

வருத்தப்படாத வாலிபர் சங்கம் படம் ஹொலிவூட் படம்போல் இருக்காது. குடும்பத்துடன் தைரியமாக பார்த்து ரசிக்கலாம். செப்டம்பர் 6ஆம் திகதி இந்த படம் வெளியாகிறது. படம் 100 நாட்கள் கண்டிப்பாக ஓடும். 100ஆவது நாளில் நாம் மீண்டும் சந்திப்போம் என்று கூறியுள்ளார்.

சிவகார்த்திகேயன் பேசியபோது, அரங்கில் இருந்தவர்கள் இளைய சூப்பர் ஸ்டார் சிவகார்த்திகேயன் என்று கோஷமிட்டுள்ளனர். அதற்கு பதிலளித்த சிவகார்த்திகேயன், என்னை சூப்பர் ஸ்டார் என்று அழைக்காதீர்கள். உலகில் ஒரே சூரியன், ஒரே சந்திரன்தான். அதுபோல் ஒரே சூப்பர் ஸ்டார்தான்.

எனக்கு கைதட்டி ஆரவாரம் செய்தது உற்சாகமாக உள்ளது. நல்ல படம் தருவேன் என்ற நம்பிக்கை உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# கடலின் டுவே இ...

பிரபல மெவூட் இயக்குநர் ... வர்மா இயக்கில் உருவாகியு... நான்தான்டா.நில் எங்கேயும் ... நாயகன் சர்ஜந்த் நாயகனாக... புதுமுகம் அகா நாயகியாக... நடித்துள்ளனதேவி ஸ்ரீதேவி ச... தயாரித்துள்ள...

இஒரு குற்றம் செய... முன் அதுபற்பாதுமான அள... தகவல்களைகரித்து, ஏற்கன... தவறாய்ப் மேற்றிலிருந்து பாடங்கள் கடகொண்டு மிக ந... உபகரணங்க உதவியோடு ம... தெளிவாய் ங்கள் செய்யமுடி... அப்படி ஒருஙினைத்துச் செய... போது சட்டமும், சமூகத்தை... எவ்வாறு அபாதிக்கிறான் எ... பற்றிய படம்.

இதின் படப்பிடிப்பு அனைத்தும் வடைந்த நிலைய... படம் வெளிக்கு தயாராகிவிட்... இந்நிலையிதத்தின் இசை வெ... விழாவினை நியாசமான முறை... வெளியிட்டு ந்தியுள்ளனர். அத... சென்னையிஙந்து அந்தமான் ... கப்பலில் 'நன்டா' படத்தின் ... வெளியிட்டுள். இதன் ஓடியோ... கப்பலின் சே வெளியிட, அத... தயாரிப்பாளர்.பி.சௌத்ரி மற்று... இயக்குனர் ராஜா பெற்றுக்கொ... இந்த விழாபாது இயக்குனர்க... விக்ரமன், ஆசெல்வமணி உ... பலர் துகொண்டனர்.

# ...ட்டி மேவும் நாயகள்

தீபிகா படுகோனே, ரன்பீரின் முன்னாள் காதலி ஆனால் தற்போது கத்ரீனா காதல் சுடராக வலம்வருகிறார்.

இந்நிலையில் தொழில் ரீதியாகவும் இருவருக்காட்டி நிலவிவருகிறதாம். கடந்த ஆண்டு கத்ரினாவின் வெளியான 'எக் தாக டைகர்' மற்றும் 'ஜாப் ஹார்' ஆகிய படங்கள் 319.63 கோடி வசூலை எட்டியதுன முறியடிக்கும் விதமாக தீபிகாவின் சென்னை எக்ஸ்னது 500 கோடி வசூலை எட்டியுள்ளது. மேலும் இந்த அவர் வசம் கோச்சடையான் மற்றும் ராம்லீலா உங்கள் உள்ளன. தற்போது கத்ரினாவின் வசம் எந்தப் படம் இல்லையாம். இதனால் இவர்கள் இருவரும் மறை போட்டியினை சந்தித்துவருவதாக பொலிவூட் வட்ட தெரிவிக்கின்றன.

# பேச மறுக்கிறார் டஸி

ஹொலிவூட் கதாநாயகி கேதி சாகப் நடித்திருக்கும் ரிட்டிக் என்ற படம் இந்தி, தமிழ், தெலுங்கில் டப்பிங் ஆகிறது. இதில் கேதிக்கு டப்பிங் குரல் கொடுக்க நம்மூர் கதாநாயகிகளை தேடியுள்ளனர். டாப்ஸியின் குரல் நடிகையின் குரலுக்கு பொருத்தமாக இருப்பது தெரிந்ததைத் தொடர்ந்து அவரை அணுகி டப்பிங் பேசுள்ளனர். தான் நடிக்கும் படங்களிஷ்பை ஒரு மாதம் ஒத்திவைத்துப்பிங் பேச ஓ.கே. சொல்லியுள்ளாராம்.

ஆனால் சிநேரத்துக் கெல்லாம் தனது மாற்றிக்கொண்ட டாப்ஸி, நேரமில்லைபெல்டி அடித்துள்ளாராம். உக்குழுவினரோ டப்பிங் பேசுவது குண்டும் டாப்ஸியிடம் பேசப்படும் எவித்துள்ளனர்.







மத கஜ ராஜா



வானவராயன்

# கடலின் நடுவே இசை வெளியீடு

பிரபல பெலிவூட் இயக்குநர் ராம்கோபால் வர்மா இயக்கத்தில் உருவாகியுள்ள படம் நான்தான்டா. இதில் எங்கேயும் எப்போதும் நாயகன் சர்வானந்த் நாயகனாகவும், புதுமுகம் அணகா நாயகியாகவும் நடித்துள்ளனர். தேவி ஸ்ரீதேவி சதீஷ் தயாரித்துள்ளார்.

இன்று ஒரு குற்றம் செய்யும் முன் அதுபற்றி போதுமான அளவு தகவல்களை சேகரித்து, ஏற்கனவே தவறாய்ப் போனவற்றிலிருந்து பாடங்கள் கற்றுக்கொண்டு மிக நவீன உபகரணங்கள் உதவியோடு மிகத் தெளிவாய் குற்றங்கள் செய்யமுடியும். அப்படி ஒருவன் நினைத்துச் செயற்படும் போது சட்டத்தையும், சமூகத்தையும் எவ்வாறு அவன் பாதிக்கிறான் என்பதைப் பற்றிய படம் இது.

இப்படத்தின் படப்பிடிப்பு அனைத்தும் முடிவடைந்த நிலையில் படம் வெளியீற்கு தயாராகிவிட்டது. இந்நிலையில் படத்தின் இசை வெளியீட்டு விழாவினை வித்தியாசமான முறையில் வெளியிட்டு நடத்தியுள்ளனர். அதாவது சென்னையிலிருந்து அந்தமான் செல்லும் கப்பலில் 'நானான்டா' படத்தின் ஆடியோவை வெளியிட்டுள்ளனர். இதன் ஓடியோ சி.டி.யை கப்பலின் கேப்டன் வெளியிட, அதனை தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி மற்றும் இயக்குனர் பாரதிராஜா பெற்றுக்கொண்டனர். இந்த விழாவின்போது இயக்குனர்கள் விக்ரமன், ஆக.செல்வமணி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# செய்தியை மறுக்கிறார் அஞ்சலி

நடிகை அஞ்சலிக்கும், தமிழகத்தின் பிரபல அரசியல் தலைவரின் மருமகனுக்கும் இரகசிய திருமணம் என்றும் இருவரும் அமெரிக்காவில் செட்டிலாகிவிட்டதாகவும் தகவல்கள் வெளியாகின.

குறிப்பாக தான் நடித்த 'மதகஜராஜா' படத்தின் தெலுங்கு டப்பிங்குக்குக கூட அவர் வரமறுப்பதாகவும் எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை என்றும் படத்தின் கதாநாயகனும், தயாரிப்பாளருமான விஷாலே வருத்தப்பட்டிருந்தார்.

இப்போது இந்த செய்திகளுக்கு விளக்கம் தெரிவித்துள்ளார் அஞ்சலி. சமீபத்தில் சுந்தர்.சி இயக்கத்தில் விஷாலுடன் நான் நடித்த 'மதகஜராஜா' படத்துக்கு டப்பிங் பேச மறுத்ததாகவும், விளம்பர நிகழ்ச்சிகளுக்குவர மறுப்பதாகவும், அரசியல் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருடன் இணைத்தும் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இவை அனைத்தும் முற்றிலும் தவறானவை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# சம்பளத்தை தீர்மானிக்கிறது கதை

'தேசிங்கு ராஜா' காமெடிப் படம். அதைத் தாண்டி அதில் லாஜிக் பார்க்க வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். இரண்டரை மணி நேரம் சிரித்துவிட்டு போக வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் எடுக்கப்பட்ட படம். அந்த இலக்கை படம் அடைந்திருப்பது சந்தோசம். நான் ஒரு கோடிக்கு மேல் சம்பளம் கேட்பதாக வரும் செய்திகளில் உண்மையில்லை. எனது படங்களின் மார்க்கெட்படி, தயாரிப்பாளர்கள் கொடுப்பதை வாங்கிக் கொள்கிறேன். சில நேரங்களில் கதைகள் சம்பளத்தை தீர்மானிக்கிறது. நல்ல கதை வரும்போது தயாரிப்பவர்களுக்கு பெரிய சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கும். என்னால் கதையையும்விட முடியாது. அதனால் அவர்கள் கொடுக்கும் சம்பளத்தில் நடிக்கிறேன்.







# முற்பணத்தை கொடுக்க மறுக்கிறாராம் நயன்!

தெலுங்கு நடிகர் கோபிசந்தும், நயன்தாராவும் சேர்ந்து ஒரு படத்தில் நடிப்பதற்கு ஒப்பந்தமாகியுள்ளனர். இந்த படத்தை முதலில் பட்டத்து யானை இயக்குனர் பூபதி பாண்டியன் இயக்குவதாக இருந்ததாம். ஆனால் அவருக்கும், தயாரிப்பாளருக்கும் இடையே பிரச்சினை வெடித்ததால் படம் கைவிடப்பட்டது.

இதையடுத்து கொடுத்த முன்பணத்தை திருப்பிக் கொடுக்குமாறு நயன்தாராவிடம் கேட்டுள்ளார் தயாரிப்பாளர். அதற்கு நயன்தாரவோ பணம் என்னிடமே இருக்கட்டும். வேண்டும் என்றால் அதே முன்பணத்தில் என்னை வைத்து வேறு ஒரு படம் எடுங்களேன் என்றாராம். அதன்பிறகு தயாரிப்பாளர் புதிய இயக்குனரை பிடித்து வேறு ஒரு கதையை படமாக எடுக்கிறாராம்.

# ...ட்டி ...மேனும் நாயகள்

...து
...றார்.
...கவும் இருவருக்குபாட்டி
... கத்ரினாவின் நமல்
...றும் 'ஜாப் ஹாய்ன்'
...சூலை எட்டியது. ...னை
...சென்னை எக்ஸ்பிரானது
... மேலும் இந்த ...
...ும் ராம்லீலா ஆபடங்கள்
... வசம் எந்தப் படநம்
...இருவரும் மறைடு
...பொலிவூட் வட்டாள்

# ...ார் டாஸி

...கி டப்பிங் பேச டுள்ளனர். தான்
...கும் படங்களின் பிடிப்பை ஒரு
...ம் ஒத்திவைத்துவ்டப்பிங் பேச ஓ.கே.
...ல்லியுள்ளாராம்.
ஆனால் சிலரி நேரத்துக்
...லாம் தனது மனமாற்றிக்கொண்ட
...ஸி, நேரமில்லை ... பல்டி
...த்துள்ளாராம். ஆபடக்குழுவினரோ
...ங் பேசுவது குறிமீண்டும் டாப்ஸி
...ம் பேசப்படும் என்றரிவித்துள்ளனர்.

# மகிழ்ச்சியில் அஜித் கூட்டணி

அஜித், நயன்தாரா, ஆர்யா, டாப்ஸி நடிப்பில் உருவாகியுள்ள படம் ஆரம்பம். விஷ்ணுவர்தன் இந்தப் படத்தை இயக்கி உள்ளார். ஏ.எம்.ரத்னம் தயாரிக்க, யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார்.

கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக நடைபெற்ற படப்பிடிப்பு இப்போதுதான் முடிந்திருக்கிறது. படத்தை தீபாவளிக்கு வெளியிடும் முயற்சியில் தீயாக வேலைசெய்து வருகிறது படக்குழு. டிரெய்லர் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றிருப்பதால் படம் சூப்பர் ஹிட்டாகும் என்ற நம்பிக்கையில் இருக்கின்றனர்.

இந்நிலையில் படத்தின் கோயம்புத்தூர் உரிமையை மிகப்பெரிய தொகை கொடுத்து வாங்கியிருக்கிறது காஸ்மோ பிலிம்ஸ் நிறுவனம். கோவையைத் தொடர்ந்து மற்ற ஏரியாக்களிலும் மிகப்பெரிய விலைக்குப்போகும் எனத் தெரிவதால் மகிழ்ச்சியில் இருக்கிறதாம் தயாரிப்பு நிறுவனம்.

# தேன் கிண்ணம்

## என் தந்தை



பல் காட்டிக் கேட்டாலும்
பலர் தருவாரோ
மெய் மறபின் உன் உறவே
மெய் சிலிர்க்குது
கூழ் கொஞ்சம் குடித்தாலும்
நிம்மதியே நம் சொத்து.

குடும்பத்தைக் காக்கவன்றோ
தொலைதூரம் சென்றாய்
விதியின் விளையாட்டு
வினையாக அமையுமோ
உன் கண்ணில் நீர் வடிந்தால்
உலகமே இருண்டிடாதோ
உனை என்றும் காக்கவே
இறைவனை வேண்டுகிறேன்
என் தந்தையே.

த.தர்ஷா
குப்பிளான்.

## தொ(ல்)லை பேசி

அலறும் தொலை பேசியால்
அலை பாயுது மனம்
தவறி விட்ட அழைப்பால்
தடுமாறுது குணம்!

நினைவுகளை
சுயமிழக்கவைத்து
தஞ்சம் கேட்டு
நெஞ்சம் தேடவைக்கும்
நெடு நேரம்!

வஞ்சம் தீட்டும்
வாலிப வலைக்குள்
சிக்க வைத்து
வாழ்வை தொலைக்கும்!

இளசுகளே
கெஞ்சிக் கேட்கின்றேன்
கொஞ்சம் விடுங்கள்
தொலை பேசியை!

விரைந்த செய்தி கேட்க
விடை தரும் பேசி
தொலைந்த வாழ்வை
மீட்டுத் தருமா
தொல்லை தரும் பேசி!



தமிழ்ப்பிரியன்
யாழ்.கொட்டடி

## மௌனம்



இளவஞ்சி - உன்
இதழ் மூடிய மௌனம்
இதயத்தை வதைக்கிறது!
சம்மதமா?
சங்கடமா?
மௌனத்தின் மாயத்தை
இதழ் விரித்துச் செப்பிவிடு
ஏனிந்த மௌனம்
எனக்குப் புரிய வில்லை!

விவேகானந்தனூர் சதீஸ்
கிளிநொச்சி.

## தாவணிக்குடை...

உன்னோடு
கை கோர்த்து
காதல் நடை போடும்
போதெல்லாம்
மழைவர வேண்டி நிற்பேன்
நீ தாவணிக்குடை பிடிப்பாய்
என்பதற்காய்...



சின்னியா
ஜே.பிரோஸ்கான்

## ஈழத்துக் கவிஞர்கள்

### இ.முருகையன்



யாழ்ப்பாணம், தென்மராட்சியில் கல்வயல் கிராமத்தில் தமிழாசிரியர் இராமுப்பிள்ளைக்கும் செல்லம்மாவுக்கும் மூத்த புதல்வனாகப் பிறந்தவர் முருகையன்(ஏப்ரல் 23, 1935) முருகையன் தனது ஆரம்பக் கல்வியை கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், இடைநிலைக்கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், யாழ். இந்துக் கல்லூரியிலும் கற்றார்.

வித்துவான் க. கார்த்திகேசுவிடம் தமிழ்கற்ற முருகையன் உயர்கல்வியை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கொழும்பு வளாகத்தில் பயின்று 1956 ஆம் ஆண்டில் விஞ்ஞானப் பட்டதாரியானார். பின்னர் 1961 ஆம் ஆண்டில் இலண்டனில் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றார். 1985 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவரது இலக்கியப் பணியைப் பாராட்டி முனைவர் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

ஈழத்தின் முன்னணிக் கவிஞர்களுள் ஒருவர். 1950 முதல் கவிதை எழுதும் முருகையன் ஏராளமான கவிதைகள், சில காவியங்கள், மேடைப் பாநாடகங்கள், வானொலிப் பாநாடகங்களை எழுதியுள்ளார். திறனாய்வுக் கட்டுரைகள், கவிதை மொழிபெயர்ப்பு என்பவற்றிலும் ஈடுபட்டுள்ளார்.

1964 - 1965 காலப்பகுதியில் வெளிவந்த நோக்கு என்ற காலாண்டுக் கவிதை இதழின் இணையாசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவராயிருந்த இ.முருகையன் அப்பேரவையின் தொடக்க காலத்திலிருந்தே பங்கெடுத்து வந்ததுடன் தேசிய கலை இலக்கியப் பேரவையின் சஞ்சிகையான தாயகம் இதழின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்தார். 2009ஆம் ஆண்டு இவ்வுலகைவிட்டுப் பிரிந்தார் முருகையன்.

**விருதுகள்**

இலங்கை அரசினால் எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் அதியுயர் விருதான சாகித்திய இரத்தினம் விருது 2007ஆம் ஆண்டில் முருகையனுக்கு வழங்கப்பட்டது. முருகையன் தனது நூல்களுக்குப் பதிப்புரிமை கோருவதை வழக்கமாகக் கொண்டிருக்கவில்லை. பதிப்பகத்தாரிடம் தனது எழுத்துக்களை மக்களில் எவரும் எப்படியும் பயன்படுத்தலாம் என்று சொல்லிவரும் வழக்கமுடையவர்.

**இவரது நூல்கள்**

ஒருவரம் கவிதைகள் 1964), நெடும்பகல் (காவியம் 1967) அது - அவர்கள் நீண்ட கவிதை (1986)

மாடும் கயிறு அறுக்கும் (1990), நாங்கள் மனிதர் (1992) ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும் (2001) ஆதிபகவன் (1978)

**நாடக நூல்கள்**

வந்து சேர்ந்தன, தரிசனம் (1965), கோபுரவாசல் (1969), வெறியாட்டு (1989), மேற்பூச்சு (1995), சங்கடங்கள் (2000), உண்மை (மொழிபெயர்ப்பு, 2002)

**மேடை நாடகங்கள்**

கடூழியம் அப்பரும் சுப்பரும் (1971)


**திறனாய்வு நூல்கள்**

ஒருசில விதி செய்வோம். இன்றைய உலகில் இலக்கியம் கவிதைநயம் (பேரா. க.கைலாசபதியுடன் இணைந்து)

**கட்டுரை நூல்கள்**

இளநலம், மொழிபெயர்ப்பு நுட்பம்
திருவெம்பாவையர் (உரைநடைச் சித்திரம்)

## நிலம் இல்லாத நிலயளவையாளர்



ஊரில் உள்ள
காணிகளை எல்லாம்
கச்சிதமாய் அளந்து
சுனி அடித்து
வேலி போட்டு
வரைபடமும்
வரைந்து கொடுக்கும்
பிரசித்தி பெற்ற
நில அளவையாளர்
நான்.

பங்காளிக்கு பாங்காய்
காணியைப் பங்கிட்டு
கொடுப்பதில் நேர்மையான
நில அளவையாளர் என்ற
பெயர் பெற்றவன்
நான்.

வங்கியில் கடன்
வாங்க முடியாத
காணிகளைக் கூட
அங்குலம் குறையாமல்
ஆதாரத்துடன் அளந்து
கொடுத்து கடன்
எடுக்க உதவும்
ஊர்மெச்சும் உன்னத
சேவியர் நான்.

பூச்சரித்துப் போன
பழமையான
பத்திரங்களையும்
பவித்திரமாய் சேர்த்து
வைத்து நீதிமன்றத்துக்கு
வரும் காணிப்
பிரச்சினைகளையும்
ஆதாரத்துடன் நிரூபித்து
உரிமையாளருக்கு உதவும்
நீதிகாக்கும் நிலயளவையாளர்
நான்.

எத்தனையோ ஒப்பினைகள்
என்னிடம் இருந்தும்
பழுதாய் போன
என் வீட்டை
திருத்தவோ வங்கியில்
கடன் வாங்கி
காணி வாங்கவோ
எனக்கோர் ஒப்பினை
இல்லை என்ற
உண்மையை ஊர்
நம்ப மறுக்கிறது.

இத்தனை தகைமைகள்
இருந்தும் எனக்கென்று
சொந்தமாக ஒரு
காணி இல்லை.

என்.கே.வேணி
பலாங்கொடை.

## இரக்கமே இல்லையா....?

புதையலாய்க் கிடைத்த - என்
பொன்மதியே - உனால்
பூ மனம் பொதி சுமக்கிறது

விலகிட நினைக்கிறாய்
நினைவுகள் ஒன்றும்
நிழல்கள் அல்ல.

வண்டாக வட்டமடிக்கிறேன்
வட்டியுடன் தருகிறாயே...
தனிமையினை மட்டும்...


வார்த்தைகளை விலக்கிவிட்டு
மௌனங்களால் பேசாதே
மாத்திரைதானே கேட்டேன்
மரணத்தையே தருகிறாய்...

எனை மறந்திட - உன்
பொய் முகம் பேசுகிறது
போலியுள்ளம் புலம்புகிறது.

உனக்காகவே என்றும்
என் இதயக்கதவு
திறந்தேயிருக்கிறது
ஒரு தடவையாவது
உட்கார்ந்து விட்டுப் போ
அல்லல் படும் உன்மனது
ஆறுதலடையட்டும்.

எம் காதலுக் கென்றும்
தடைகளே இல்லை...
தகுதி ஒன்றைத் தவிர.

கவனிப்பாயா...
காலங்கள் பல கடந்தாலும்
கல்வெட்டாய் உன் நினைவு
கடைசிவரை அழியாது.



வே.முல்லைத்தீபன்
ஒட்டுசுட்டான்.




பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறிய விளைகின்றனர்.

**Dr. சி.நவநீதன்**

# உயிரின் உதயம்

**பெ**ண்களில் குழந்தை தங்கி வளர்வதற்காக உடலில் முக்கியமாக 3 உள்ளுறுப்புக்கள் இடுப்புக் குழியினுள் அமைந்துள்ளன.

01. கருப்பை
02. முட்டைப்பை அல்லது சூலகம்
03. பலோப்பியன் குழாய்

கருப்பைத் தசையாலான, சிறிய தோடம்பழம் அளவிலான உறுப்பு. ஆனால் குழந்தை தங்கி வளரும்போது 4 கிலோ குழந்தையையும், உள்ளடக்குமாறு பெருக்கும் வல்லமை படைத்தது. இதன் கீழ்ப்பகுதி கருப்பைக் கழுத்து (cervix) வெளியே யோனியுடன் தொடர்பை கொண்டிருக்கும்.


கருப்பையின் இருபுறமும் முட்டைப் பைகள் இருக்கின்றன. முட்டைப் பைகளிலிருந்து பலோப்பியன் குழாய்கள் முட்டையையும் கருக்கட்டிய முட்டையையும் கருப்பைக்குள் எடுத்துச்செல்லும்.

பருவமடைந்த காலம் முதல் மாதா மாதம், முட்டைப் பையிலிருந்து முட்டை வெளிவரும். இம்முறை பலோப்பியன் குழாயினுள் உள்ளீர்க்கப்பட்டு கருக்கட்டலுக்காக காத்திருக்கும். கருக்கட்டிய முட்டை அதாவது கரு, பதிவதற்காக கருப்பையின் அகவணி, மெத்தை போன்ற குருதிக்கலன் படையொன்றை உருவாக்கும். கருக்கட்டல் நிகழாத பட்சத்தில் இவ் அகவணி அழியும். இதன்பொழுது குருதியும், அகவணியும் வெளியேறும். இதனையே மாத சுகவீனம் எனக் கூறுவர்.

முட்டை வெளியேறும் செயன்முறை மாத சுகவீனம் நிகழ 14 நாட்கள் முன்னதாக நிகழும். இந்நாளுக்கு அண்மித்ததாக உடலுறவு நிகழுமாயின் கருக்கட்டலுக்கான சாத்தியம் அதிகமாகும்.

யோனியிலிருந்து விந்துகள் சுய அசைவுமூலம் பலோப்பியன் குழாயை அடைந்து அங்குள்ள முட்டையுடன் கருக்கட்டும். இந்த நிகழ்வின்போது ஒரு விந்து மட்டுமே முட்டைக்குள் உட்புகும்.

கருக்கட்டிய முட்டை பிரிவடைந்து பலகல நிலையை அடைந்து கருப்பையை



நோக்கி நகர ஆரம்பிக்கும். கருப்பையை சென்றடைந்த கரு அங்கு தனக்கென உருவான மெத்தையில் பதியும்.

உங்களுக்கு வயிற்றில் குழந்தை தங்கியிருப்பதற்கான முதலாவது அறிகுறி, உங்களது மாத சுகவீனம் குறிப்பிட்ட திகதிக்கு வழமைபோல் வராமல் போவதாகும். ஆனால் நீங்கள் கர்ப்பம் தங்கியிருக்கிறீர்களா என அறிய மிகச் சிறந்த வழி, உங்கள் சிறுநீரை பரிசோதிப்பதாகும். உங்கள் மாதவிடாய் 10 நாட்களிற்கு மேலாக பின் தள்ளிப்போனால் இப் பரிசோதனையை மேற்கொள்ள முடியும்.

**கர்ப்பத்திற்கான ஏனைய அறிகுறிகள்**

01. மார்பகங்களில் வலி.
02. குமட்டல்.
03. களைப்பு.
04. சிறிதளவு குருதிப்போக்கு.
05. அதிகளவு உமிழ்நீர் சுரப்பு.

(நாடி பிடித்து கர்ப்பம் என சொல்ல தமிழ் சினிமா வைத்தியர்களுக்கு மட்டும் தான் முடியும்)

**பிரசவ திகதியை கணிப்பது எப்படி?**

பெண்களில் சராசரி கர்ப்பகாலம் 280 நாட்களாகும். இதன் அடிப்படையில் திகதி பின்வருமாறு கணிக்கப்படும்.

கடைசியாக மாதவிலக்கு தொடங்கிய திகதி +7 நாட்கள் + 9 மாதங்கள்

உதாரணம்:- கடைசியாக மா.வி.தொ. திகதி: 01-02-03 (LMP)

பிரசவ எதிர்பார்ப்பு திகதி: 08-11-03 (EDD)

மாதவிலக்கு ஒழுங்கற்று இருப்போருக்கு இது பொருந்தாது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஸ்கான் (Scan) மூலம் குழந்தை எதிர்பார்க்கும் பிரசவ திகதியை அண்ணளவாக கணிக்கலாம்.

(தொடரும்)

# அல்சரை துரத்த சில வழிகள்.....



**நம்** வயிற்றுக்குள் குடலை பாதுகாக்கும் திரை போன்ற அதைப்பு பாதிக்கப்படுவதாலோ, அதில் புண்கள் உருவானாலோ வலியும், எரிச்சலும் ஏற்படுகிறது. இதுவே அல்சர் எனப்படுகிறது. இந்த புண்களினால் சிறிது உணவு உட்கொண்டாலும் அது தொண்டைக்குழியிலேயே நிற்பதுபோல உணர்வு ஏற்படும். நெஞ்சு எரிச்சலும், புளித்த ஏப்பமும் அடிக்கடிவந்து தொந்தரவை ஏற்படுத்தும். வாய்க்கு ருசியாக காரமாகவோ, புளிப்பாகவோ எதையும் சாப்பிட முடியாத நில்ல, கொஞ்சம் சாப்பிட்டால்கூட புளித்த ஏப்பம் என இன்றைக்கு பெரும்பான்மையோரை வாட்டி எடுக்கிறது அல்சர். சாப்பிடவேண்டிய நேரத்தில் சரியாக சாப்பிடாமல்விடுவதும், பாஸ்ட் புட், எண்ணெய் அதிகம் சேர்த்த உணவுகள், காபி, டீ போன்றவற்றை உள்ளே தள்ளுவதும் அல்சர் ஏற்பட காரணமாகின்றன. அதேபோல் அதிக டென்சன், மன அழுத்தம் போன்றவையும் அல்சர் ஏற்பட காரணமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

**மன அழுத்தம் பாதிப்பு**

ஒரு சிலருக்கு பரம்பரை காரணமாகவும் அல்சர் ஏற்பட வாய்ப்புள்ளது. அதேசமயம், அதிக உணர்ச்சிவசப்படுதல், மன அழுத்தம் காரணமாகவும் அல்சர் ஏற்படும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். டென்சன் ஏற்படும்போது அமிலம் அதிகமாக சுரக்கிறது. இதுவும் அல்சர் ஏற்பட முக்கிய காரணமாகிறது என்கின்றனர் மருத்துவர்கள்.

**மருந்தின் வீரியத்தினால் புண்கள்**

சாதாரணமாக ஏற்படும் தலைவலி, காய்ச்சல் என்றால் தாங்களாகவே மருந்தகங்களுக்கு சென்று எதையாவது மாத்திரைகளை வாங்கி உட்கொள்கின்றனர். இவ்வாறு அடிக்கடி மாத்திரை சாப்பிடுவது ஆபத்து என்கின்றனர் மருத்துவர்கள்.

அதேபோல் வலி நிவாரணி மாத்திரைகள், அன்டிபயடிக் போன்ற மாத்திரைகள் உட்கொள்வதும் அல்சர் ஏற்பட காரணமாகின்றன. ஏனெனில் அன்டிபயடிக் உட்கொள்ளும் போது மருத்துவர்கள் தரும் பி.காம்பளக்ஸ் மாத்திரைகளை உட்கொள்வதும் அவசியம். தவிர்க்கும் பட்சத்தில் மருந்தின் வீரியத்தினால் வயிற்றில் புண்கள் ஏற்படுகின்றன.

**ஜீரணமாகும் உணவுகளை உட்கொள்ளவேண்டும்**

எந்த காரணம் கொண்டும் உணவுகளை தவிர்க்கக்கூடாது. மேலும் அல்சர் உள்ளவர்கள் எளிதில் ஜீரணமாகும் வகையில் உணவுகளை உட்கொள்ளவேண்டும். அல்சர் வந்தவர்களுக்கு விருந்தும் கூடாது, விரதமும் கூடாது. மூன்று வேளையும் மூக்கைப் புடிக்க சாப்பிடாமல், கொஞ்சமாக, அடிக்கடி சாப்பிடலாம் எதையும் கடிச்சு, நன்கு மென்று பொறுமையாக சாப்பிடவேண்டும். நார்ச்சத்து உள்ள உணவுகளைத் தவிர்க்கவேண்டும். குழைய வேக வச்ச அரிசி சாதம், அவல், பொரியில் கஞ்சி மாதிரி செய்து சாப்பிடலாம் கீரை, காய்கறிகளைக்கூட நன்றாய் வேக வச்சு, மசிச்சு, சாப்பிடவேண்டும். பாலுக்குப் பதில் மோர் அதிகம் சேர்த்துக்கலாம். எண்ணெய் பலகாரங்களை உட்கொள்வது ஆபத்தானது. அல்சர் வந்தவர்கள் ஸ்ட்ரோங்கான கோப்பி, டீயை குடிக்கக் கூடாது அதேபோல் அதிகமான இனிப்புகள், பொரித்த உணவுகள், பாதி பழுத்தும் பழுக்காத பழங்கள், பச்சை காய்கறிகள், இஞ்சி, காரம் மசாலா இவற்றை அறவே தவிர்க்கவேண்டும் என்பது மருத்துவர்களின் அறிவுரை. உணவு உட்கொண்ட உடனே படுக்கைக்கு செல்லக் கூடாது. ஏனெனில் அது நெஞ்சு எரிச்சல் ஏற்பட வழிவகுக்கும். எனவே மூன்று மணி நேரம் கழித்தே உறங்கவேண்டும். நள்ளிரவு நேரத்தில் எண்ணெய் பலகாரங்களை உட்கொள்வது ஆபத்தானது என்கின்றனர் மருத்துவர்கள்.

# ஆண்களையும் பாதிக்கிறது மலட்டுத் தன்மை



**இ**ன்றைய காலக்கட்டத்தில் மலட்டுத்தன்மை பிரச்சினையானது பெண்களிடம் மட்டுமின்றி, ஆண்களிடமும் அதிகம் காணப்படுகிறது. இத்தகைய மலட்டுத்தன்மை ஏற்படுவதற்கு வாழ்க்கை முறை மற்றும் பழக்கவழக்கங்களில் உள்ள மாற்றங்கள் தான் முக்கிய காரணமாகின்றன. மேலும் பெண்களை விட ஆண்களுக்கு நிறைய கெட்ட பழக்கவழக்கங்கள் இருப்பதால், அந்த பழக்கவழக்கங்களால் மலட்டுத்தன்மையானது ஏற்படுகிறது.

எனவே அத்தகைய பழக்கவழக்கங்களை மாற்றிக்கொண்டு, வாழ்க்கை முறையில் சிறு மாற்றங்களை கொண்டுவந்தால், நிச்சயம் மலட்டுத்தன்மையில் இருந்து விடுபடலாம். இப்போது ஆண்களுக்கு மலட்டுத் தன்மையை ஏற்படுத்தும் செயல்கள் மற்றும் பழக்கவழக்கங்கள் என்னவென்று ஒருசிலவற்றைக் கொடுத்துள்ளோம். அதைப் படித்து அவற்றை மாற்றிவந்தால், மலட்டுத்தன்மை ஏற்படுவதை தவிர்க்கலாம்.

பெரும்பாலான ஆண்களுக்கு மலட்டுத் தன்மை ஏற்படுவதற்கு புகைப்பிடிப்பது தான் முக்கிய காரணம். ஏனெனில் சிகரெட்டில் நிக்கோட்டின் மற்றும் புகையிலை இருப்பதால், அது விந்தணுவிற்கு பாதிப்பை ஏற்படுத்தி, அதன் உற்பத்திக்கு பாதிப்பை ஏற்படுத்தும். அதேபோன்று உடல் எடை, மன அழுத்தம் என்பனவும் மலட்டுத்தன்மை ஏற்படக் காரணமாக இருக்கின்றது.

அடுத்ததாக, ஆண்கள் லப்டொப்பை உபயோகிக்கும்போது, மடியில் வைத்துக் கொண்டு வேலைசெய்வதால், அதிலிருந்து வெளிவரும் வெப்பத்தினால், விதைப்பையானது வெப்பமடைந்து விந்தணுவிற்கு பாதிப்பை ஏற்படுத்திவிடுகிறது. மொபைல் போனிலிருந்து வெளிவரும் அதிர்வுகள் மற்றும் கதிர்களால், விதைப்பையில் அதிர்ச்சி ஏற்பட்டு, மலட்டுத்தன்மைக்கு வழிவகுக்கும்.

எப்போதும் இறுக்கமான உள்ளாடையை அணியக்கூடாது. அவ்வாறு அணிந்தால், விதைப்பையானது வெப்பமடைந்து, விந்தணுவின் எண்ணிக்கையில் பாதிப்பை ஏற்படுத்தி, மலட்டுத் தன்மையை உண்டாக்கிவிடும்.

# தாய்ப்பால் ஊட்ட தயங்கும் தாய்மார்

அழகு குறைந்துவிடும் என்ற எண்ணம், வேலை, விருப்பம் இன்மை உள்ளிட்ட காரணங்களால் பெரும்பாலான பெண்கள் குழந்தைகளுக்கு சரியாக தாய்ப்பால் கொடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்படுகின்றது.

கடந்த, 1991ஆம் ஆண்டு முதல் உலகம் முழுவதும் "உலக தாய்ப்பால் வார விழா" கொண்டாடப்படுகிறது. பிறந்த குழந்தைக்கு, முதலில் கொடுக்கப்படும் சீம்பாலுக்கு, எதிர்ப்புசக்தி அதிகம். சுகப் பிரசவத்தில் பிறந்த குழந்தைக்கு, பிறந்த, 15 முதல் 30 நிமிடத்திற்குள், தாய்ப்பால் கொடுக்கவேண்டும். அறுவைச் சிகிச்சைமூலம் குழந்தை பிறந்தால், இரண்டு மணி நேரத்திற்குள், தாய்ப்பால் கொடுக்கவேண்டும். குழந்தைகள் பிறந்த, ஆறு மாதம் வரை, கண்டிப்பாக தாய்ப்பால் மட்டுமே கொடுக்கவேண்டும்.

ஆறு மாதங்களுக்குப் பின், உருளைக்கிழக்கு, உணவு வகைகளை குழந்தைகளுக்கு கொடுக்கலாம். கண்டிப்பாக, இரண்டு ஆண்டுவரை தாய்ப்பால் கொடுக்கவேண்டும்.

தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு, மார்பகப் புற்றுநோய், கர்ப்பப்பை வாய் புற்றுநோய் வருவது குறைகிறது. குழந்தை பிறப்பின்போது, பெண்களுக்கு ஏற்படும் இரத்தப்போக்கு, அதிகளவில் வெளியேறுவது தவிர்க்கப்படுகிறது. குழந்தை பிறந்தபின், அளவில் பெரியதாக இருக்கும் வயிறு, தாய்ப்பால் கொடுப்பதன்மூலம், சிறியதாகிவிடும். இவ்வாறு, தாய்ப்பால் கொடுப்பதால் பல்வேறு நன்மைகள் இருக்கின்றபோதிலும் தாய்ப்பால் கொடுப்பதற்கு இளம் தாய்மார் பின்னடிப்பதாக வைத்தியர்கள் குற்றச்சாட்டுகின்றனர்.




# லேடிஸ் ஸ்பெஷல்

**பெண்களுக்கு** எதிரான வன்முறைகள் இன்று பரவலாகப் பேசப்படும் ஒரு விடயமாகும். இதனை விளங்கிக் கொள்ளுமுன் வன்முறை என்பதன் முழு அர்த்தத்தை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். அகராதிகளின்படி பாதிக்கப் படக் கூடிய மோசமான தாக்கம், காயம், உணர்வு களின் பாதிப்பு, இப்படிப் பல விடயங்கள் தரப்பட்டுள்ளன.

எனவே வன்முறை என்றவுடன் வெறும் உடல் தொடர்பான புறத்தாக்கம் என்று மட்டும் நினைக்காமல் அகத்தைப் பாதிக்கக் கூடிய நீண்டகால நிரந்திர மனக்காயங்களைத் தரக்கூடிய உளவியல்ரீதியான தாக்கங்களையும் மனதில் கொள்ளவேண்டும். வன்முறைகள் உடலியல் ரீதியானவை, உளவியல் ரீதியானவை என்று வகைப்படுத்தப்படும்.

உடல் தாக்கங்கள், அடிதடி, மனைவியை அடிப்பது, மாமியார் கொடுமை, பலாத்காரம் என்ற கட்டாய உடலுறவுக்கு வற்புறுத்தல், பாலியல் துன்புறுத்தலாகிய பல பிரச்சினைகள், கற்பழிப்புப் போன்றவை அடிப்படையான வன் முறைகளாகக் காணப்படுகின்றன. அத்தகைய பாதிப்புக்களின் சுவடுகள் உடலில் வடுக்களையும், மாறுதல் களையும் உருவாக்கக் கூடியன. அத்தோடு நில்லாமல் அவை மனதில் துயரத்தையும் உருவாக்கக் கூடியன.

உளவியல் தாக்கங்கள் பெண்களை அவ மரியாதை செய்து அவர்களைப் பற்றி அவதூறு பேசி அவர்களின் உணர்வுகளைப் பாதித்து மனதைப் பாதிக்கின்ற செயல்களாகும். அத்தகைய பாதிப் புக்கள் பிறகு உடலை வருத்தும் நோயாகவும் மாறிவிடுகின்றன. குறிப்பாக உடலில் அல்லது உளவியல் எந்த ரீதியில் பெண்கள் துன்புறுத் தப்பட்டாலும் பெண்ணின் உடலும் மனமும் பாதிப்படைகின்றன.

வன்முறைகளை பெண்கள்மீது கட்டவிழ்த்து விடுபவர்கள் ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் தான். குறிப்பாக உளவியல் ரீதியான வன்முறைகள் பெண்கள் மீது பெண்களே அதிகமாகப் பிரயோகம் செய்கிறார்கள் என்று சொல்லலாம்.

ஆணாதிக்கம் அதிகமாக இருக்கும் சமு தாயத்தில் பெண்ணிய மேம்பாட்டிற்கென தனியான கவனம் செலுத்துவது என்பது சிக்கலானதே. ஆனால் எந்தவொரு விடயத்திலும் அது பெண்களால் முடியாது என்ற முடிவுக்கு வருவதை தவிர்க்கலாம் இல்லையா? அந்த அடிப்படையில் பெண்களின் வேலைவாய்ப்புக்கள் இரண்டாம் இடத்திற்கே நிர்ணயப்படுத்தப்படுகின்றன. கல்வி, திறமை, அனுபவம் அனைத்துமே பால் அடிப்படையில் பதவிகள் தீர்மானிக்கப்படுகின்ற காரணத்தினால் பெண்களுக்கு சிறந்த நிலைகளை எட்டுவதற்குப் பயன்படாமல் போகின்றன.


இப்படிப்பட்ட சூழ்நிலைகளையும் தாண்டி முன்னுக்கு வரக்கூடிய பெண்கள் சந்திக்கும் சிக்கல்கள் அதிகமாகும். பணிப்பாகுபாடு காட்டி பெண்களை அச்சுறுத்தி உடல்ரீதியில் தாக்கங்களை உண்டுபண்ணக் கூடிய ஆபத்துக்களை பெண்களின் மீது திணிக்கிறார்கள். பணியில் ஆணும் பெண்ணும் சரியாக சமமாக நடாத்தப்படாமை, பெண்கள் செய்யும் பணிகளில் குற்றங்கண்டு பிடித்தல், பெண்களின் நடத்தையைத் தூற்றுதல், ஊதியத்தில் சமமின்மை போன்ற பல தீமைகள் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்றன. இவை அனைத்துமே பெண்களை மனவியல் ரீதியாகப் பாதிக்கின்றன.



# ஆணும் பெண்ணும் சமம்

குறிப்பாகப் பெண்களை தரக்குறைவாகப் பேசும் கொடுமை பெரியளவு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பெண்களை மட்டுமன்றி முழுக் குடும்பத்தையுமே பாதித்துவிடக் கூடியன. குடும்பத் தகராறுகள் அதனால் ஏற்படும் வன்முறைகள் போன்றவை முழுக் குடும்பத்தையுமே குறிப்பாக குழந்தைகளை மிகவும் பாதித்துவிடக் கூடியன. எனவே குடும்ப முன்னேற்றமே தடைப்படும் என்பதை நாம் முதலில் உணரவேண்டும். அப்படிப் பட்ட சூழ்நிலைகளை எப்படிச் சமாளிப்பது என்பதைப் பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்கவேண்டும்.



# சொந்தங்களுக்குள் திருமணம் செய்யலாமா?

இரத்தச்சோகை பற்றி கேள்விப்பட்டிருப்போம். இரத்த அழிவு சோகை பற்றித் தெரியுமா? மரபு வழிக்கோளாறால் வரக்கூடிய இந்நோய்க்கு 'தலசீமியா' என்று பெயர். நெருங்கிய உறவுக்குள் திருமணம் முடிப்பவர்களின் வாரிசுகளையே இது அதிகம் தாக்குகிறதாம்.

ஆபிரிக்க ஆசிய வம்சா வழிகளில் வரக்கூடிய குழந்தைகள் தான் 'தலசீமியா' பிரச்சினையால் அதிகம் பாதிக்கப்படுகின்றார் கள். சிவப்பு இரத்த அணுக்களில் ஹீமோகுளோபின் என்று சொல்லப்படுகின்ற ஒரு புரதம் இருக்கும். அதுதான் ஒட்சிசனை உடம்புக்குள் எல்லா இடங்களுக்கும் எடுத்துக்கொணடு போகும். ஹீமோகுளோபினுக்குள் அல்பா குளோபின், பீட்டா குளோபின் என்று இரண்டு இருக்கும்.

ஒட்டுமொத்த ஹீமோகுளோபின் அமைப்பில் கோளாறு ஏற்பட்டால் இரத்த சிவப்பு அணுக்கள் அழிக்கப்படும். அதன்விளைவாக ஒவ்வொரு செல்லுக்கும் போகவேண்டிய ஒட்சிசன் தடைப்படும். வயித்தில் உள்ள கரு பிறந்த குழந்தை, வளர்ந்த பிள்ளைகள் என்று எந்த வயதிலும் இது பாதிக்கலாம்.

நோய்க்குக் காரணமான குறைபாடுள்ள மரபணு குழந்தை க்கு, அதோடு அம்மா அல்லது அப்பா அல்லது இரண்டு பேரிடமிருந்தும் போகிறது. பிறந்த குழந்தையாக இருந்தால் வயிறு ஊதிப்போகிறது, கல்லீரலும், எலும்பு மஜ்ஜையும் வீங்குதல், தலை வீங்குதல், இதயம், சிறுநீரகத்தின் செயல் குறைதல், களைப்பு பலவித அறிகுறிகள் இருக்கும். அம்மாவின் வயிற்றில் இருக்கும்போதே இந்தப் பிரச்சினை தீவிரமாகி குழந்தையை பாதித்தால், குழந்தை இறந்தே பிறக்கலாம் அல்லது வளர்ச்சிக் குறைபாடுகளோடு பிறக்கலாம்.

பிறக்கும்போதே மஞ்சள் காமாலை அதிகமாக இருக்கும் வேகமான மூச்சிறைப்பையும் பார்க்கலாம், மாதம் தவறாமல் இரத்தம் ஏற்றும்போது மட்டும்தான் இதற்கான ஒரே தீர்வு. அப்படி இரத்தம் ஏற்றும்போது, இரும்புச்சத்து அதிக மாகி அதன்விளைவாக வேறு பிரச்சினைகள் வராமல் இருக்க மாத்திரைகள் கொடுக்கவேண்டியிருக்கும்.

முதல் குழந்தைக்கு இந்த நோய் இருந்தால், பெற்றோர் மரபணு கவுன்சிலிங்கும், பரிசோதனையும் எடுத்துக்கொள்ள வேண்டும். அடுத்த குழந்தைக்கும் வர வாய்ப்பிருப்பதை தெரிந்து கொள்ளவேண்டும்.

அந்த ஆபத்து இருந்தால் அடுத்த கர்ப்பத்தை கலைப்பது தான் வழி. ஒரு வேளை இரண்டாவது குழந்தைக்கு நோய் ஆபத்து இல்லை என்று தெரிந்தால், அந்த குழந்தையின் இரத்தத்தை முதல் குழந்தைக்கு ஏற்றலாம். இரண்டாவது குழந்தையின் எலும்பு மஜ்ஜையை முதல் குழந்தைக்கு செலுத்தியும் குணமாக்கலாம்.

நெருங்கிய உறவுக்குள் மணம் முடிப்பதால் குழந்தைகள் பிறப்பதில் இத்தனை பிரச்சினைகள் ஏற்படும் என்பதை அறிந்த பின்பும் உறவுக்குள் திருமணம் முடிப்பதை கண்டிப்பாக தவிர்க்கவேண்டும்.

## வாசகர்களின் கவனத்திற்கு...

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக.
(முரசு 1021 - வாரமொரு அதிர்ஷ்டசாலி - 375)
இப்போட்டியிலிருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 250/= என்பதை அறியத்தருகின்றோம்.

**250/= ரூபா.** வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-384**

**கேள்வி: நெருங்கிய உறவுகளுக்குள் மணம் முடிப்பதால் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 16.09.2013**

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 384
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.


சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 382 இற்கான விடை :- மகாத்மா காந்தி,
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி:- M.U.S.கமீட், அட்டப்பள்ளம், நிந்தவூர்.

**384**

பெயர் : ..................
முகவரி : ..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
கையொப்பம் : ..................

# மரக்கறி தோசை



**தேவையான பொருட்கள்:**

மைதா - 3 மேசைக்கரண்டி, சோள மா - 2 மேசைக்கரண்டி, அரிசி மா - 3 மேசைக்கரண்டி,

பேக்கிங் பவுடர் - 1 மேசைக்கரண்டி, உருளைக்கிழங்கு - 1 (பொடியாக நறுக்கியது) கரட் - 1 (பொடியாக நறுக்கியது), வெங்காயம் - 2 (நறுக்கியது), சீரகப்பொடி - 1/2 மேசைக் கரண்டி, மஞ்சள் தூள் - 1/2 மேசைக்கரண்டி, மிளகாய் தூள் - 1/2 மேசைக்கரண்டி, எலுமிச்சை - 1 (சாறு எடுத்துக் கொள்ளவும்) எண்ணெய் - 2 கப், தண்ணீர் - 1 கப், உப்பு - தேவையான அளவு

**செய்முறை:**

முதலில் ஒரு பாத்திரத்தில் மேலே குறிப்பட்ட அனைத்து பொருட்களையும் போட்டு, தண்ணீர் ஊற்றி தோசை மா பதத்திற்கு கலந்துகொள்ள வேண்டும். பின்பு அதனை குறைந்தது 10-15 நிமி டம் ஊற வைத்துக் கொள்ளவேண்டும். 10 நிமிடம் ஆன பின்பு, தோசைக்கல்லை அடுப்பில் வைத்து, தீயை குறைத்து சூடேற்ற வேண்டும். கல்லானது சூடானதும், அதில் ஒரு கரண்டி மாவை ஊற்றி, தோசை போன்று தேய்த்து, தட்டுக் கொண்டு மூடி, ஒரு நிமிடம் வேகவைத்து, திருப்பி போடாமல் எடுக்கவேண்டும். இப்போது சூப்பரான மரக்கறி தோசையானது ரெடி!

இதேபோன்று அனைத்து மாவையும் தோசைகளாக சுட்டு எடுக்கவேண்டும். குறிப்பாக இதனை தேங்காய் சட்னியுடன் சாப்பிட்டால் அருமையாக இருக்கும்.

அழகுதரும் மருதாணி இலைகளை நன்றாக அரைத்து பித்தவெடிப்பு உள்ள இடங்களில் தேய்த்து உலரவிட வேண்டும். பின்னர் தண்ணீரில் கழுவிவர நாளடைவில் குண-மாகும். இதை தொடர்ந்து சில நாட்கள் செய்துவந்தால் வெடிப்பு மறைந்துவிடும். விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய்யை சமஅளவு எடுத்து இதனுடன் மஞ்சள் தூளை கலந்து பேஸ்ட் போல் குழைத்து வெடிப்பு உள்ள இடத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவிவர பித்தவெடிப்பு குணமாகும்.

# பாதத்தின் பாதுகாப்பு



கோடி. தொண்ணூறு சதவிகிதம் முஸ்லிம்கள். பத்து சதவிகிதம் கிறிஸ்தவர்கள். ஜனநாயகத்தின் வாசனையே சிரியாவில் அரைநூற்றாண்டாக கிடையாது. 1963இல் ஆரம்பித்து ஐம்பது ஆண்டுகளாக அராப் சோசலிஸ்டு பாத் கட்சியின் ஆட்சிதான். 1971இல் தொடங்கி தற்போதைய அதிபர் பஸார் அல் ஆஸாத்தின் குடும்பம்தான் அதிபர் பதவியை தொடர்ச்சியாக தக்கவைத்திருக்கிறது.

அராபிய வசந்தம் காரணமாக அரபுநாடுகளில் ஆட்சியாளர்களுக்கு எதிராக நடந்த போராட்டங்களைத் தொடந்து கடந்த 2011 மார்ச் வாக்கில் சிரியாவிலும் போராட்டங்கள் தொடங்கின. தொடர்ந்து ஒரே குடும்பம் சிரியாவில் ஆட்சியதிகாரம் செய்வதை மறுத்து, அதிபரை ராஜினாமா செய்யக்கோரி பேரணிகள் நடந்தன. அதிபருக்கு இவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி நேரத்தை வீணடிப்பது பிடிக்கவில்லை. இராணுவத்தை அனுப்பி என்ன செய்தாவது' அடக்கச் சொன்னார். துப்பாக்கி முனையில் போராட்டக்காரர்களை இராணுவம் அணுக, கொடி பிடித்துக் கொண்டிருந்த போராட்டக்காரர்கள் கொடியை கீழே போட்டுவிட்டு அமெரிக்க உதவியுடன் பதிலுக்கு துப்பாக்கி ஏந்தத் தொடங்கிவிட்டார்கள். இதுதான் சிரியப் பிரச்சினை.

சிரிய இராணுவத்தை ஆங்காங்கே நடந்த சண்டைகளில் துப்பாக்கி ஏந்திய போராட்டக்காரர்கள் போட்டுத்தள்ளிக் கொண்டிருக்க நாடு கொஞ்சம் கொஞ்சமாக அதிபர் அல் ஆஸாத்தின் கையை விட்டு நழுவிக்கொண்டிருக்கிறது. அரசை எதிர்க்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இதுவரை பொதுவான தலைமை ஒன்று உருவாகவே இல்லை. முஜாகிதீன் அமைப்பான ஜபாத் அல் நுஸ்ரா என்கிற மத அமைப்புக்கு அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களிடையே நல்ல மதிப்பு இருக்கிறது. எனவே அரசுக்கு ஆதரவாகவும் ஹிஸ்புல்லாவினர் (அரபுநாடுகளில் இயங்கும் இராணுவக் கட்டுமானம் கொண்ட மத அரசியல் கட்சி) களமிறங்கியிருக்கிறார்கள். நாட்டின் முப்பதிலிருந்து நாற்பது சதவிகிதம் நிலப்பரப்புதான் இப்போதைக்கு அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. மீதி இடங்களை கிளர்ச்சிக்காரர்கள் தங்கள் ஆளுகைக்குள் கொண்டு வந்துவிட்டார்கள்.

சிரிய அரசாங்கத்துக்கு ஈரான், ரஷ்யா போன்ற நாடுகள் இராணுவரீதியாக உதவி வருகின்றன. போராட்டக்காரர்களுக்கு கட்டார், சவுதி அரேபியா ஆகிய நாடுகள் ஆயுதங்களை தருகின்றன. போராட்டக்காரர்களை நியாயமே இன்றி அடக்குவதாகக் கூறி அரபுக் கூட்டமைப்பு சிரியாவை தங்கள் அமைப்பிலிருந்து வெளியேற்றிவிட்டது. ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா போன்றவையும் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவான போக்கையே கடைப்பிடிக்கிறார்கள்.

அதிபர் ஆஸாத் இஸ்லாமியக் குழுக்களில் சிறுபான்மையான அலாவிட் குழுவைச் சேர்ந்தவர். சிறுபான்மையினர் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக பெரும்பான்மையினரை அடக்கி ஆளுவதா என்கிற குமுறல் ஏற்கனவே இருந்தது. ஆஸாத்தின் உறவினர்களும், அவரது குழுவைச்சேர்ந்தவர்களும்தான் சிரிய இராணுவத்தின் முக்கியமான பதவிகளைப் பிடித்திருந்தார்கள். மேலும் சிரியாவில் வாழும் குர்திஸ் இனமக்களும் தங்களுடைய கலாச்சாரம், மொழி, இனத்துக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக ஏற்கனவே குமைந்து கொண்டிருந்தார்கள். 2011இன் தொடக்கத்தில் சிரிய கிராமப்புறங்களில் ஏற்பட்ட கடுமையான பஞ்சம். அதன் காரணமாக ஏற்கனவே ஏழைகளாக இருந்தவர்கள் பரம ஏழைகளானது. புதிய பொருளாதாரக் கொள்கைகளால் மக்களிடையே சமத்துவத்துக்கான இடைவெளி அதிகரித்தது. இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தலைவிரித்து ஆடுவது என்று ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ நிறைய காரணங்கள் இருக்கிறது.

உலகிலேயே அதிகளவில் இரசாயன ஆயுதங்களை 'ஸ்டாக்' வைத்திருக்கும் நாடுகளில் மூன்றாவது பெரிய நாடாக சிரியா கருதப்படுகிறது. போராட்டக்காரர்களை அடக்க சிரிய இராணுவம் இவற்றை பயன்படுத்த ஆரம்பித்திருப்பதாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அல்ஜசீரா தொலைக்காட்சி சந்தேகப்பட்டது. அப்போதிலிருந்தே தொடர்ச்சியாக ஆங்காங்கே இரசாயன ஆயுதங்களால் மக்கள் தாக்கப்படுவதாக ஊடகங்கள் அலறிக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் அமெரிக்கா இனியும் பொறுக்கமுடியாது என்று தன்னுடைய போர்க்கப்பல்களை மத்திய தரைக்கடலுக்கு அனுப்பியிருக்கிறது. ஏற்கனவே அங்கே நிலைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஹாரி ட்ரூமான் என்கிற விமானந்தாங்கி கப்பல் சூயஸ் கால்வாய் வழியாக செங்கடலுக்கு விரைந்திருக்கிறது. அங்கிருந்து சிரியா மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்று தெரிகிறது. ஏவுகணை தாங்கி கப்பல் ஒன்றும் மத்திய தரைக்கடலுக்கு விரைந்தது. அமெரிக்காவுக்கு ஆதரவாக இங்கிலாந்து பிரான்ஸ் படைகளும் தயார்நிலையில் இருக்கின்றன.

'எங்கள் பிரச்சினையில் யார் தலையிட்டாலும், அது எண்ணெயில் தீயை வைப்பதற்கு ஒப்பாகும். அந்த தீ சிரியாவை மட்டுமல்ல. ஒட்டுமொத்த மத்திய கிழக்கு நாடுகளையும் எரித்துவிடும்' என்று சிரியாவின் தகவல்துறை அமைச்சர் அமெரிக்காவின் தலையீட்டை எச்சரித்து மிரட்டியிருக்கிறார்.

'அபாயக்கோட்டை அமெரிக்கா தாண்டுகிறது. இதன் விளைவுகளை வெள்ளை மாளிகை சந்திக்கும்' என்று சிரியாவின் இராணுவ துணைத்தலைவர் மசூத் ஜஸாயரியும் சவால் விட்டிருக்கிறார்.

சிரியாவுக்கு ஆதரவாக ஈரானும் தொடை தட்டி களமிறங்கியிருக்கிறது. ரஷ்யாவும்



நேரடியாக களமிறங்கும் பட்சத்தில்(சாத்தியம் இல்லை) மத்திய தரைக்கடல் இரத்தக் கடல் ஆகக்கூடிய வாய்ப்புகள் அதிகம். அரபு நாடுகள் கவலையோடு நடப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன.

### உலகம் இன்னொரு போரை சந்திக்க தயார் ஆகிவிட்டது.

சிரியா - அமெரிக்கப் போர் நடந்தால் மூன்றாவது ஆண்டாக சிரியாவில் அரசுக்கு எதிரான கிளர்ச்சி நடைபெற்று, இத்தருணம் அது உச்சத்தை அடைந்திருக்கிறது.

அரபு வசந்தம் எனப்படும் அரசுகளுக்கெதிரான போராட்டங்கள் துனிஷியா தொடங்கி, எகிப்து, ஏமன் என்று அரபகத்தில் ஆட்சி மாற்றங்களுக்கு வழி வகுத்த நிலையில் சிரிய அதிபர் பஷர் அல் அஸ்ஸாத்துக்கு எதிரான கிளர்ச்சி மட்டும் மூன்றாவது ஆண்டை எட்டி உயிர்ப்புடன் உள்ளது - பல அப்பாவி பொதுமக்களைக் கொன்றொழித்தபடி.

இரு வாரங்களுக்கு முன் அப்பாவி பொதுமக்கள் மீது இரசாயன ஆயுதப் பிரயோகம் நடத்தி, சுமார் 1,300 அப்பாவி பொதுமக்களை அதிபர் தரப்பு கொன்றொழித்ததாக அமெரிக்க நேச நாடுகள் குற்றம் சாட்டுகின்றன. மறுபுறம் சிரிய அரசுக்கு ஆதரவான ரஷ்யா, சீனா, ஈரான் உள்ளிட்ட நாடுகள் இந்த இரசாயனத் தாக்குதலை அமெரிக்க ஆதரவு கிளர்ச்சியாளர்களே நடத்தியதாகக் குற்றம் சாட்டுகின்றன.

இரசாயனத் தாக்குதல் நடத்தியதாகக் குற்றம் சுமத்தி சிரியா மீது எந்நேரமும் அமெரிக்க நேசநாடுகள் தரப்பு குண்டு மழை பொழியலாம் என்ற நிலை தற்போது உள்ளது. அப்படி அமெரிக்கா தன்னைத் தாக்கினால் தான் இஸ்ரேலைத் தாக்கப் போவதாக சிரியா அறிவித்துள்ளது. ஈரானும் சிரியாவுக்கு பக்க பலமாக உள்ளது. ஆனால் ஐ.நா அவையை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அமெரிக்கத் தரப்பு ஈராக் போரை தனக்குச் சாதகமாகத் திருப்பி உலகநாடுகளை தன் ஆளுமைக்கு கட்டுப்பட வைத்தது போன்றே இம்முறையும் முயலும். அதற்காகவே, எல்பராதி தலைமையிலான ஐ.நா குழு வொன்று இரசாயன ஆயுதத்தாக்குதல் பற்றி ஆராய சிரியாவுக்குச் சென்று மீண்டுள்ளது.

### இந்தியாவின் நிலை என்னவாகும்?

இப்போர் ஏற்பட்டால், இந்தியாவின் நிலை என்னவாகும்? அண்மைக்காலமாக, அமெரிக்க நட்பை விரும்பி வரும் இந்தியா இதிலும் அமெரிக்கச் சார்பு நிலையே எடுக்கும் என்பது ஒருபுறமிருக்க வீழ்ச்சியடைந்து வரும் இந்தியப் பொருளாதாரம் இப்போரினால் கடும் பாதிப்பை அடையும் என்பது தான் நிதர்சனம்.

பன்னாட்டு அளவில் அமெரிக்க டொலருக்கு எதிரான இந்திய ரூபாய் கடும் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் சிரியா மீதான போர் கச்சா எண்ணெய்த் தட்டுப்பாட்டையும், அதிக விலை உயர்வையும் உண்டாக்கும். நிதிப்பற்றாக்குறை, இறக்குமதிச் செலவினங்கள், மானியச் சுமை ஆகியவற்றால் இந்தியாவின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டதை விடவும் இரட்டிப்பாகச் சென்று கொண்டிருக்கிறது. இந்நிலையில் கச்சா எண்ணெய் விலையேற்றம் இந்தியப் பொருளாதாரத்தை மேலும் கடுமையாகப் பாதிக்கும்.

கடந்த மூன்று மாதங்களில் கச்சா எண்ணெய் விலை 50 சதவிகிதம் அதிகரித்துள்ள நிலையில் சிரியா மீதான போர் மேலும் 50 சதவிகிதம் அதிகரிக்கச் செய்யும். அதாவது, கடந்த மே மாதம் பேரலுக்கு இந்திய ரூபா. ஐந்தாயிரம் என்ற அளவில் இருந்த கச்சா எண்ணெய், இப்போர் காரணமாக ரூபா.பத்தாயிரத்தைத் தொட்டுவிடும்.

இதன் விளைவாக டாலருக்கு எதிரான இந்திய ரூபாய் இன்னும் வீழ்ச்சியுறும். பெட்ரோலியப் பொருட்களுக்கான மானியத் தொகை அதிகரிக்கச் செய்யும். மானியத்தைக் கட்டுப்படுத்த பெட்ரோலியப் பொருட்களை விலையேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். அதனால் பணவீக்கம் பெரிதாகும். பணவீக்கம் அடிப்படை உணவுப் பொருட்களின் விலையேற்றத்துக்கே வழிகோலும்.

ஆக, தென்னை மரத்தில் தேள் கொட்டினால், பனை மரத்தில் நெறி கட்டும். அதிகார வர்க்க மோதலில் அல்லலெல்லாம் அடிமட்ட ஏழைக்கே. அது உயிர்ச்சேதமாக இருந்தாலும் அல்லது வாழ்வின் இருப்புச் சோதனை என்றாலும் பாதிக்கப்படப் போவது ஒன்றுமறியா ஏழைகள் தான். இலங்கையும் பொருளாதார நெருக்கடியை சந்திக்கும்.

### சிரியா மீதான நடவடிக்கையை அமெரிக்கா தனியாகவே மேற்கொள்ளும்'

சிரியாவில் கடந்த வாரம் நடந்த இரசாயன தாக்குதலுக்கு பதிலடியாக, சிரியா மீதான இராணுவ நடவடிக்கையை தனியாகவே கூட எடுக்க அமெரிக்கா தயாராக இருப்பதை குறிப்புணர்த்தும் விதமாக மற்ற நாடுகளின் அயலுறவுக்கொள்கைக்கு அமெரிக்கா பொறுப்பாக முடியாது என்று அமெரிக்காவின் ராஜாங்க அமைச்சர் ஜான் கெர்ரி கூறியிருக்கிறார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் மூத்த உறுப்பினர்கள் மத்தியில் பேசும்போது இவர் இந்த கருத்தை தெரிவித்திருக் கிறார்.

"நாடாளுமன்ற ஆணையை மதிக்கிறேன்": டேவிட் கேமரன்பார்க்க

சிரியா மீதான இராணுவ நடவடிக்கைக்கு ஒப்புதல் கோரும் பிரிட்டிஷ் அரசின் தீர்மானம் பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் கடந்த வியாழனன்று இரவு தோற்றுப்போன பின்னணியில், சிரியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் அவசியத்தை வலியுறுத்திப் பேசும்போது ஜான் கெர்ரி இந்த கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக அமெரிக்கா இறுதியில் என்ன முடிவை எடுத்தாலும் அதை நிறைவேற்றுவதில் சர்வதேச ஒத்துழைப்பு இருக்கவேண்டும் என்பதே ஒபாமாவின் கொள்கையாக இருப்பதாக இராணுவச் செயலர் சக் ஹேகல் தெரிவித்திருக்கிறார்.

சிரியா மீதான இராணுவ நடவடிக்கைக்கு ஒப்புதல் கோரும் பிரிட்டிஷ் அரசின் தீர்மானம் பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் தோற்றுப்போன செயலானது உலக அரங்கில் தொடர்ந்தும் பிரிட்டன் முக்கிய பங்களிப்பை ஆற்ற விரும்புகிறதா என்கிற விவாதத்தை தோற்றுவித்திருப்பதாக பிரிட்டனின் நிதியமைச்சர் ஜார்ஜ் ஓஸ்போர்ன் தெரிவித்திருக்கிறார்.

அதேசமயம் இதனால் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான சிறப்பு உறவு பாதிக்கப்படாது என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு என்பது பழமையானது ஆழமானது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

### 13 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி


சிரியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்கு ஒப்புதல் கோரும் பிரிட்டிஷ் அரசின் தீர்மானம் பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் கடந்த வியாழனன்று இரவு நடந்த வாக்கெடுப்பில் 13 வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கைக்கு ஆதரவாக 272 வாக்குகளும் எதிராக 285 வாக்குகளும் அளிக்கப்பட்டன. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் இந்த முடிவை தாம் மதிப்பதாகவும் ஏற்பதாகவும் தெரிவித்திருக்கும் பிரிட்டனின் பிரதமர் டேவிட் கேமரன் இதன் மூலம் சிரியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை பிரிட்டனின் நாடாளுமன்றமும் பிரிட்டிஷ் குடிமக்களும் விரும்பவில்லை என்பது தெளிவாக தெரியவந்திருப்பதாக கூறியிருக்கிறார்.

நாடாளுமன்றத்தின் இந்த வாக்கெடுப்பின் முடிவு காரணமாக சிரியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் பிரிட்டனின் பங்களிப்பு இருக்காது. கேமரன் தலைமையிலான தற்போதைய அரசு வாக்கெடுப்பில் தோற்றிருந்தாலும் பிரிட்டனின் நாடாளுமன்ற ஜனநாயகம் வெற்றி பெற்றிருக்கிறது என்று ஒருசாரார் வாதாடுகிறார்கள்.

அதேசமயம் பிரிட்டனின் வெளியுறவுக் கொள்கையை அரசுக்கு பதிலாக எதிர்க்கட்சியும், ஆளும் கட்சியின் அதிருப்தியாளர்களும் வடிவமைப்பதை இந்த வாக்கெடுப்பு காட்டியிருப்பதாக கூறும் மறுசாரார் இது சர்வதேச அரங்கில் பிரிட்டனின் ஆளுமையையும் செல்வாக்கையும் குறைக்கவும் குலைக்கவும் செய்யும் என கவலைவெளியிட்டிருக்கிறார்கள்.

எனினும் அமெரிக்கா சிரியா மீது மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் நடவடிக்கை எடுக்கும் ஆயத்தங்களை தொடர்கிறது.



அடுத்த மாதம் நடைபெறவுள்ள சாம்பியன் லீக் இருபதுக்கு இருபது போட்டிகளில் எந்த அணியில் குமார் சங்கக்காரா விளையாடப் போகிறார் என்பது ஒரு சர்ச்சையையே உருவாக்கி இருந்தது.

அதாவது தாயகத்தின் கந்துரட்ட மரூன்ஸ் அணிக்காகவா அல்லது தனது ஐ.பி.எல். அணியான ஹைதராபாத் சண்ரைசர்ஸ் அணிக்காகவா என்பதே அது. இறுதியில் கந்துரட்ட மரூன்ஸ் அணிக்காகவே விளையாடுவர் என்று தீர்மானிக்கப்பட்ட போதும் சங்கக்கார தாயக அணியில் விளையாடாவிட்டால் துரோகம் செய்தவர் ஆவார் என்று வெளிவந்த கருத்துகள் அவரைப் புண்படச் செய்து விட்டன.

இதன் காரணமாக சில உண்மைகளை சங்கக்காரா வெளியிட்டுள்ளது தான் செய்தியாக இருக்கிறது.

# சங்காவின் கவலை

அதாவது ஐ.பி.எல். மற்றும் சாம்பியன் லீக் போட்டிகளில் பங்கு கொள்ளும் இலங்கை வீரர்களிடம் அவர்களது சம்பாத்தியத்தில் 10வீத கமிஷன் பெற்றுக் கொண்டு வருவதாக அதிரடியாக தெரியப்படுத்தியுள்ளார். ஏறத்தாள வருடாந்தம் 1.3 மில்லியன் டொலர்களை (13இலட்சம் x 130ரூபா) இலங்கைக் கிரிக்கெட் சபை கறப்பதாகக் கூறியுள்ளார்.

மேலும் தற்போது தான் ஆடப் போகும் அணி பலமான அணி அல்லவென்றும், நிரந்தர சாதனைகள் கொண்ட அணி அல்ல. என்றும், இதன் மூலம் தன்னால் எந்த சாதனையையும் புரிந்துவிட முடியாதென்பதையும் சுட்டிக்காட்டுவதோடு தான் சண்ரைசர்ஸ் அணியில் விளையாடாமல் விடுவதால் தண்டப்பணமும் செலுத்தவேண்டி ஏற்பட்டு விட்டதென்றும் கூறியுள்ளார்.

இதற்கும் மேலாக, தான் பணத்தாசை கொண்டவன் அல்ல என்றும், என்ன பணத்தாசை கொண்டவனாகக் காட்ட சிறிலங்கா கிரிக்கெட் சபை முனைகிறது என்றும் கூறியுள்ளார். 2003ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை தனது கழகமான என்.சி.சி.அணிக்கு ஆடிய வகையில் எந்தக் கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், நிறையப் பரிசுத்தொகைகளையெல்லாம் எனது அணி வீரர்களுக்கும், கழக ஊழியர்களுக்கும், அவர்களின் முன்னேற்றத்துக்காகவே கொடுத்துள்ளேன் என்றும் கூறியுள்ளார்.

உண்மையில் சங்காவின் திறமை வெளிப்பட்டிருக்கவேண்டுமாயின் அது கந்துரட்ட மரூன்ஸ் மூலமாக அல்ல என்பது மட்டும் உண்மை. அதற்குமேலாக சங்காவிற்கென்று மிகப்பெரிய மதிப்பொன்று கிரிக்கெட் வாழ்விலும், அதற்கப்பாலும் அவருக்குண்டு. இப்போது ஏற்பட்டுள்ள சர்ச்சையில் உண்மை யார் பக்கம் என்று கேட்டால் எல்லோர் கருத்தும் கேள்விக்கிடமின்றி குமார் சங்கக்காராவின் பக்கம் தான் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.




அவுஸ்ரேலியா இங்கிலாந்துக்கு எதிராக ஆஷஸ் தொடரில் கசப்பான தோல்விகண்டாலும் முதலாவது இருபதுக்கு இருபது சர்வதேசப் போட்டிகளை அமர்க்களமாக வென்றார்கள். இந்த வெற்றிக்குக் காரணமாக அமைந்தவர் ஆரோன் பின்ச் இந்த 26 வயது வீரர் 63 பந்துகளில் 156 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 11 நான்குகளும், 14 ஆறுகளும்

# ஆரோனின் ஆறுதல்



அடக்கும். இதேவேளை அவுஸ்ரேலியா குவித்த 248 ஓட்டங்கள் 2007இல் கென்யாவிற்கு எதிராக இலங்கை பெற்ற 260க்கு அடுத்து இரண்டாம் இடம் பெறும் ஓட்ட எண்ணிக்கையாகும்.

மேலும் ஆரோன் பின்ச், நியூசிலாந்தின் பிரெண்டன் மெக்கலம் பெற்ற இருபதுக்கு இருபது சர்வதேச அதிக ஓட்ட எண்ணிக்கையான 123க்கும் அப்பால் சென்று சாதனை படைத்துள்ளார். பின்ச் தனது சதத்தைப் பெற எடுத்துக் கொண்ட பந்துகள் 47 ஆனால் முன்னதாக தென் ஆபிரிக்காவின் நிச்சட் லீவி 45 பந்துகளில் சதம் அடித்த சாதனையைக் கொண்டவராக இருக்கிறார். இதுபற்றி ஆரோன் பின்ச் இடம் கேட்ட போது, தான் இதுபற்றி அறிந்திருக்கவில்லை என்றும், தான் 90களில் சிறிது தாமதமாக விளையாடியதாகவும், அதற்குக்காரணம் பதட்டம் என்றும், சிலவேளை இந்த விடயம் தனக்குத்தெரிந்தால் பந்துகளின் எண்ணிக்கை இன்னும் குறைந்திருக்குமோ தெரியவில்லை என்று சிரித்தபடியே கூறியிருக்கிறார்.

மேலும் நிறைய இளம் வீரர்கள் அணிக்குள் வந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் தான் திறம்பட துடுப்பெடுத்தாடியது தனது நிலையை உறுதிப்படுத்தும் சந்தர்ப்பமாகவும் அமைந்துள்ளதாகக் கூறியுள்ளார். தனது சதம் பற்றிக் கூறும் போது ஒருசில நல்ல நாட்களில் அன்றைய தினமும் ஒரு நாளாக அமைந்தது. அதுவே எனக்கு வாய்ப்பாக அமைந்தது என்றும் கூறியிருக்கிறார்.

# ஏன் என்று கேள்வி

இவ்வருட தேசிய விளையாட்டு விழா நாவலப்பிட்டிய நகரில் உள்ள ஜயதிலக விளையாட்டு அரங்கில் நடைபெற்றுள்ளது. இந்தப் போட்டிகளில் எந்தவிளையாட்டிலாவது தற்போதுள்ள தேசிய சாதனைப் பதிவை முறியடித்தால் அவருக்குப் புத்தம் புதிய கார் ஒன்று பரிசாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



இது பற்றிப் பேசும் இலங்கையின் ஈட்டி எறிதல் வீராங்கனை நதீகலாக் மாலி இது பற்றித் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். அதாவது synthetic track இல்லாத ஒரு மைதானத்தில் இப்போதுள்ள சாதனைகளை முறியடிப்பது சாத்தியம் இல்லை.

மைதானத்தில் புற்றரையே (grass tracks) இருப்பதால் சாதாரண ஓட்டங்கள் கூட, சரிவராத நிலைதான் ஏற்படும் என்றும் கூறியுள்ளார். உண்மையில் இந்த அறிவிப்பு விளையாட்டுத் துறைக்கு எந்த நன்மையும் செய்துவிடப் போவதில்லை. இது உண்மையில் கார் கப்பெனிக்கும், விளையாட்டுத்துறை அமைச்சுக்கும் ஒரு மலிவான விளம்பரம் தேடிக்கொள்ளும் மாயாமன்றி வேறொன்றும் இல்லை. வியர்வை சிந்தி, மிகவும் கஷ்ரப்பட்டுப் பயிற்சி செய்யும் வீர, வீராங்கனைகளுக்கு இதனால் எதுவும் நன்மை கிடைத்துவிடப் போவதில்லை. வெறும் அரசியல் வாக்குறுதிகள் போன்ற வெத்துவேட்டு, வாக்குறுதிதான் இது என்றும், பொரிந்து தள்ளியுள்ளார்.

நான் ஆசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெள்ளிப்பதக்கம் வென்றேன். கடந்த மாதம் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் இறுதிச் சுற்றுவரை முன்னேறினேன். ஆனால் ஊக்குவிப்பு அது, இதுவென்று எதையுமே நான் காணவில்லை. இந்த நிலையில் கார் பரிசாகக் கொடுப்போம் என்று தம்பட்டம் அடிப்பது கேலிக்கூத்தாகத்தான் இருக்கிறது என்று கூறியுள்ளார்.

இதேவேளை மகளிர் Steeple chase வீராங்கனை எரங்க தில்ருக்சி இன்னொருபுறம் வருத்தப்படுகிறார். இலங்கையின் தேசிய சாதனை வீராங்கனை இவர்தான். இம்முறை ஸ்ரிபிள் சேஸ் நிகழ்ச்சியைச் சேர்த்துக் கொள்ளும்படி இந்த விளையாட்டுடன் தொடர்புபட்டவர்கள் எவ்வளவோ கேட்டபோதும் நிர்வாகம் அதனை ஏற்றுக் கொள்ளாமல் தூக்கி எறிந்து விட்டது என்று ஆதங்கப்பட்டுள்ளார்.

இறுதியில் பார்த்தால் எங்கோ என்னவோ அவிழ்க்க முடியாத முடிச்சுகள் இருப்பது போலத்தான் தெரிகிறது. கணிப்புக்குரியவர்கள் பாராட்டப்படாவிட்டால், அவர்களின் நலன்கள் பேணப்படாவிட்டால் யாருக்காக விளையாட்டுக்கள் என்ற வினாவிற்கு யார் விடைதருவது. ஒய்யாரக் கொண்டையில் தாளம் பூவாம் உள்ளே இருப்பது ஈரும் பேனும் என்ற சொல் வாடைதான் ஞாபகத்துக்கு வருகிறது.

# இது ஒரு சாதனை



நாற்பது வருட வரலாற்றைக் கொண்ட ஒரு நாள் போட்டிகளில் மிகமிக அரிதான விடயமாகக் காணப்பட்டது இரட்டைச் சதம் எடுப்பதுதான். இதனை முதன் முதலாகச் சாதித்துக் காட்டியவர் சச்சின் டெண்டுல்கர்.

அடுத்து விரேந்திர ஷேவாக்கும் இரட்டைச்சதம் போட்டார். இப்பொழுது இதே போன்றதொரு இரட்டைச் சதம் இலங்கை கிரிக்கெட் வீரங்கனையொருவரால் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் இது உத்தியோக பூர்வ சாதனையாகக் கொள்ளப்படும் என்பதற்குச் சிறிது காலம் பொறுத்திருக்க வேண்டி ஏற்படலாம். தகவல்கள் சரிபார்த்தல் உறுதிப்படுத்தல், தர நிர்ணயம் போன்றவை இதற்காகத் தேவைப்படலாம்.

இலங்கை விமானப்படை அணிக்கும், பாலிங்க் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான ஒரு நாள் போட்டி ஒன்றில் இலங்கை அணி வீரர்களை சாமரி அத்தப்பத்து ஆட்டம் இழக்காமல் 201 ஓட்டங்களை குவித்துள்ளார். இதில் 27 பவுண்டரிகள் மற்றும் மூன்று ஆறுகளும் அடங்கும்.

அணி எடுத்த மொத்த ஓட்ட எண்ணிக்கை 372 இரண்டு விக்கெட் இழப்பிற்கு எதிரணி பெற்ற ஓட்டங்கள் 42 மட்டும்.

இது ஒரு புறம் இருக்க முன்னதாக, இலங்கை மகளிர் அணியின் கிரிக்கெட் பதிவுகள் முறையாகப் பேணப்படாமல் இருந்த காலப்பகுதியில் ஒரு இரட்டைச்சதம் பெறப்பட்டதாகச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. அதனைச் சாதித்தவர் சந்தமாலி டொலவத்த என்றும் சுட்டிக்காட்டப்படுகிறார். ஆனால் பதிவுகள் பேணப்படாமை இவ்வரது சாதனைக்கு நம்பகத் தன்மையைக் கொடுக்காது என்பதும் உண்மைதான்.

சாமரி அத்தப்பத்து பெருநகரப் பின்னணி கொண்டவர் அல்ல. அநேகமானோர் போல ஒரு கிராமத்தில் இருந்து வந்த பெண்மணிதான். இந்த இருபத்து மூன்று வயதான இடதுகைத் துடுப்பாட்ட வீராங்கனை குருநாகல் மாவட்டம் கொக்கரல்ல என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்.

பின்னர் பாதுகாப்புத் துறையில் சேர்ந்து, தனது ஆர்வத்தாலும் திறமையாலும் குருநாகல் இளையோர் கிரிக்கெட் அணியிலும் விளையாடி தற்போது இலங்கை மகளிர் அணியில் ஒரு தவிர்க்க முடியாத வீராங்கனை. இவரது 23 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 685 ஓட்டங்களைத் தன்னகத்தே வைத்துள்ளார். முன்னதாக 111 ஓட்டங்கள் பெற்ற பதிவொன்றும் உண்டு. கிரிக்கெட் சாதனைப் பதிவுகள் எல்லாவற்றையும் திருப்தி செய்யும் பட்டசத்தில் இரட்டைச்சதம் அடித்த முதல் இலங்கை வீராங்கனை என்று பெயரை இவர் பெறுவர்.



# நாட்டுக்குள் அரங்கேற இருந்த தில்லுமுல்லுகள்

**பிரகஸ்பதி**

**மனித** உரிமை என்பது இருப்பிடம், மொழி, அமைதி எனப் பலவற்றிலும் அடங்கியிருக்கிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், இவை சார்ந்த அனைத்து விடயங்களிலும் நெருக்குதல்களை அனுபவித்திருக்கிறார்கள். கடந்த வாரம் இந்த மனித உரிமை விவகாரத்துக்கு முக்கியமானதாக இருந்தது அனைவருக்கும் தெரியும்.

அந்தவகையில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளை சனி அன்று அவருடைய நாட்டுக்குத் திரும்பிவிட்டார். அவரது அறிக்கை இந்த மாத நடுப்பகுதியில் சமர்ப்பிக்கப்படும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கிறது. விடியாத இரவு இல்லை. ஆனாலும் முடியாத காணிப் பிரச்சினை மட்டக்களப்பில் இருந்து கொண்டே இருக்கிறது.

தொடர்ந்தும் பல தடவைகள் இந்தக் காணிப் பிரச்சினைகள் குறித்து நாம் எழுதியிருந்தாலும், அடுக்கப்படும் பிரச்சினைகள் காரணமாக மீண்டும் ஒருமுறை ஆராயலாம்.

மட்டக்களப்பைப் பொறுத்தவரையில், சிங்கள மக்கள், தமிழ் மக்களின் காணிகளை தங்களது காணிகள் என்றும் தாம் காலா காலமாக வசித்த பிரதேசம் என்றும் சொல்லிக் கொண்டு செயற்படுவதே முக்கியமான முதல் பிரச்சினையாக இருப்பதாக சொல்லப்படுகிறது.

மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கடந்த கால இருப்பிடத்துக்கான ஆவணங்கள் தேவை என்பது கருத்தாக இருந்தாலும், சிங்கள மக்களைப் பொறுத்தவரையில், தமிழ் மக்களுக்கு இருக்கும் அச்ச மனோநிலையைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்பது தெரிகிறது.

அந்தவகையில், அரச அதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடாத்தப்படுகின்ற திட்டமிட்ட குடியேற்றத்தை கிழக்கு மாகாண காணி ஆணையாளர், அரசாங்க அதிகாரிகள் தடுத்து நிறுத்தவேண்டும் என்பது தமிழ் மக்களது கோரிக்கையாக இருக்கிறது.

2004ஆம் ஆண்டுக்குப் பிறகு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எல்லைக் கிராமங்களில் அத்துமீறிய திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் மட்டக்களப்பின் வரலாற்றுரீதியாக காணி எல்லைகளை மாற்றக்கூடிய புதிய வீதிகள் அமைப்பும், அரச வளங்களை முறைகேடாக பயன்படுத்துதல், பிக்குமாரும் ஒருசில பாதுகாப்புத் தரப்பினரும் தவறான திட்டமிட்ட குடியேற்றத்தை மேற்கொள்ளுதல், தமிழர்களின் மீள்குடியேற்றத்திற்கு தடையாக இருத்தல் போன்ற செயற்பாடுகள் குறிப்பிட்ட காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்துவருகின்றன.

இதனால் இனமுரண்பாடுகளை தோற்றுவிப்பதோடு, பிரதேச ரீதியான இனப்பரம்பலையும் மாற்றியமைக்கும். இந்தவகையில் இம்மாவட்டத்தில் நடக்கின்ற திட்டமிட்ட குடியேற்றங்களை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற மாற்றுத் தீர்வையே தேடுகின்றனர்.

மட்டக்களப்பின் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில், உன்னிச்சை கிராமசேவையாளர் பிரிவில், வெட்டிப்போட்டசேனை, மணலேத்தம், மாவலையாறு ஆறு போன்ற இடங்களில் 2004ஆம் ஆண்டுக்குப் பிறகு ஊர்காவல் படையினரும் ஒருசில சிங்கள மக்களும் அரச அனுமதியற்ற முறையில் காணிகளைப் பிடித்து விவசாயம் செய்வதோடு, வீடுகளையும் அமைத்துவருகின்றனர். இப்பகுதியில் பல காணிகள் மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கப்பட்ட காணிகள் ஆகும். இப்பகுதிக்குச் செல்லும் கால்நடைகளை சுருக்கு வைத்துப் பிடித்து கால்நடை உரிமையாளரிடமிருந்து பல்லாயிரக் கணக்கான பணத்தை அறவிடுகின்றனர்.

குதம்பா கதிரவேல்மலை அருகில் மூன்று குடும்பங்களும், ஊர்காவல் படையினரும் 400 ஏக்கருக்கு மேற்பட்ட காணியில் விவசாயம் செய்கின்றனர். வெள்ளைக்கல் தளவாய் மலை 2 குடும்பங்களும் 20 ஏக்கர் காணியில் விசாயம் செய்கின்றனர். கறுவாச்சோலை (குளத்தருகில்) பகுதியில் மூன்று குடும்பங்கள் 40 ஏக்கர் காணியில் வசிக்கின்றனர் என்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவு, கோரளைப் பற்று வடக்கு, பட்டிப்பளை எனப் பல பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணி அபகரிப்புகள் நடைபெற்று வருகின்றன என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவின், கச்சைக்கொடி சுவாமிமலை கிராம சேவையாளர் பிரிவில், கோம்பஸ்தலாவ - கெவிளியாமடு, புளுக்குணாவ பகுதியில், 2012ஆம் ஆண்டு இப்பகுதியில் 76இற்கு மேற்பட்ட சிங்கள குடும்பங்களும், புதிய விகாரைகளும், புதிய வீடுகளும் பிக்குமாராலும் இராணுவத்தினராலும் அனுமதியற்ற முறையில் வழங்கப்பட்டுவருகின்றன. அது மட்டுமன்றி புளுக்குணாவ, ஐம்பது குடும்பம், கெவிளியாமடு 285 குடும்பம், கெவிளியாமடு 25 தமிழ்க் குடும்பம் நிரந்தரமாக வசித்துவருவதோடு, இன்னும் 80ற்கு மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் மீளக்குடியமர வேண்டி உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போது ஏற்பட்டுள்ள முக்கிய குழப்பம், மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமசேவையாளர், பிரதேச செயலாளர், மாவட்ட அதிபர் ஆகியோரின் அனுமதியின்றி நிதி நிறுவனங்கள் வீடு அமைப்பதற்கான நிதியை வழங்குவதும், வாக்காளர் இடாப்பில் பெயர்ப்பட்டியல் இல்லாமல் குடியேற்றுவது, பிரதேச செயலாளரின் காணி தொடர்பான அறிவுறுத்தலின்றி காணி வழங்குவது, மதகுருவும், இராணுவமும், பொருளாதார அமைச்சும் சட்டத்திற்கு முரணாக, நீதிக்கு புறம்பாக தங்களது அதிகாரத்தை பயன்படுத்தி குடியேற்ற திட்டத்திற்கு நீதிமுறைக்கு உட்படாமல் குடியேற்றங்களைச் செய்துவருவதை அதிகாரிகளால் நிறுத்த முடியவில்லை என்பதாகும்.

அப்படி அதிகாரிகள் நிறுத்த முயற்சித்தால் இடமாற்றமும், அச்சுறுத்தலும் தொழிலுக்கு ஆபத்தான நிலைமையில் இம்மாவட்டத்தில் வேலைசெய்யும் பல அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளன. இதேபோல் முஸ்லிம், தமிழ் பிரதேச எல்லைகளில் சில காணி தொடர்பான முரண்பாடுகள் பல பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருக்கின்றன. இந்த விடயமும் அரசியல்வாதிகளின் ஆளுகைக்குட்பட்டு இத்தகராறை தீர்க்க முற்படும்போது இனமுறுகலுக்கு வழிவகுக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இனப்பரம்பலை மாற்றியமைத்து பிரதேசரீதியாக அதிகரிப்பதற்கும் எல்லைப்பகுதியிலுள்ள செங்கலடி, வாகரை, கிரான் போன்ற பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளிலுள்ள காணிகளை வேறு மாவட்டங்களுடன் இணைப்பதற்கும் ஒரு மறைமுகமான நிர்வாக வேலைகள் நடந்துவருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கினறன.

அடுத்துவரும் காலகட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்களின் நிலை கவலைக்கிடமாக மாறும். ஆளும்தரப்பிலுள்ள அமைச்சர்கள் இதுதொடர்பான விடயங்களை சம்மந்தப்பட்டவருடன் பேசினால் அவர்களுக்கும் பல நெருக்கடிகள் உருவாகுமென அஞ்சுவதாகவும் தெரிகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களுக்கு எதிராக செயற்படுகின்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளை தடுத்துநிறுத்துவதற்கு பலமான சக்திகளாலும் அதிகாரிகளாலும், அரசியல் ஆளும்தரப்பினராலும் முடியாத காரியமாகும். எனவே நடக்கின்ற திட்டமிட்ட குடியேற்றங்களை தடுத்துநிறுத்த நீதியை நாடவேண்டும். அதுவும் தோற்கும் பட்சத்தில் தமிழர்களின் நலன் விரும்பும் சக்திகள் தலையிட முன்வரவேண்டும் என்ற வகையான எதிர்பார்ப்பொன்றும் இப்போது ஏற்பட்டுவருகிறது.

இந்த நேரத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புளுகுனாவ மற்றும் கெவிலியா மடு பிரதேசங்களில் நிலவிவரும் காணிப் பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கான காணிக் சச்சேரி நடமாடும் சேவையொன்று கடந்த வார இறுதியில் நடத்தப்பட்டிருக்கிறது. இந்த காணிக் கச்சேரியில் வழமைக்கு மாறாக காணி ஆணையாளர் நாயகம் ஆர்.பி.ஆர்.ராஜபக்ச மற்றும் பிரதி காணி ஆணையாளர் அசந்த குணசேகர, மாகாண காணி ஆணையாளர் கே.ஆர்.டி.பி.ஜ. விஜேதிலக உள்ளிட்டோர் கலந்துகொண்டதுடன், பட்டிப்பளை பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரட்ணம் உட்பட காணி அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதில், இப்பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புளுகுனாவ மற்றும் கெவிலியா மடு போன்ற பிரதேசங்களில் இருந்து பெருமளவிலான தமிழ் சிங்கள மக்கள் கலந்துகொண்டனர். இதன் போது காணி ஆணையாளர் நாயகம் மற்றும் அதன் அதிகாரிகள் இவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்டதுடன் இந்த காணிப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக விண்ணப்பப் படிவமொன்று வழங்கப்பட்டது. இந்த விண்ணப்ப படிவத்தை பூர்த்திசெய்து புதன்கிழமைக்கு முன் பட்டிப்பளை பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

இந்த இடத்தில்தான் இந்தத் தில்லுமுல்லு விளையாட்டு இயலாமல் போனது, சத்தமில்லாமல் சிங்கள மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரத்தினை வழங்கிவைக்கும் திட்டத்தில் மட்டக்களப்புக்கு வந்த காணி ஆணையாளர் நாயகம் விண்ணப்பத்தை வழங்கிவிட்டுச் சென்றார் என்பதுதான் இதிலுள்ள விடயமாகும். இது தமிழர்களின் விழிப்பாலேயே சாத்தியமானது என்றும் சொல்லப்படுகிறது.

மட்டக்களப்பின் புளுகுனாவ மற்றும் கெவிலியா மடு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அரசாங்க காணிகளுக்குள் அத்து மீறிய குடியேற்றம் இடம்பெறுவதாகவும் அவ்வாறு அத்து மீறிகுடியேறியவர்களை உடனடியாக வெளியேற்றுமாறு கோரி இரண்டு வாரங்களுக்கு முன்னர், தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களினால் பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்கு முன்னாள் ஆர்ப்பாட்டமொன்று நடாத்தப்பட்டு பிரதேச செயலாளரிடம் மகஜரொன்று கையளித்திருந்ததுடன், அப்பிரதேச பௌத்த பிக்கு மற்றும் சிங்கள மக்காளலும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நடைபெற்றுவரும் காணிப்பிரச்சினைகள் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள காணி ஆணையாளர் நாயகம் ஆர்.பி.ஆர். ராஜபக்ச வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே அதிகளவான காணிப் பிரச்சினைகள் உள்ளதாக தெரிவித்திருக்கிறார்.

அதேநேரம், அடுத்த 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் நாங்கள் தீர்த்து வைப்போம். இந்த பிரதேசங்களில் யுத்தம் நிலவியதால் இந்த காணிப் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படாமல் இருந்தன. இவ்வளவு நீண்டகாலமாக உள்ள காணிப்பிரச்சினைகளை ஓரிரு மாதங்களுக்குள் தீர்த்து வைக்க முடியாது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள காணிப்பிரச்சினைகளையும் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்திருந்தாலும், அவற்றுக்குள் ஏற்கனவே மட்டக்களப்பு உட்பட கிழக்கில் வசித்த சிங்கள மக்கள் தவிர்ந்த ஏனைய மக்களை உசுப்பேற்றி இப்பிரதேசங்களுக்குள் குடியேற வற்புறுத்துவதனால் பல பிரச்சினைகள் தோன்றிவருவதாக உணரப்படுகிறது.

கற்றறிந்த பாடங்கள் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு அமைவாக காணிப்பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கையினை அரசாங்கம் மேற்கொண்டுவருவதாக தெரிவிக்கப்படுக்கின்றது. இவ்விடயம் குறித்து கருத்துத்தெரிவிக்கும் தமிழ் மக்கள் ஏற்கனவே இப்பிரதேசங்களில் வசித்தவர்கள் வந்து குடியமர்வதில் எந்தவிதமான பிரச்சினைகளும் எங்களுக்கில்லை. அவ்வாறு இருந்தவர்கள் இப்போதும் எங்களது பிரதேசங்களில் வசிக்கிறார்கள். அவர்களை நாங்கள் இங்கு வரவேண்டாம் என்று கூறவில்லை. ஆனால் புதிதாக எங்களது பிரதேசக்காணிகளை அபகரிக்க முயல்வதைத் தான் எதிர்க்கிறோம் என்றே தெரிவிக்கின்றனர்.

இந்தக் காணிப்பிரச்சினை அல்லது அத்து மீறிய குடியேற்றம் இலங்கையின் இனப்பிரச்சினையில் முக்கிய பங்காற்றியது என்ற வகையில், நல்லிணக்க ஆணைக்குழு தனது பரிந்துரையில் இதனை முக்கியப்படுத்தியிருந்தது.

அந்தவகையில், மனித உரிமை ஆணையாளர் நாட்டுக்குள் இருந்தவேளையில் மட்டக்களப்பை அவர் ஒதுக்கிவிட்டு நிகழ்ச்சி நிரலைத் தயாரித்திருந்தாலும், அவ்வேளையில் அநேக நிகழ்வுகள் நடைபெற்றது போன்று தொடர்ந்தும் நடைபெற்று தமிழ் மக்களின் மனங்களை வெல்லும்வகையில் நடவடிக்கைகள் அமைந்திருக்கவேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று நடக்கின்ற தன்மை இல்லாது, வெளிப்படையானதும், இதய சுத்தியுடனானதுமான செயற்பாடுகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதே இதில் முக்கியத்துவமானதாக இருக்கிறது. அதேநேரம் தமிழ் மக்களின் விழிப்பும் இருக்கவேண்டியதே.




புதிய தொடர்...



# மாற்றங்கள்

ஏன் இப்படிச் செய்கின்றார் என அரவிந்தின் மனதை உருக்கிக் கொண்டாலும் தனது பிள்ளையுடன் என்றாலும் சந்தோஷமாக வாழவேண்டுமென நினைத்தான்.

ஆர்த்தியின் அம்மாவின் திட்டப்படி இந்தச் சமூகத்தில் பிள்ளையை யாருக்கும் தெரியாமல் வளர்க்க முடியாததால் வேறு ஓர் ஊரில் வாடகை வீட்டைப் பிடித்து பராமரிப்பிற்கு வயது போன அம்மா ஒருவரையும் ஏற்பாடு செய்து வீட்டைப் பெற்றுக்கொண்டான்.

அரவிந்திற்கு ஒரு வேலை கைவசம் இருந்தும் வைத்தியராக வேண்டுமென்ற எண்ணம் அவனுள் இருக்கத் தவறவில்லை.

இதற்கு வெளிவாரியாக யாரிற்கும் தெரியாமல் படித்துக்கொண்டிருந்தான். இதற்கான இடைநிலைப் பரீட்சையில் சித்தி பெற்றிருந்தான். இறுதியாண்டில் செயன்முறைக் கற்கைக்கும் இறுதிப் பரீட்சைக்குமாக இன்னும் சுமார் 11/2 வருடங்களேனும் படிக்கவேண்டும் அதுவும் தொடர்ந்து படிக்கவேண்டும். இவ்வாறான இக்கட்டான சூழலில்தான் இக்கற்கைக்கான அழைப்புக் கடிதமும் வந்திருந்தது.

தற்போது செய்யும் வேலையில் ஒரு வருடம் சம்பளமற்ற விடுப்பைப் பெறமுடியும். சம்பளமில்லாவிட்டால் படிப்பிற்கும், ஏனைய செலவிற்கும், பிள்ளையைப் பராமரிப்பதற்கும் பணத்திற்கு என்ன செய்வதென யோசித்த அரவிந் பாட்டியிடம் ஆலோசனை கேட்டான்.

தனது மரணச் செலவிற்கு அரவிந் கஷ்ரப்படக் கூடாதென சேமித்து வைத்திருந்த பணத்தினையும், அரவிந்தின் அப்பா அரவிந் சிறுவனாக இருந்தபோது வங்கியில் வைப்பிலிட்ட புத்தகத்தையும் கொடுத்து உன் அப்பா ஆசைப்படி இன்னும் 11/2 வருடத்தில் எப்படியும் நீ வைத்தியராகிவிடுவாய். ஆனால் எனக்கு நீ இப்பவே வைத்தியராகிவிட்டாய் எனக்கூறிய பாட்டி மிகுந்த சந்தோஷத்தில் மிகுந்திருந்தாள்.

ஆனால் அரவிந்திற்கு பிள்ளையுண்டு. மனைவி இல்லையே... இவ்வாறான நிலையில் அரவிந் இனி திருமணமும் செய்யமுடியாதே என்பதைச் சிந்தித்தவாறே பாட்டி மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டார். இருநாட்கள் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டும் பலனளிக்கவில்லை.

இறுதிநேரம் அரவிந்தின் கையைப் பிடித்து என்னை உன்ரை அப்பா கூப்பிடுகிறான் நான் போகக் போறன்... பிள்ளையாரப்பா உன்னைக் கைவிடமாட்டார் என்ற இறுதி வார்த்தைகளுடன் அரவிந்திடமிருந்து பாட்டி விடைபெற்றார். பாட்டியின் இறுதிச்சடங்கை முடித்துக்கொண்டு தனது வீடு, காணி எல்லாவற்றையும் பக்கத்திலிருந்து உதவிகள் செய்த கனகம் அக்காவிடம் பார்க்கும்படி கொடுத்துவிட்டு .அரவிந்த் வைத்தியப் பட்டப் படிப்பைத் தொடரப் புறப்பட்டான்.

மனதில் ஆறாத கவலை, தீராத சோகங்கள் வாட்டிக் கொண்டிருந்தது. ஆர்த்தியின் பிரசவத் திகதிக்கு ஒரு கிழமைக்கு முன் வீட்டிலிருந்து யாருக்கும் தெரியாமல் வெளிக்கிட்டு பெரியாஸ்பத்திரிக்குப் பக்கத்தில் வாடகைக்கு அறை எடுத்து பார்வதியும், ஆர்த்தியும் தங்கியிருந்தனர்.

01ஆம் திகதி ஆர்த்தி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பெண் குழந்தை பிறந்தது. பிறப்பிற்கான எவ்விதமான பதிவுகளும் இல்லாமல் இருந்ததினால் ஆர்த்தியிடம் வைத்தியசாலையின் அதிகாரிகள் விசாரணை மேற்கொண் போது ஆர்த்தி நடந்தவற்றைக் கூறினாலும் சட்டப்படி தந்தையாவது பொறுப்பேற்று ஒப்பமிட வேண்டுமெனக் கூறப்பட்டது.

04ஆம் திகதி ஆகியும் அரவிந்த் வரவில்லை. எதனையும் செய்யமுடியாத வைத்தியசாலை வட்டாரங்கள் பொலிஸில் முறைப்பாட்டை செய்தனர். இப்போது ஆர்த்தியும் சிறைப்பிடிக்கப்பட்டு பிள்ளையையும் அநாதை இல்லத்தில் சமர்ப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அரவிந்த் செய்முறைக் கற்கையில் ஈடுபட்டிருந்ததினால் குறித்த திகதியில் வரமுடியவில்லை. 05ஆம் திகதி வைத்தியசாலைக்குச் சென்றிருந்தான்.

அப்போது பொலிஸ் விசாரணை செய்துகொண்டிருந்தது. அரவிந்தைக் கண்டவுடன் ஆர்த்தி தான் அரவிந்துடன் சேர்ந்து வாழப்போவதாகக் கூறி பிள்ளைக்கான பதிவுகளைச் செய்து வைத்தியசாலையிலிருந்து ஒன்றாகப் புறப்பட்டனர். அப்போது பொலிஸ் உத்தியோகத்தர்கூட வாழ்த்தியனுப்பியிருந்தனர். ஆர்த்தி இப்படி மாறிவிட்டாளா? என நினைத்த அரவிந்த் தன் மனதில் அடுத்த குழந்தையைப் பெறும் கற்பனையைக்கூட செய்து பார்த்தான்.

வைத்தியசாலையின் வெளியில் வந்தபோது பார்வதி அரவிந்தைப் பார்த்து தம்பி ஒருவரையும் கூட்டி வரவில்லையோ எப்படிப் பிள்ளையைக் கொண்டு போகப் போறாய் எனக் கேட்டபோது அரவிந்திற்கு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல் இருந்தது.

(தொடரும்)

---

**நல்லூர்** கோவில் 'தேர்' பார்க்க புறப்பட்டதிலிருந்து அம்மாவின் நச்சரிப்பு.... தாங்க முடியவில்லை. வேணிக்கு வேண்டாம்.... வேண்டாம்.... என்று சொல்லியும் நல்ல நாளாயிருக்கு... புதுச்செயினைக் கோவிலுக்குப் போட்டுக்கிட்டு வா என்று ஆறு பவுண் குண்டுச் செயினை போட்டுவிட்டதே..... அம்மாதான். ஆனால் பொன்விலங்கு ஆகிப்போனது வேணிக்கு.

அம்மாவிடமிருந்து ஆயிரம்...... ஆயிரம்..... அபாயத்தடுப்பு ஆலோசனைகள். பதினெட்டு வயதுப் பெண்ணான தனக்கு ஒரு செயினைப் பார்த்துக் கொள்ளத் தெரியாதா என்ற ஆத்திரம் வேணிக்கு.

தெருவில் மகளை ஓட்டி பின்னாலேயே நடந்தாள்.... அம்மா.... நின்று அவர் பக்கத்தில் நடக்க முனைந்தவளைப் போடி முன்னாலே நான் பார்த்துக்கிட்டு..... வர்றேன் என்று செக்யூரிட்டி வேலையைத் தொடர்ந்தாள். யாராவது செயினை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டால்...? யார் யாரோ செயினைப் பறிகொடுத்த அசட்டுத்தனங்களை விவரித் தவாறே.... நடந்தாள்....... அம்மா.

# பொலிஸ்.... அம்மா...

கோப்பாயில் பஸ் ஏறும்போது நெரிசலில் "தாவணியால் கழுத்தை மூடுடி" என்று உத்தரவு.... ஓ! இதற்குத்தான் கோவிலுக்குப் பாவாடை தாவணிதான் போடவேண்டும் என்று உத்தரவிட்டாளோ! வேண்டுமென்றே கூட்டத்தை தள்ளிக்கொண்டு வேணி பஸ்ஸின் முன்புறம் போய்விட அம்மாவால் அப்படி நுழையமுடியாமல் பின் தங்கும்படி ஆயிற்று.

பாவம் பின்னாலிருந்து இடுப்பை ஒடித்து கழுத்தை வளைத்து வேணியை எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டிருந்த பரிதாபத்தில் வேணிக்குச் சிரிப்பை மூட்டியது. அடக்கிக் கொண்டாள். பஸ்ஸைவிட்டு இறங்கியதும் மறுபடியும் அம்மாவிடம் பிடிபட்டாள். அம்மா "நடிகை அசின்" அளவுக்கு உயர்ந்திருப்பாளோ என்ற நினைப்பு மறுபடி மனதில் கிச்சுகிச்சு மூட்டியது. சமாளித்துக்கொண்டாள். ஒருவழியாக கோவில் முகப்புக்கு வந்தால் கூட்டமோ கூட்டம் நெருக்கியது.

அம்மாவின் பாதுகாப்பு வளையத்தில் சிக்கிய வேணி பொலிஸ் பாதுகாப்பில் பலியாடாய் விழித்துக்கொண்டு நடக்கும் "டான் டிவியில் களவு எடுத்த பெண்ணா பார்த்த காட்சியை நினைத்துக்கொண்டாள் அம்மா எங்கே கோவிலில் முருகனைத் தரிசித்தாள்? சுற்றியிருந்தவர்களெல்லாம் செயின் திருடு வதற்காகவே கிளம்பிவந்தவர்கள் என்பதுபோல் பார்த்தும் உடனுக்குடன் மகள் கழுத்தைப் பார்ப்பதுமாக நின்றாள். இவள் பார்வையை யாரும் கவனித்திருந்தால் இவளைத்தான் திருட வந்தவள் என்று நினைத்திருப்பார்கள்.

அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும் ஆலய வழிபாடில்லை என்று சரஸ்வதி சபதம் படப் பாடலை பாடவேண்டும் போலிருந்தது வேணிக்கு.

"அசட்டு முழி முழிக்காதேடி" பார்த்தாலே ஏமாந்தவள்னு தெரிஞ்சு, செயினைப்பறிச்சிட்டு போயிடுவா என்ற மிரட்டல் வேறு அம்மாவிடமிருந்து.... இதே விமரிசையோடு பிரகாரம் சுற்றிமுடித்து வெளியே வந்து வேணியைப் பிடிக்க விரைந்தாள். கூட்டம் இல்லாத வடக்கு நோக்கி வேகமாக வேணி முன்னால் நடக்க... ம்... குளிர்விட்டுப் போச்சாக்கும். உனக்குத் துப்பிருந்தா நான் ஏன் இப்படித் தவிக்கிறேன் என்ற குற்றச்சாட்டு அம்மா வாயிலிருந்து வந்த மறுநிமிடமே...

ஐயோ கள்ளி செயினை அறுத்திட்டு ஓடுறாளே பிடிங்க பிடிங்க.... என்று கூச்சல் திடுக்கிட்டுத் திரும்பினாள். பார்க்கும்போது தாலிக்கொடி செயினைப் பறிகொடுத்த கழுத்தைத் தடவியபடி கலங்கிப்போய் நின்றிருந்தால் அம்மா.



வ.குணபாலசிங்கம்
நல்லூர்.

---

# சிரிப்பதற்கு!



அவன் நெட்டிலே உட்கார்ந்திருக்கான். இப்போ நீ எவ்வளவு கூப்பிட்டாலும் காதிலே விழாது... பேசாம பேஸ்புக்ல போய் அவனுக்கு ஒரு மெசேஜ் அனுப்பு. சாப்பிட எழுந்து வாடா என்று.



15 வருஷமா தீராத உங்க வியாதிக்கு ஒரு வழியா மருந்து கண்டு பிடிச்சுட்டேன். ஆனா உங்க கெட்டநேரம் எழுதி வெச்ச என்னோட கையெழுத்தை என்னாலேயே படிக்க முடியல்லையே!





# கனவோடு பேசுதல்

கன்னிமாட இருளை
நிலவு கழுவி சலவை செய்துகொண்டிருந்தது.
ஆடவர் நுழைய அனுமதி இல்லை.
கன்னிமாடக் கட்டுப்பாடு அதுதான்!

கட்டுப்பாடு போட்டாலும்
காற்றும் - காதலும்
எங்கும் துரிதகதியில் புகுந்துவிடும்.

காற்றுக்கும் - காதலுக்கும்
இதுவரை யாரும்
வேலி கண்டுபிடிக்க முடியவில்லை.
ஆற்றைக்கூட அணைபோட்டு தடுக்கலாம்
காற்றைத் தடுக்க
எந்தக் கருவியாலும் முடியாது!

காற்றைத் தடுத்தால்
உயிர் கூட்டைவிட்டுப் போய்விடும்.
காதலைத் தடுத்தால்
வாழ்க்கை பட்டுப் போய்விடும்!

காதலர்கள் சுவாசிக்கும்
காற்றிலும் காதல் கலந்திருக்கும்!
காதலரின் இதயத் துடிப்பிலும்
காதல் ஓசை கேட்டுக் கொண்டிருக்கும்.

கடலுக்குள் அலையடிப்பது மாதிரி
காதலர் நெஞ்சுக்குள்
காதல் அலை வீசியடித்துக் கொண்டிருக்கும்!

கோவில் மணியோசை ஒலித்தால்
ஊருக்கே அது கேட்கும்
காதல் மணியோசை ஒலித்தால்
இருவர் மனதுக்குள் மட்டுமே எதிரொலிக்கும்!

ஊசித் துளை வழியாக
ஒட்டகம் நுழைய முடியாது!
ஒரு துளையும் இல்லாதுபோனாலும்
காதலர் தங்களுக்குள் தாங்கள்
நுழைந்து கொள்ள முடியும்!

கன்னி மடத்தில்
மஞ்சத்தில் மலர்ந்து கிடந்தாள் சொர்ணா.
அவள் மனதில் பரவிக் கிடந்தான் செழியன்!

கன்னிமாடக் கட்டுப்பாடு கடந்து
காளை புகுந்து கிடந்தான் இதயத்தில்!

நேரில் கிடைக்காத யோகம்
சில நேரங்களில் நினைப்பில் கிடைக்கிறது!
நினைப்புக்கு வெட்கமும் இல்லை.
வேறெந்த விவஸ்தையும் இல்லை!
கற்பனைக்கு சிறகு முளைக்க
நினைப்புகள் நெடும் பனையாக வளரும்!

விழித்திருக்கும்போது
நெஞ்சில் நிரம்பிவழியும் நினைப்புக்கள்
விழிகளை மூடிக்கொள்ளும்போது
கருவாகி உருவாகிக் கனவாகின்றன!

கனவு பொல்லாதது! கனவு
யார் தடுத்தாலும் நில்லாதது!

"சொர்ணா! என் கண்ணே!
மஞ்சத்தில் நீ புரளும்போது - என்
நெஞ்சத்தில் ஆசை புரள்கிறதேயடி கண்ணே!
உன் பட்டுடலும் எழும் மொட்டுக்களும்

விரல் அளவும் இல்லாத இடைக் கட்டழகும்
கட்டுக்குழல் அழகும், சுட்டுவிழி எழிலும்
பட்டுப் பட்டுப் பிரிகின்ற செவ்விதழ் அழகும்
முத்தைப் பழிக்கின்ற கொத்துப் பல் அழகும்
பித்தைத் தருகிறதே என் முத்து நகைக்காரி!
கட்டியணைக்கட்டுமா? முத்துக் குளிக்கட்டுமா?
சொல்லிவிடு கண்ணே! அன்ரியணை பெண்ணே!"

மன்றாட்டமா? திண்டாட்டமா?
சம்மதம் சொல்ல வெட்கம் வரும்
மன்மத பாணங்கள் மனதில் எழும்!
உச்சியில் ஆசை தாவிவிட
தலை தாங்காது குனியும் - தரை நோக்கும்!

"வெட்கத்தை மூட்டை கட்டிவிடு
வெப்பத்தை விரட்டக் கொட்டிக்கொடு
வெல்லத்தைப் பழிக்கும் இதழ் சுவையை
வெள்ளமென நீ விரைந்து கொடு"

வேண்டினான் - விரைந்தான் - விழுந்து
போனான்.
கை வீசினான் - பற்றினான் - கவிழ்ந்து
போனான்.
தடுத்தாள் - மறுத்து நடித்தாள் - மகிழ்ந்து போனாள்
சிணுங்கினாள் - சிரித்தாள் - சிலிர்த்துப் போனாள்!

விரல் பற்றினான் - பற்றினாள்
விரல்களை மோதவிட்டாள்.
கன்னமும் கன்னமும் சேர்ந்து கொள்ள
எண்ணத்தால் சம்மதம் பகிர்ந்து கொண்டாள்.
காதருகே காதல் மொழி பூசினான்
தேனருவி என நெஞ்சினில் வாங்கினாள்!

தோள் பற்றினான் - துவண்டாள்
மடியினில் சரிந்தவள் புரண்டாள்!
மயங்கிய நிலவினில் மடியினில்
மலர்க் கொடி!
பொங்கிய காளை
வண்டெனத் தாவினான்!

"வாழ்க்கையில் மட்டுமா
மேடும் பள்ளமும்,
பாதையில் மட்டுமா
ஏற்றமும் - இறக்கமும்?"
பட்டுடல் மீது தாவிய கரத்தால்
பட்டறிந்த தத்துவம் உளறினான்!

மலர் முகம் சிவந்தது
மடியினில் அசைந்தது!
அவன் கரமோ அலைந்தது
பூந்தளிர்மேனி தீயில் தோய்ந்தது!
தீயினைத் தணிக்க
காளையை வளைத்தது
தேவியின் திருக்கரம்!

காற்றும் வெட்கத்தில் கடந்து போனது
விண்ணில் நிலாவும்
முகம் மறைக்க திரை தேடிற்று

விண்ணிலா திரை தேட - இங்கே
மண்ணிலாவோ திரை இழந்து போனது!
தடையும் இல்லை - எல்லையும் இல்லை
விரியும் விரியும் இந்திர போகம்
முடியும் முடியும் சொர்க்கம் வசப்படும்

அடியும் முடியும் காணாத பயணம்
விடியும் வரையும் தரிப்பிடம் இல்லை
விளக்கில் எண்ணெய் தீர்ந்து போயினும்
மனதில் ஆசை தீர்ந்து போகாது!

வியர்வை நெற்றியில் முத்துக்கோர்க்கும்
விடிந்ததை நினைத்து வெறுப்புச் சேரும்
சின்னதா இரவு? சினம் கூடும்
மன்மத நினைவோடு யாகம் முடியும்!

"போகாதே நில்!
தனித்திருந்தால் வெந்து போவேன்
தாகத்தில் நான் காய்ந்து போவேன்
போகாதே நில்! போகாதே நில்!

மூழ்கிப் படித்த புத்தகத்தை
விடியலின் கரம் மூடிவிட்டதே!
மீதிக் கதையை படிக்க வேண்டாமா
போகாதே நில்! போகாதே நில்"

களுக்கென்று நகைத்தாள்
கண்மணி சொர்ணா.

கண்டது கனவு
கண்ணுக்குள் வந்தவர் காதலர்!

"கனவே நன்றி! கனவே வாழி
மனதைக் கவர்ந்தவர்
மனதில் உள்ளதை
தூதெனச் சுமந்து வந்தாய் வாழி

வீட்டுக்கு வந்தவர்
யாரெவர் எனினும்
விருந்து கொடுப்பது நம் குணமாகும்
கனவே நீயோ - நெஞ்சுக் கூட்டுக்குள்
வந்தாய் உனக்கென்ன விருந்து
செய்யப்போகிறேன்?
கனவே உனக்கென்ன
கைமாறு செய்யப்போகிறேன்?"

கனவோடு பேசினாள்
கன்னிமாட அழகி!

ஆம்! காதலர் மனம் கனிவானது
அது காதலுக்கு உதவும் புல்லையும்
வாழ்த்தும்
பூவையும் போற்றும்!

இதோ திருவள்ளுவர் காட்டும் காதலியும்
கனவோடு பேசுகிறாள் கேளுங்கள்.

"காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாது செய் வேன்கொல் விருந்து"

அதிகாரம் - 122, குறள் -1211




**சிந்தியா! இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் நவநீதம்பிள்ளைக்கு திருப்தி இல்லை போல் தெரிகிறதே?**

மா.அம்ருதா, கொள்ளுப்பிட்டி.

இலங்கையில் மனித உரிமைகள் விடயமானது திருப்தி தரக்கூடியவகையில் இல்லை, இலங்கை அரசு தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத்தவறியுள்ளது. இலங்கை அரசு பொறுப்புக்கூறும் கடப்பாட்டை தட்டிக்கழித்து வருகின்றது. இலங்கையில் ஊடக சுதந்திரம் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது, சந்தேக நபர்கள் அல்லது அதிருப்தியாளர்கள் அச்சுறுத்தப் படுகின்றனர். பொதுமக்கள் தமது நிலைப்பாடுகளையும், அதிருப்திகளையும் வெளிப்படுத்தும் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளனர். இவ்வாறெல்லாம் இலங்கைமீது குற்றச்சாட்டுக்கள் சர்வதேச சமூகத்தால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டுவரும் நிலையில் நவநீதம்பிள்ளைக்கு இலங்கை தொடர்பான திருப்திதரும் அபிப்பிராயம் இல்லை என்பது ஆச்சரியமானதில்லையே.

**சிந்தியா! வடக்கில் இந்தியப் புலனாய்வாளர்கள் வர்த்தகர்கள் போல் நடமாடுவதாக வன்னி கட்டளைத் தளபதி தெரிவித்துள்ளாரே..?**

எஸ்.சாளினி, கிளிநொச்சி.

அந்தச் செய்தி எந்த நோக்கத்தோடு வெளியிடப்பட்டது என்பதை இந்தியாதான் சிந்திக்கவேண்டும். ஆனால் சீனா உட்பட நமது நாட்டுக்கு வரும் பலர் வெறுமெனவே உல்லாசப் பயணங்களுக்காக மட்டும் வருவதில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதுதவிரவும் பிற நாடுகளின் புலனாய்வு அமைப்புக்கள் தமது பிரஜைகளை நேர்டியாக ஈடுபடுத்துவதையும்விட, இலங்கைப் பிரஜைகளில் பணத்துக்காக வேலை செய்யக்கூடியவர்களை தமது நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வார்கள். நமது நாட்டில்தான் பணத்துக்காகவும், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவும் காட்டிக் கொடுப்பதற்கு பலபேர் தயாராக இருக்கின்றார்களே. அவர்களுக்கு கரும்பு சாப்பிட கூலியும் கிடைத்தால் சும்மா விடுவார்களா?

**சிந்தியா! நவிப்பிள்ளை இலங்கைக்கு எதிராக கூறிய கருத்துக்கு வரவேற்பு தெரிவித்துள்ளதே கூட்டமைப்பு...?**

சி.நாதன், மாத்தளை.

ஊடகங்களுக்காகவும், இலங்கை அரசுக்கு எதிராகவும் தாம் எதையாவது கூறவேண்டும் என்பதற்காக வரவேற்றிருக்கிறார்களே தவிர, உள்ளூர நவிப்பிள்ளை மீது கடுப்பாகவே இருப்பதாக அறிகின்றேன்.

**சிந்தியா! காணாமல் போனோரின் பெயர்களைப் பட்டியலிட்டால் விசாரனைகளை மேற்கொள்ள முடியுமென கூறியிருக்கும் பாதுகாப்புச் செயலரின் கருத்துப் பற்றி..?**

எம்.சைபா, திருகோணமலை.

முன்னர் இவர்தான் இலங்கையில் எவரும் காணாமல்போனதாக தகவல்கள் இல்லை என்று கூறுவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. தற்பொழுது இப்படியும் கூறுவதாக அதே ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. எந்தவொரு ஊடகமாவது அவரிடம் முன்னுக்குப்பின்னாக பேசுகின்றீர்களே என்று கேட்கவில்லை. எல்லோருக்கும் மாடிகளுக்கு அழைக்கப்படுவோம் என்று அச்சம் தொற்றிக் கொண்டுள்ளதோ?

**சிந்தியா! சிரியாவில் வகைதொகையின்றி உயிர்கள் கொன்று குவிக்கப் படுகிறதே?**

கொ.நவரட்ணம், கொக்குவில்.

மிச்சமிருப்பவர்களையும் கொன்று குவிப்பதற்கு அமெரிக்கா தயாராகிக் கொண்டிருக்கின்றது. எல்லாம் முடிந்தபிறகு போர்க்குற்றம், மனித உரிமை மீறல்கள், பொது மக்கள் படுகொலைகள், பொல்லாத யுத்தம் என்றெல்லாம் ஆளுக்கொரு கதைவிடுவார்கள், ஐ.நா. சபையிலும் ஆளுக்கொரு அறிக்கை சமர்ப்பித்து விவாதிப்பார்கள்.

**சிந்தியா! சொர்க்கம், நரகம் எல்லாம் பூமியிலே என்று சொல்கிறார்களே?**

பொ.எழில், அல்வாய்.

நிச்சயமாக. நாமே அதையும் தீர்மானிக்கின்றவர்களாக இருக்கின்றோம்.



**சிந்தியா! உங்கள் மனதை கொள்ளையடித்த ராணி என்று யாரைச் சொல்லுவீர்கள்?**

பா.சோபன், புத்தளம்.

பல நாடுகளில் இன்னும் அரச குடும்பங்கள் இருக்கின்றபோதும், பிரிட்டிஸாரின் அரச குடும்பமே உலகப் பிரபலமான குடும்பமாக கொண்டாடப்படுகின்றது. எலிசபெத் மகாராணியார் இந்த வரலாற்றின் பதிவுகளில் நீண்ட பதிவுகளுக்கு சொந்தக்காரராக இருக்கின்றார். அவரை பிடிக்கும். டயானா இளவரசியாகவே மரணித்து விட்டதால் அவரை குறிப்பிட முடியவில்லை.

**சிந்தியா! அழகும் ஆபத்து. இல்லையென்றாலும் பிரச்சினை. அதற்கு என்னதான் செய்யலாம்?**

எம்.அபி, கொழும்பு–15

பிறந்த பயன் எய்தப்படும் வரை பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதை எவரும் தவிர்த்துவிட முடியாது. இதில் அழகு ஆபத்து. இல்லாவிட்டாலும் பிரச்சினை இருக்கவே செய்யும்.

**சிந்தியா! அமெரிக்கா புளோரிடா கடலை 64 வயதுடைய வீராங்கனை டயான நையத் தனது ஐந்தாவது முயற்சியில் நீந்தி சாதனை படைத்துள்ளாரே..?**

எம்.அனற்டயானா, மன்னார்.

அதற்காக பாராட்டலாம், யுத்தம் நடைபெற்ற காலத்தில் வயோதிபர்களும், கர்ப்பிணிகளும், குழந்தைகளும் உணவு இன்றி, ஓய்வின்றி, சுத்தமான குடி தண்ணீர் இன்றி எத்தனை இரவு - பகல்கள், எத்தனை கிலோமீற்றர் தூரங்கள் நடந்து திரிந்திருக்கின்றார்கள் என்பதை கணக்கிட்டால் அந்தச் சாதனைகளை யார் பாராட்டுவது, யார் விருது கொடுப்பது என்று நினைக்கும்போது வெறுமையே மிஞ்சுகின்றது.


ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா


## மலையாள மாந்திரிக சக்தி

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

**MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM**

23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508



# அந்தரத்தில் நடிகர் விஜய்!

நடிகர் விஜய் திக்குத் தெரியாத திசையில் நிற்கிறார். 'தலைவா' படத்திற்கு அவர்பட்ட சிரமங்கள், விஜய்க்கு மட்டுமல்ல, அவரது ரசிகர்களுக்கும் ஏகப்பட்ட பதற்றத்தைக் கொடுத்திருக்கிறது. அவரது தந்தையும், தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத் தலைவருமான எஸ்.ஏ. சந்திரசேகரனும் ஏகப்பட்ட குழப்பத்தில் இருக்கிறார்.

அரசியல் என்ற ஆசைத் தீயில் குதித்துவிட்ட நடிகர் விஜய் மற்றும் அவரது தந்தை எஸ்.ஏ. சந்திரசேகரன் ஆகியோர் புலி வாலை பிடித்த கதையாக திக்குமுக்காடிக் கொண்டிருக்கிறார்கள். இருவருக்கும் அரசியல் கல்வி போதித்தது திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால் சென்ற முறை ஆட்சியிலிருந்தபோது விஜய்க்கும், ஸ்டாலினின் மகன் உதயநிதி ஸ்டாலினுக்கும் 'மங்காத்தா' பட ரீலீஸில் சிக்கல் எழவே, இருவரும் எதிரெதிர் துருவங்களாக மாறினார்கள். தி.மு.க.வை வீழ்த்த அ.தி.மு.க.விற்கு ஆதரவு என்ற நிலைப்பாட்டை எடுத்தார். அந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கவில்லை. ஒரு காலத்தில் காங்கிரஸுடன் இணைவதுபோல் போக்குக் காட்டி டெல்லி சென்று காங்கிரஸ் துணை தலைவர் ராகுல் காந்தியை சந்தித்தார். அதிலும் அவர் உறுதியாக நிற்கவில்லை. இப்படி தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ் என்று மூன்று முக்கிய கட்சிகளிடமும் அவர் முயற்சி செய்துபார்த்து அவரது அரசியலுக்கு சாதகமான சூழ்நிலை அமையவில்லை.

இந்த நிலையில் இப்போது 'தலைவா' படத்திற்கு ஏற்பட்ட தடங்கலை சமாளிக்க முதல்வர் ஜெயலலிதாவை பாராட்டினார். படத்தை ரிலீஸ் பண்ணுவதற்கு உதவி செய்யுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார். இதுபோன்ற அணுகுமுறை அவரது ரசிகர்களை முணங்க வைத்துவிட்டது. "அரசியல் என்று வந்தால் பல பிரச்சினைகள் இருக்கும். நடிகர் கமல்ஹாசன் தன் 'விஸ்வரூபம்' படத்திற்கு வந்த சிக்கலை சமாளித்து வெளியே வந்ததுபோல் வந்திருக்கவேண்டும். இவர் ஏன் பாராட்டி அறிக்கைவிட்டார்" என்றே பல ரசிகர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். 'தலைவா' படம் பெரும் வசூலைப் பெறவில்லை என்ற நிலையிலும் கூட தியேட்டர்களில் கூடும் ரசிகர்கள் தலைவா, தலைவா என்று நடிகர் விஜய் மீது அக்கறைகொண்டு கோஷங்கள் எழுப்புவதை கேட்கமுடிகிறது. அந்தளவிற்கு உணர்ச்சிகரமாக நிற்கும் ரசிகர்களை விஜய் தன் பக்கம் நிற்கவைப்பதற்கான முயற்சிகள் எதையும் தலைவா பட விஷயத்தில் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு அவரது ரசிகர் மன்றத் தலைவர்கள் மத்தியில் இருக்கிறது.

இதுபற்றிப் பேசிய விஜய் ரசிகர் மன்றத் தலைவர் ஒருவர், பாட்சா படத்திற்கு பிரச்சினை வந்தபோது ரஜீனி சிலிர்த்து எழுந்துநின்றார். விஸ்வரூபம் பட ரிலீஸை எதிர்த்துப் போராட்டம் வந்தபோது நடிகர் கமல்ஹாசன் நிமிர்ந்து நின்றார். ரஜினி, கமல்போல் தைரியமாக தனது படத்திற்கு உரிய பிரச்சினைகளை சந்திக்கவில்லை. அதனால்தான் ரசிகர்கள் சோர்வடைந்து போயிருக்கிறார்கள் என்று கவலையுடன் தெரிவித்தார்.

இந்த நிலைமை நடிகர் விஜய்க்கும் தெரியாமல் இல்லை. தலைவா படத்திலிருந்து அவர் எதிர்பார்த்த மவுஸ் கிடைக்கவில்லை. அதனால் அடுத்து எந்தக் கட்சியின் துணையுடன் அரசியல் களத்தை சந்திப்பது என்பதில் அவரது தந்தையும் தீவிர ஆலோசனையில் இறங்கியிருப்பதாகத் தெரிகிறது.

விஜய்க்கு இருக்கும் ரசிகர்களில் பலதரப்பட்ட சமுதாயத்தினரும் இருக்கிறார்கள். ஆனால் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆதரவுபெற்றவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அவரிடமிருந்து விலகிச் சென்றுவிட்டார்கள். அதே நேரத்தில் மைனாரிட்டி சமுதாய ரசிகர்கள் அவருக்கு அதிகளவில் இருப்பதாகவும் ஒருவிதக் கருத்து மேலோங்கி நிற்கிறது. இந்த அடிப்படையில்தான் முதலில் அவர் காங்கிரஸுடன் நெருக்கமாகப் போகலாம் என்று நினைத்தார். ஆனால் இனி காங்கிரஸுடன் தோழமை கொள்வது நல்ல சகுனமாக இருக்காது என்றே நடிகர் விஜய் நினைக்கிறார். அதற்குக் காரணம் ஆல் இந்தியா அளவில் காங்கிரஸ் கட்சிக்கு ஒவ்வொரு மாநிலத்திலும் ஏற்பட்டுவரும் நெருக்கடிகள் என்பதைவிட அக்கட்சி மீண்டும் மத்தியில் ஆட்சிக்கு மூன்றாவது முறையாக வருமா என்ற கேள்வி அவர் மனதில் ஓங்கி ஒலிக்கிறது.

இன்றைக்கு தமிழகத்தில் திரையுலக பிரபலங்கள் ஆதரவு இல்லாமல் இருப்பது பா.ஜ.க. தான். இந்த சூழ்நிலையில் தமிழக வாக்காளர்களை கவர்ந்து இழுக்க, நடிகர் விஜய் பக்கம் கவனம் செலுத்தலாமா என்ற சிந்தனை தமிழக பா.ஜ.க. மேலிடத் தலைவர்களுக்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதுதவிர சில தினங்களுக்கு முன்பு சென்னை வந்தார் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத். அவர் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை தலைமைச் செயலகத்தில் சந்தித்தார். அந்த சந்திப்பு முடிந்த பிறகு வெளியே வந்த பிரகாஷ் காரத், 'அ.தி.மு.க.வும், கம்யூனிஸ்டுகளும் சேர்ந்து மத்திய அரசின் முடிவுகள் பலவற்றை எதிர்க்கிறோம். அந்த வரிசையில் அ.தி.மு.க.வுடன் சேர்ந்து பணியாற்ற முடியும் என்று நம்புகிறேன்' என்று பேட்டியளித்தார். குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி பிரசார நிமிர்த்தமாக தமிழகத்திற்கு வரும்வேளையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஏன் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் பிரகாஷ் காரத்தை சந்தித்தார் என்ற கேள்வி பா.ஜ.க.வின் மேலிடத் தலைவர்களுக்குள் எழுந்த வண்ணம் இருக்கிறது. 'முதல்வர் ஜெயலலிதா- பிரகாஷ் காரத் அரசியல் சந்திப்பு' பா.ஜ.க.விற்கு பொஸிட்டிவாகத் தெரியவில்லை. இது போன்ற சூழ்நிலையில் தமிழகத்தில் தங்களுக்கு என்று ஓர் அணி உருவாக்கவேண்டும். அதற்கு நடிகர் விஜய் போன்றவர்களை சேர்க்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் பா.ஜ.க. தலைவர்கள்.

அடுத்து நடிகர் விஜய் புதிய படம் எப்போது எடுக்கப் போகிறார்? என்பது மில்லியன் டொலர் கேள்வியாக இருக்கிறது. அதற்குக் காரணம் அரசியல் அபிலாசைகளில் இருக்கும் அவரின் படங்களை அமைப்புகள் சில ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி எதிர்க்கக் கூடும். அப்படி எதிர்க்கும்போது ஆட்சியிலிருக்கும் அ.தி.மு.க.வால் என்ன உதவி கிடைக்கும் என்பதெல்லாம் அவருக்கு தூக்கத்தைக் கலைக்கும் விஷயமாகவே இருக்கிறது. சரி, நடிப்பு வேண்டாம். அரசியல் பக்கம்போய் விடுவோம் என்று நடிகர் விஜய் கருதினாலும், அதற்கு ஏற்ற சூழ்நிலை இப்போது பா.ஜ.க.வில் மட்டுமே இருக்கிறது என்று நடிகர் விஜய் நினைப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 'நடிப்பு என்றாலும் சரி, அரசியல் என்றாலும் சரி நமக்கு முதுகெலும்பாக இருப்பவர்கள் ரசிகர்கள். 'தலைவா' படவிவகாரத்தில் நாம் அடித்த பல்டியில் அந்த ரசிகர்கள் சோர்ந்து போயிருக்கிறார்கள். அவர்களை தட்டி எழுப்பவாவது நாம் இப்போது நரேந்திர மோடி பக்கமாகப் போகவேண்டும்' என்றே நடிகர் விஜய்க்கு அவரது நெருங்கிய வட்டாரம் அட்வைஸ் பண்ணுகிறதாம். அதனால் மோடிக்கு ஆதரவாக களமிறங்குவாரா விஜய் என்பதே இப்போதைக்கு உள்ள கேள்வி!

# வடபகுதி முஸ்லிம்களின் துன்பியல் கதை

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

அந்த ஒரு கணம் யாழ். முஸ்லிம்கள் அதிர்ச்சியில் உறைந்திருக்க, புலிகள் தங்கள் சமூகத்தை இனச்சுத்திகரிப்புச் செய்யப்போகின்றார்கள் என்பதை அறிந்திராத ஒரு சில அப்பாவி முஸ்லிம்கள், வடபகுதியில் தங்களின் இருத்தலுக்கான நியாயத்தை புலிகளிடம் முன்வைத்தனர்.

கேள்வி மேல் கேள்விகளைக் கேட்டனர். தாங்கள் ஏன் வெளியேற வேண்டுமென மீண்டும் மீண்டும் தங்களது இயலாமையை முன்வைத்து மண்டியிட்டு நின்றனர், கெஞ்சிப் பார்த்தனர். இருந்தும் புலிகள் என்கின்ற மிருகங்களின் செவிகளில் இவை எதுவுமே ஏறவில்லை. எல்.ரீ.ரீ.ஈ இனர் அசைந்து கொடுக்கவே இல்லை.

ஆமாம். முஸ்லிம்கள் நியாயம் கேட்டு நின்றபோது பதிலாக புலிகள் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத்தான் தீர்த்தனர்.

இதனால் அச்சம் மேலோங்கிய நிலையில் யாழ். முஸ்லிம்கள் ஜின்னா மைதானத்தை விட்டு இறுதித் தடவையாக தங்களது இல்லங்களை நோக்கிச் சென்றனர்.

அது, அங்கு தாங்கள் மீண்டும் வாழ்வதற்காக அல்ல, தங்கள் குடிமனைகளை விட்டு அகன்று செல்வதற்கான கடைசிப் பயணமும் பார்வையுமாக அது இருந்தது.

நெஞ்சம் தாங்காத ஒரு சோகமும் துயரமும், இதயம் வெடித்துப் பிளந்து இரத்தம் வெளியே சிந்துவதுபோல் இருந்தது.

தாங்கள் பிறந்துவளர்ந்து விளையாடி வேலைபார்த்து, உண்டு, உறங்கி, உல்லாசமாய்ப் பொழுதைப் போக்கி வணங்கி வழிபட்ட மண்ணல்லவா.

அந்த சரித்திரம் இன்னும் சற்று நேரத்தில் உறங்கி விடப்போகின்றது என்பது, அவர்களுக்கும் அவர்கள் வாழ்ந்த அந்தப் பூமிக்கும் இப்பொழுது புரிந்துவிட்டது.

முஸ்லிம்கள் ஜின்னா மைதானத்திலிருந்து வீடு திரும்பியபோது முஸ்லிம்களின் ஒவ்வொரு வீட்டிலும் குடிசைக்குள்ளும், கடைகளிலும் புலி உறுப்பினர்கள் ஏற்கெனவே ஆயுதங்களுடன் நிறுத்தப்பட்டிருந்தார்கள்.

வீட்டில், குடிசையில், கடையில், களனியில் இருந்த எந்தப் பொருட்களையும் எடுத்துவர புலிகள் அனுமதிக்கவில்லையே!!! கையில் நூற்றைம்பது ரூபாய் பணம் மாத்திரம் எடுத்துச்செல்ல புலிகள் அனுமதித்திருந்தார்கள்.

மாற்றுடையோ, ஏன் மருந்து மாத்திரைகளையோ, பாலகர்களுக்குப் பால்மாவையோ எடுத்துச்செல்ல அந்தப் படுபாதகர்களான புலிகள் அனுமதித்திருக்கவில்லை.

அந்தோ பரிதாபம்!! அந்தக் கடைசிக் கட்டத்தை எண்ணிப் பார்க்கும்போது நெஞ்சம் இன்னமும் பதறுகிறது.

கடைசியாக வீட்டுக்குச் சென்று ஒரு மிடறு தண்ணீரைத்தான் பதற்றத்துடன் குடிக்க முடிந்தது.

பலர் தமது வாழ்விடத்தை திரும்பிப் பார்த்தபடி கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோட பின்பக்கமாகவே நடந்து சென்றனர். அவர்கள் வாழ்ந்த குடிமனைகள் நீரூற்றி வளர்த்து நிழல் கொடுத்த மரங்கள் அசைவற்று நின்றன.

அன்று தொடக்கம் ஆண்டவனை ஐந்து வேளையும் வணங்கி வழிபட அழைக்கும் தொழுகைக்கான அழைப்பொலி "பாங்குச் சத்தம்" வடபகுதியில் கேட்கவே இல்லை.

உங்கள் சொத்துக்கள் அனைத்தையும் எங்களிடம் விட்டுச்செல்லுங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம் என்ற எல்.ரீ.ரீ.ஈ யினரின் நயவஞ்சகமான கூற்றை எந்தவொரு முஸ்லிமும் நம்பத் தயாராய் இருந்திருக்கவில்லை.

உங்கள் பொருள் பண்டங்களை, உடைமைகளை நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம் எனக்கூறிய புலிகள், முஸ்லிம்கள் தங்களது வாழ்விடங்களை விட்டு வெளியேறி அவர்களது வாசனை அகல்வதற்கு முன்பதாகவே தங்கள் சகாக்களையும், புலி ஆதரவாளர்களையும் கொண்டு முஸ்லிம் மக்களின் சொத்து சுகங்களையெல்லாம் வாரிச் சுருட்டிக் கொண்டு அனைத்தையும் துடைத்தெடுத்து விட்டனர்.

இப்படியெல்லாம் அப்பாவிகளின் சொத்துக்களை அடித்துப் பறித்தெடுத்துக் கொண்டதால்தான் புலிகளின் பெரும்புள்ளிகளாலும் அவர்களது உறவினர்களாலும் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் சொகுசாக வாழமுடிந்தது.

மனித உணர்வுகளை, சொந்த உழைப்புக்களை சூறையாடிய பணத்தில், எத்தனையோ மனிதர்களைக் கொலை செய்து பெற்ற பணத்தில், தன் மகன் மனித உயிர்களைக் காப்பாற்றுவதற்காக மருத்துவம் படித்துவந்தார் என்று பிரபாகரன் பிதற்றிக் கொண்டதில் அநியாயம் இருக்கத்தான் முடியுமா? இந்த அநியாயத்தை என்னவென்று கூறுவது?

இதுதான் புலித்தலைவராக இருந்த பிரபாகரனின் உண்மை வரலாறு.

நான் மனித உயிர்களைப் பலியெடுக்கும்போது உன்னைப் படிக்க வைக்கின்றேன். மகனே நீ மனித உயிர்களைக் காப்பாற்றுவது பற்றிப்படி. ஏனென்றால் நாளை ஒரு நாள் மனிதர்களையெல்லாம் நான் அழித்துவிடும்போது என் குடும்பத்தை மட்டும் நீதான் காப்பாற்ற வேண்டும் எனத் தன் மகனை பிரபாகரன் படிக்க வைத்திருக்கலாம்.

ஆனால், வடக்கிலிருந்து முஸ்லிம்கள் உடுத்த உடையுடன் விரட்டப்பட்டபோது தமிழ் மகனான ஒரு கல்லூரி அதிபர் கூறினார். அவர் தனது உள்ளத்திலிருந்தே இதனைக் கூறினார் "முதல் நாள் நான் கல்லூரிக்குச் சென்றபோது ஆயிரம் மாணவர்கள் இருப்பதாகக் கூறினார்கள், மறுநாள் சென்றபோது வெறும் எழுபது மாணவர்கள் மட்டுமே இருப்பதாகக் கூறினார்கள். நான் அங்கே நிர்வாணமாக நின்றேன்.

(தொடரும்...)




# காதிலை பூ கந்தசாமி

**வணக்கமுங்கோ.**

யாழ்ப்பாணத்தில தேர்தல் விளம்பரங்கள் பத்திரிகைகளில வர வெளிக்கிட்டுட்டுதுங்கோ. யானைக் கட்சி சார்பில வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கும் மண்ணெண்ணெய் மன்னிக்கவும் மகேஸ்வரனின்ர தம்பியார் பத்திரிகைகளுக்கு விளம்பரம் குடுக்கிற பாணியே புதுசா இருக்குதுங்கோ.

பொதுவாகவே யாழ்ப்பாணத்தில பத்திரிகைகள் செத்த வீட்டு விளம்பரங்களைப் பார்க்கிறதில தான் மார்க்கெட்டிங் ஆகுதெண்டு பகிடியாச் சொல்லுவினமுங்கோ. துவாரகேசனும் அந்த ரிக்சைப் பிடிச்சுக் கொண்டாருங்கோ. தன்னுடைய விளம்பரத்தையும் அந்தப் பாணியிலயே வடிவமைச்சு இருக்கிறாருங்கோ. இடப்பக்கத்தில மகேஸ்வரனின்ர போட்டோவையும், வலப்பக்கத்தில ரவிராஜின்ர படத்தையும் போட்டு, அடியில அவரின்ர படத்தையும் போட்டு விளம்பரத்தைப் பார்த்ததும் அப்பிடித் தானே தோணுதுங்கோ.

என்ன சொல்லுறார் தெரியுமோ? மீண்டும் ஒரு ரவிராஜை, மீண்டும் ஒரு மகேஸ்வரனை தமிழ் மக்கள் பார்க்க வேணும் எண்டா தனக்கு வாக்களிக்க வேணுமாமுங்கோ.

நான் தெரியாமல்தான் கேட்கிறேனுங்கோ, அண்ணை தியாகராஜாவே ஒரு மகேஸ்வரன் போதும் எண்டு தானேங்கோ அடுத்ததுக்கு ட்ரை பண்ணினார். உண்மை அதுவாக இருக்க இவரால மட்டும் இன்னொரு மகேஸ்வரனாக வலம்வர முடியும் எண்டு யாருக்குங்கோ கதை விடுறார். உதுல இன்னொரு பகிடியும் தெரியுமோ? யாழ்ப்பாணத்து மக்களை முட்டாள்கள் ஆக்குவதற்கு இவையள் கையில தூக்கிற கோஷம் தங்களுடைய தனித்துவம் ஒண்டும் இல்லையுங்கோ. அவரைப் போல, இவரைப் போல தாங்களும் செய்வம் எண்டுதான் சொல்லி வாக்குக் கேக்கினமுங்கோ. ஏனெண்டால், இவையின்ர தனித்துவ சீத்துவத்தை வெளியில சொல்லப்போனால், சனம் வாக்குப் போடாதுகள். வேறொண்டுக்குத்தான் போடுங்கள் எண்டதை இவங்கள் நல்லாத் தெரிஞ்சிருக்கிறாங்கள்.

ஏனெண்டால், இன்னும் செல்வநாயகத்தையும், அமிர்தலிங்கத்தையும் சொல்லிக்கொண்டே ஒரு கூட்டம் வாக்குத் திருடிக் கொண்டிருக்கினமல்லோ. அப்பிடிப் போலதான் காரைநகரில இருந்து களத்தில குதிக்கிறவை மகேஸ்வரனை மார்க்கெட் பண்ணி பொலிற்றிக்ஸ் செய்யலாம் எண்டு நினைக்கினமுங்கோ. உந்தப் பருப்பு இனியும் வேகாதுங்கோ.

போன தடவையே பார்ளிமெண்ட் எலக்‌ஷனில நடக்கக் கூடாதது நடந்திட்டுது எண்டு, காரைநகரில கொஞ்சப்பேர் இன்னும் தலையில கைய வைச்சுக் கொண்டு திரியினமாமுங்கோ.

ஏன் வேட்பாளராக இறங்கியிருக்கிறன் எண்டதையும் சொல்லுறார் இல்லை. வெண்டாப் பிறகு என்ன செய்யப் போறன் எண்டதையும் சொல்லுறார் இல்லையுங்கோ. அதுகள விட்டுப்போட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை எங்கயும் வேகத்தடை போட்டால் அது வேவு பாக்கத்தான் எண்டு அறிக்கை விடுறதும், பாதாளக் கோஷ்டிகளாலை தனக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் எண்டும் குழந்தப்பிள்ளைத் தனமாக அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறாருங்கோ.

எட உந்த சில்லறைத்தனங்கள் இவ்வளவுதானா எண்டு கேட்டியள் எண்டா, அதுவும் இல்லையுங்கோ. உந்த யாழ்ப்பாணச் சனத்தை அவ்வளவு கெதியில விடுவனோ எண்ட மாதிரி கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் தான் ஓட்டுற பஸ்ஸிலை காட்டுற சினிமாவில கட்டிங் கட்டிங் பண்ணி வாக்குக் கேட்டு குளறுறாராமுங்கோ.

அந்த பஸ்ஸில பயணம் செய்யிறவ எல்லாம் உந்தக் கோதாரி முடிஞ்சு எப்படா ஊர்போய்ச் சேருவம் எண்டு திட்டித் தீர்க்குதுகளாமுங்கோ. இவரெல்லாம் தேர்தலில குதிச்சு அமரர் மகேஸ்வரனின்ர மரியாதையைக் கெடுக்கினம் எண்டு சனங்கள் ஒப்பினாவே சொல்லினமுங்கோ.

இவ்வளவையும் தாங்கிக் கொண்டு கலா அக்காச்சி எப்பிடித்தான் காலம் தள்ளுறாவோ எண்டதுதான் என்ர கவலையுங்கோ.

**யாவும் கலப்படமற்ற பொய்**

# உயிர் காத்த விளக்கு



பல்வேறு வாயுக்களைப் பற்றி ஆராயும் கழகம் இது. அடுத்த சில ஆண்டுகளில் டேவி, சில அசாதாரணமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். சிலவித வாயுக்கள், மனித உடலில் எத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள, அவற்றைத் தாமே முகர்ந்து பார்த்து ஆராய்த்தார். சிரிக்கச் செய்யும் வாயுவான (லாஃபிங் காஸ்) நைட்ரஸ் வாயுவை, அனஸ் தெடிக்கா (வலி மறந்துப் போகச் செய்தல்) பயன்படுத்தலாம் என்பதைக் கண்டார். துரதிர்ஷ்டவசமாக அன்றைய மருத்துவமனைகளில் இருந்த ஒரு சேர்ஜன்கூட, இக்கண்டுபிடிப்பின் முக்கியம் பற்றி உணரவில்லை. டேவி, தன் கண்டுபிடிப்பைப் பற்றி பிரசுரித்தும்கூட. இந்த அனஸ்தெடிக்கைப் பயன்படுத்தாமேலேயே பல ஆண்டுகள் ஏராளமான ஒப்பரேஷன்கள் நிகழ்த்தப்பட்டன.

மின்சார விஞ்ஞானம் (எலக்ட்ரோ கெமிஸ்ட்ரி) பற்றியும் ஆராய்ந்தார் டேவி. மின்சாரத்தின் மூலம், பொருள்களின் இரசாயனத்தைப் பிரிக்கும் எக்ட்ரோலிடிக் முறையை உருவாக்கினார்.

சேர் ஹம்ப்ரி டேவி விஞ்ஞானி மட்டுமல்ல. நல்ல கவிஞரும்கூட. அழகான தோற்றமுடையவர். இத்தகைய ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானி, தங்களுக்கு உதவ சம்மதித்ததை நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் கழகம் பெரும் வெற்றியாகக் கருதியது இயற்கைதானே! கழகத்தினின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டதும் டேவி செயற்படலானார். தன் ஆராய்ச்சிக்கூடத்தில் பல்வேறு எரிவாயுக்களின் மாதிரிகளைக் கொண்டு ஆராயலானார். மூன்றே வாரத்தில் கழகத்தினருக்கு ஒரு செய்தி அனுப்பினார்.

நிலக்கரிச் சுரங்கத்தில் நிகழும் வெடி விபத்துக்களைத் தவிர்க்க, தன்னால் முடியும் என்று. மற்ற வாயுக்களிலிருந்து மாறுபட்டது சுரங்கத்தினுள் உருவாகும் எரியாவியான, ஃபயர் டாம்ப், இந்த வாயு வெடிக்க மிக அதிகமான உஷ்ணம் தேவை என்பதைக் கண்டார் டேவி. இதைத் தவிர்க்கும்படியான ஒரு விளக்கைக் கண்டுபிடித்தால்? அந்த விளக்கின் சுடர் வெப்பக் கதிர்களைப் பரப்பாதிருக்கவேண்டும்.

**(தொடரும்)**

# இந்தவாரம் உங்கள் பலன்

(05.09.2013 தொடக்கம் 11.09.2013 வரை)

## மேடம்

அரசியல்வாதிகளால் எதிர்பாராத சில ஆதாயங்கள் உண்டாகும். உற்றார், உறவினர்களின் திடீர் வரவுகளால் பொருட்செலவுகள் வந்தாலும் அவர்களால் சில ஆதாயம் அடைவீர்கள். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக புதிய கடன்வாங்க முயற்சிப்பீர்கள். அலுவலகங்கள் மற்றும் வீடுகளை இடமாற்றம் செய்ய போட்டிருந்த திட்டங்களில் சற்று பின்னடைவு உண்டாகலாம். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களை கடன்கொடுப்பதைத் தவிர்க்கவும். பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் மாறி முன்னேற்றமான சூழ்நிலைகள் உருவாகும். திருமணம் ஆகாதவர்களுக்கு இதுவரையில் இருந்து வந்த தடைகள் நீங்கித் திருமணம் நடைபெற வாய்ப்பு உள்ளது. படித்த வேலையில்லாத இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும்.

## துலாம்

எதிர்பாராதவிதமாக நண்பர்களால் சில ஆதாயங்களும் மனமகிழ்ச்சியும் அடைவீர்கள். வரவேண்டிய மனைவி வழிச்சொத்துக்களும் மற்றும் பணமும் கை வந்துசேரும் காலமாகும். புதிய வேலைவாய்ப்புகளுக்காக மற்றவர்களை நம்பிப் பணம் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். வெகுகாலமாகக் காணாமற் போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்பிவர வாய்ப்பு உள்ளது. பிள்ளை இல்லாதவர்களுக்கு இறையருளால் புத்திரபாக்கியம் கிடைக்கும் காலமாகும். கணவன், மனைவி உறவுகளில் இருந்துவந்த நீண்டகால மனக்கசப்புகள் தீர்ந்து ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். தந்தை, மகன் உறவுகளில் காரணமற்ற முன்கோபத்தால் பிரச்சினைகள் உருவாகலாம்.

## இடபம்

நீண்டகாலமாக வராத கடன் கொடுத்து இருந்த பணங்கள் மற்றும் பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கைக்கு வந்து சேரும். திருமண விசயங்கள் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளைச் சற்றுத் தள்ளிப்போடுவது நல்லதாகும். மற்றவர்களின் விசயங்களில் ஆதாயமில்லாமல் தலையிட்டு வீண்சிக்கலில் மாட்டிக் கொண்டு மனநிம்மதி இழக்கவேண்டாம். ரேஸ் லாட்டரி போன்றவற்றின் மூலமாக பணம் மற்றும் பொருட்களை ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் வந்துசேரும் காலமாகும். யாத்திரையின்போது சம்பந்தம் இல்லாத புதிய பெரிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்பட்டு அவர்களால் சில காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவீர்கள். விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான விளைச்சல் உண்டாகும்.

## விருச்சிகம்

உற்றார் மற்றும் உறவினர்களின் எதிர்பாராத திடீர் வரவுகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் ஆதாயங்கள் அடைவீர்கள். பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் சற்றுக்குறைந்து காணப்படுவதன் மூலம் நிம்மதி அடையலாம். நீண்டகாலமாக உத்தியோகம் இல்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய உத்தியோகம் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. குடும்பத்தில் வீணாக ஏற்பட்டுவந்த மருத்துவச் செலவுகள் குறைந்து காணப்படும். வேலையில்லாதவர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் வந்து சேரும். குடும்பத்தில் நடக்க இருக்கும் சுபகாரிய நிகழ்ச்சிகளைச் சற்று தள்ளிப்போடுவது சிறந்ததாகும். உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் இருந்து எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்க இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## மிதுனம்

குழந்தைகள் உயர்வான இடங்களில் கவனமுடன் ஏறி இறங்குவது நல்லது. அநாதைச் சிறுவர்களுக்கு உதவுவதிலும், பொது நலத் தொண்டுகளில் ஈடுபடுவதிலும் மிகுந்த கவனம் செலுத்துவீர்கள். அரசியல்வாதிகளுடன் எதிர்பாராத தொடர்புகள் ஏற்பட்டு அவர்களால் சிற்சில ஆதாயம் அடைவீர்கள். உத்தியோகத் துறையினர்கள் மேலதிகாரிகளுடன் மனக்கசப்புகள் ஏற்பட்டு பணி இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் முன்கோபத்தை தவிர்த்துப் பணியாற்றுதல் சிறந்ததாகும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் எதிர்பார்த்து இருந்த நபர்களின் ஆதரவுகள் கிடைக்கும். பழைய கடன்களை அடைத்துவிட்டுப் புதிய கடன்வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள்.

## தனுசு

கணவன், மனைவி உறவுகளில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது. வேண்டாத விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்காதிருங்கள். நண்பர்களால் வீண் பொருட்செலவுகள் வந்துசேரலாம். தந்தை வழியிலான சொத்துக்கள் கைவந்துசேர வாய்ப்பு உள்ளது. நாட்பட்ட பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். மாணவர்கள் கல்வியில் மிகுந்த கவனமுடன் பயின்றுவருதல் நல்லது. தீராத நோய்கள் தீருவதற்காக நீண்டதூர பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். வேலையாட்களால் சிற்சில மனநிம்மதி இன்மையும் பொருட்செலவுகளும் வந்துசேரும். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடரும் காலமாகும்.

## கடகம்

தாயின் உடல்நிலையில் இதுநாள் வரையில் இருந்துவந்துள்ள பாதிப்புகள் குறைந்து நிம்மதி அடைவீர்கள். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய தொழில் முயற்சிகளைச் செய்வதில் நல்ல பலன் அடைவீர்கள். பூர்வீகச் சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலையீட்டால் நல்லதொரு முடிவுக்குவரும். ஒரு சிலருக்கு தாய் வழியில் இருந்து சொத்துக்கள் கிடைக்கும். மற்றவர்களை நம்பி பணம் மற்றும் பொருட்களைக் கடன் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் செயற்படுவது நல்லது. பூர்வீகச் சொத்துக்களில் இருந்துவந்துள்ள பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் திரும்பக் கிடைக்கும்.

## மகரம்

தாயின் உடல்நிலையில் மிகக் கவனமுடன் இருப்பது நல்லது. அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் வீண் பிரச்சினைகள் வாராதிருப்பதால் எச்சரிக்கையுடன் பேசிப் பழகுதல் நல்லதாகும். குழந்தைகளின் மனமகிழ்ச்சிகளுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். உத்தியோகத் துறையினருக்கு இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உடல் நிலையில் கண், காதுகளில் மிகக் கவனமாக இருப்பது நல்லது. பிள்ளைகளின் உடல்நிலையில் கவனமுடன் இருப்பது நல்லது. செய்யாத குற்றங்களுக்கு அவப்பெயர் சேர வாய்ப்பு உள்ளதால் கவனமுடன் இருக்கவும். வீடு, வாகனங்களைப் பழுதுபார்ப்பதன்மூலம் பொருட்செலவுகள் வந்து சேரலாம். பிரிந்துபோன கணவன், மனைவி திரும்ப ஒன்றுசேருவார்கள்.

## சிங்கம்

மாணவர்கள் கல்வியில் மிகுந்த எச்சரிக்கையுடன் பயின்றுவருவது நல்லது. குலதெய்வ ஆலயங்களைத் திருத்திக் கட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய முறை விவசாயங்கள் மூலம் நல்ல இலாபம் அடைவார்கள். வீடு மாற்றம் செய்வதற்கான புதிய முயற்சிகளில் வங்கிகளின் ஆதரவுகள் கிடைக்கும். விளையாட்டுத்துறை சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுதல் கிடைக்கும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பெயர், புகழ் போன்றவை கிடைக்கும். தேவையற்ற புதிய நண்பர்களின் சேர்க்கையால் வீண் பிரச்சினைகள் வர இருப்பதால் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

## கும்பம்

காதல் விசயத்தில் நண்பர்களின் உதவியால் நல்ல தகவல்கள் வந்துசேரும். புதிய கடன்கள் கொடுப்பதைத் தவிர்த்தல் நல்லதாகும். வரவேண்டிய பணம் கிடைக்க இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். உடல்நிலையில் வாயு வாத சம்பந்தமான தொல்லைகள் வந்துபோகும். தந்தை, மகன் உறவுகளில் இருந்துவந்துள்ள மனக்கசப்புகள் குறைந்து ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். ரேஸ் லாட்டரி போன்ற திடீர் அதிர்ஷ்டம் மூலமாகப் பொருள் வந்துசேர வாய்ப்பு உள்ளது. புதிய வீடு, நிலம் போன்றவற்றை விலைக்கு வாங்கப்போட்ட திட்டம் நிறைவேறும் காலமாகும். வேலையில்லாதவர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளுக்காக பணம் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம்.

## கன்னி

குலதெய்வ ஆலய வழிபாடுகளுக்கான முயற்சிகளில் வெற்றிகிடைக்கும். திடீர் அதிர்ஷ்டம் மூலமாகப் பணம் வந்துசேரலாம். உடல்நிலையில் காய்ச்சல், சளி போன்ற தொல்லைகள் வந்துபோகும். நீண்டகாலமாகத் திருமணம் ஆகாதவர்களுக்கு உறவினர்களின் ஆதரவுகளால் திருமணம் நடைபெறும். சமுதாய வளர்ச்சிகளுக்கான விசயங்களில் ஈடுபட்டு மனமகிழ்ச்சியும் பரிசு மற்றும் பாராட்டுகளையும் பெறுவீர்கள். விபரீதமான எண்ணங்களால் வீண் பழிச்சொல்லுக்கு ஆளாகநேரிடலாம். விளையாட்டுத் துறைகளைச் சார்ந்தவர்களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுதல்கள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. நாட்பட்ட பழைய கடன்கள் அடைபடும். பழைய வீடு மற்றும் வாகனங்களை விற்று புதிய வீடு, வாகனம் வாங்குவதற்காக முயற்சிப்பீர்கள்.

## மீனம்

நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். மனைவி வழியிலான சொந்தபந்தங்களுடன் சிற்சில கருத்து வேறுபாடுகள் வந்துபோகலாம். புதிய ஆடை மற்றும் ஆபரணங்களை வாங்குவீர்கள். பிரிந்துபோன கணவன், மனைவி திரும்ப ஒன்று சேருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. பூர்வீகச் சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் சம்பந்தம் இல்லாத நபர்களின் ஆதரவுகளால் சாதகமான தீர்ப்புகள் கிடைக்கும். நாட்பட்ட தீராத நோய்கள் தீருவதற்காக புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவதன்மூலம் நோய் தீரும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

# மாகாணசபைத் தேர்தல் 2013



"அபிவிருத்தி
சுதந்திரம்
ஜனநாயக உரிமை
என்பவற்றுக்காக
உழைக்கும்..."

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர்கள்

## வவுனியா மாவட்டம்

ஆண்டுகள் பலவாக மக்களுக்கான பணிகள் செய்து
உங்களுடன் இணைந்திருக்கும்...

**சிவன் சிவகுமார் (ரகு)**
வவுனியா மாவட்ட அமைப்பாளர்

9



## மன்னார் மாவட்டம்

மன்னாரில் மக்களுக்கான பணிகள் ஆற்றி
அனைத்து மக்களின் மனங்களிலும் நிறைந்திருக்கும்...

**செபமாலை திஸவீரசிங்கம்
(லிங்கேஸ்)**
மன்னார் மாவட்ட அமைப்பாளர்

7



## முல்லைத்தீவு மாவட்டம்

துயர் தோய்ந்த முல்லை மண்ணை
வளம்கொழிக்கும் தேசமாக்க
துணிச்சலும் ஆற்றலும் நிரம்பிய...

**அந்தோனிப்பிள்ளை ஜெயராஜ்
(கிருபன்)**
முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர்

2



**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி**